
வெகுஜன அரசியல் மாத இதழ்
Registered as a News Paper in Sri Lanka
முரசம் 02
முழக்கம் 03
விலை ரூபா.30
யூன் 2013

# புதிய நீதி

පුදිය නීදි
PUTHIYA NEETHI




தற்கொலைகளுக்குப் பின்னால்...






சாவெஸ் என்ற மானுடன், மக்கள் போற்றும் மாவீரன்

## அநீதியான மின்கட்டண உயர்வை வாபஸ் பெறு!




அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும் அன்றாடப் பாவனைப் பொருட்களுக்கும் தொடர்ந்து விலைகளை அதிகரிக்கச் செய்து மக்களின் வயிறுகளில் அடித்து வரும் அரசாங்கம் இப்போது மின்சாரக் கட்டணத்தை அதிக அளவிற்கு உயர்த்தியதன் மூலம் மக்களின் தலைகளில் ஓங்கி அடித்துள்ளது. இவ் அநீதியான மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிராக எழுந்துள்ள மக்களின் எதிர்ப்பு முற்றிலும் நியாயமானதாகும். தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் முன்னெடுத்து வரும் மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு இயக்கத்தில் எமது புதிய – ஜனநாயக மாக்சிச- லெனினிசக் கட்சி இணைந்து நிற்கிறது. தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுத்து வரும் மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிரான வேலை நிறுத்தம் மற்றும் எதிர்ப்பு இயக்கங்களுக்கு எமது கட்சி தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்து அவற்றில் பங்கும் கொள்கிறது.

இவ்வாறு புதிய – ஜனநாயக மாக்சிச – லெனினிசக் கட்சியின் அரசியல் குழு வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவித்துள்ளாது.

மேலும் அவ்வறிக்கையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கடந்த எட்டு ஆண்டுகளில் தன்னைத் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களுக்குச் சார்பான அரசாங்கம் என்றே கூறி வருகிறது. அதற்குச் சப்பைக் கட்டும் வகையில் சில தொழிற்சங்கத் தலைவர்களையும் தொழிற்சங்கப் பெயர்களையும் பயன்படுத்தி அவ் வப்போது வேடிக்கை தரும் ஆர்ப்பாட்டங்களை கூலி கொடுத்தும் நடாத்தி வருகிறது. ஆனால் நாட்டின் ஏகப் பெரும் பான்மையான உழைக்கும் மக்களின் தலைகள் மீது தொடர்ந்தும் விலை உயர்வு கட்டண அதிகரிப்புச் சுமைகளை ஏற்றி மக்களின் அன்றாட வாழ்க்கையை நிலைகுலைய வைத்து வருகிறது. அந்தவகையில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி மக்களை இருட்டில் தள்ளி உள்ளது. இலங்கை மின்சார சபைக்கு குறுகிய காலக் கடனாக பதின்மூவாயிரத்து எழுநூறு கோடி ரூபா (137 பில்லியன் ரூபா) இருந்து வருகிறது. அதேவேளை நீண்டகாலக் கடனாக 2012ம் ஆண்டு முடிவில் இருபத்தியொன்பதினா யிரத்து அறுநூறு கோடி, ரூபா (296 பில்லியன் ரூபா) இருந்து வருகிறது. இவற்றுடன் மின்சாரத்திற்கான உற்பத்திச் செலவையும் சேர்த்தே மக்களின் மீது தாங்க முடியாத கட்டண உயர்வை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது. மின்சார உற்பத்திக்கு அதிகளவிற்கு எண்ணெய் பயன்படுத்தப்படுவதும், நீர் மின்சார உற்பத்தி உட்பட ஏனைய வழிமுறைகள் கவனிக்கப்படாது விடப்படுவதுமே உற்பத்திச் செலவு அதிகம் எனக் கூறப்படுவதற்குரிய காரணமாகும். அத்துடன் மின்சார உற்பத்திக் கம்பனிகளின் அதிகலாபத்திற்கான அழுத்தங்களும் கட்டண அதிகரிப்பில் தாக்கம் செலுத்துகின்றன. மக்களதும், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகளின் கடும் எதிர்ப்பைச் சமாளிக்கும் வகையில் ஜனாதிபதி தலையிட்டு பதினொரு லட்சம் வீட்டுப் பாவனையாளருக்கு சலுகைக் கட்டணக் குறைப்புச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இது வழமையான ஏமாற்று நடவடிக்கைகளில் ஒன்றேயாகும். ஒன்றைக் குறைத்து மற்றதில் கூட்டிக் கொள்ளும் வழிமுறையே பின்பற்றப்பட்டுள்ளது. இவை வெறும் கண்துடைப்பு நடவடிக்கைகளேயாகும். எனவே தற்போதைய மின் கட்டண உயர்வு கைவிடப்படுதல் வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும். தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் மக்கள் சார்பு பொது அமைப்புகளின் கலந்தாலோசனைகளுடன் மின்சாரக் கட்டண உயர்வு மறுவரையறை செய்யப்பட வேண்டும் என்பதே நியாயமான வழிமுறையாகும். அதேவேளை பெரும் கம்பனிகள், அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வணக்கத்தலங்கள் போன்றவற்றுக்கான மின்சார சலுகைக் கட்டணங்கள் மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவது அவசியமாகும். எல்லாவற்றையும் சேர்த்து தாங்கமுடியாத கட்டணத்தை மக்கள் மீது சுமத்துவதை உடன் நிறுத்த வேண்டு என்பதே எமது கட்சியின் கோரிக்கையாகும்.

# 13வது திருத்தம் அகற்றப்படுமா?

## உச்சமடையும் பேரினவாதக் கூச்சல்

அரசியலமைப்பில் இருந்து வரும் 13வது திருத்தத்திற்கும் நடைபெற இருப்பதாகக் கூறப்படும் வடமாகாண சபைத் தேர்தலுக்கும் எதிராகத் தெற்கே பேரினவாதிகளின் கூச்சல் உச்சமடைந்துள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து வரும் பேரினவாதிகளும் ஏனைய பௌத்த அமைப்புகளுமே இப்போது போர்க் கொடி தூக்கி நிற்கின்றன. இவற்றுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் அவரது சகோதரர்களும் பச்சைக் கொடி காட்டி வருகிறார்கள். அத்துடன் பதின்மூன்றாவது திருத்தத்தை அகற்றாமல் அதில் உள்ளவற்றில் சிலவற்றை எடுத்து சிலதைப் புகுத்திக் கொண்டால் போதும் என்ற நிலைப்பாட்டை ஜனாதிபதியானவர் கொண்டிருக்கிறார். இவ்விடயத்தில் இந்தியாவையும் அமெரிக்க மேற்குலக நாடுகளையும் கவனத்தில் வைத்தே தனது காய்களை நகர்த்தி வருகிறார்.

அன்று இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை யுத்தத்திற்குள் பிரவேசித்த சூழலில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதே அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தமாகும். தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவே மேற்படி திருத்தம் அரசியலமைப்பில் புகுத்தப்பட்டது. ஆனால் தெற்கே ஜே.வி.பி.யும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், யூ.என். பிக்குள் ஒரு பிரிவினரும் இதனை எதிர்த்தனர். அதே போன்று வடக்கே புலிகள் இயக்கம் கடுமையாக எதிர்த்தது. அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணி விழுங்கவும் முடியாது கக்கவும் முடியாது திண்டாடியது

எவ்வளவு எதிர்ப்பு இருந்த போதிலும் ஜே.ஆர்.

பக்.02>>

## பொருட்களின் விலைகள் ஒருபுறம் மின் கட்டண உயர்வு மறுபுறம் தாங்கமுடியாது மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



# மலையகத் தோட்டங்களில் நிலப் பறிப்பு

## பகிர்ந்து வழங்கப் போவது யாருக்கு !

மலையகத்தில் பயன்படுத்தாத நிலையில் இருந்து வரும் தோட்ட நிலங்களில் இருபத்தையாயிரம் ஏக்கர் நிலத்தை எடுத்து அவற்றை இரண்டு ஏக்கர் கணக்கில் வேலையற்ற இளைஞர்களுக்கு பகிர்ந்து அளிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அந்நிலங்களில் விவசாயம் செய்ய அவ் இளைஞர்களுக்கு கடன் உதவி செய்ய நூறு மில்லியன் ரூபாவை ஒதுக்கத்திறைசேரி முன் வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இத்திட்டத்தின்படி இருபத்தையாயிரம் ஏக்கர் நிலம் பன்னீராயிரத்து ஐநூறு இளைஞர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட இருக்கிறது. இங்கே எழுகின்ற கேள்வி என்னவெனில் இவ்வாறான நிலம் கடன் வழங்கலில் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலான வேலையற்ற தமிழ் இளைஞர்கள் உள்வாங்கப்படுகிறார்களா அல்லது புறக்கணிக்கப்படுகிறார்களா என்பதேயாகும்.

மலையக மண்ணிலே கடந்த சுமார் இருநூறு வருடங்களாகக் கடும் உழைப்பைக் கொடுக்கும் மக்களாக வாழ்ந்து வந்திருப்பவர்கள் இந்திய வம்சாவழித் தமிழ் மக்கள். அத்தகைய மக்கள் தமது வாழ்வால் உழைப்பால் உதிரம் வியர்வை சொரிந்து உருவாக்கியதே மலையகமாகும். எனவே அவர்கள் இன்று அவர்களது தனித்துவங்களுக்கு ஏற்ப ஒரு தேசிய இனமாக மலையகத் தமிழ்த் தேசிய இனமாக வளர்ச்சி பெற்றுள்ளனர். இதனை உள்வாங்கிக் கொள்ள சிங்கள பௌத்த பேரினவாதிகள் மட்டுமன்றி தமிழ்க் குறுந்தேசியவாதிகளும் மறுத்தே வருகிறார்கள். இதன் அடிப்படையிலே பேரினவாத ஆட்சியாளர்கள் மலையக மக்களைப் புறந்தள்ளி அவர்களது உரிமைகளை மறுத்தும் வந்துள்ளனர்.


அந்தவகையிலே காலத்திற்குக் காலம் தோட்ட நிலங்களை சுவீகரித்து அவற்றில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நடாத்தி வந்துள்ளனர். அவ்வாறானதோர் முயற்சியாகவே தற்போது இருப்பத்தையாயிரம் ஏக்கர் நிலத்தை அரசாங்கம் பொறுப்பேற்று வேலையற்ற இளைஞர்களுக்கு வழங்கப்போவதாக அறிவித்துள்ளது. இங்கே நாம் வற்புறுத்துவது அவ்வாறான நிலப்பகிர்வில் வேலையற்றிருக்கும் மலையகத் தமிழ் இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

பக்.02>>

# சீனக் காய்ச்சல் வாந்தியால் அவதியுறும் தமிழ்த் தலைவர்கள்



தமிழ்த் தலைவர்கள் என்று கூறப்படுவோருக்கு இன்னமும் சீனக் காய்ச்சலும் வாந்தியும் மாறவில்லை. அது எப்போது பிடித்தது என்றால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தலைர் மாஓசேதுங் தலைமையில் 1949ல் சீன நாடும் மக்களும் விடுதலை பெற்று சோசலிச நாடாகிய காலத்திலிருந்தேயா கும். அன்று தொடங்கிய சீனக் காய்ச்சலும் வாந்தியெடுப்பும் இன்னும் நிற்கவில்லை. அதன் அடிப்படை சோசலிச விரோதமும் பிரித்தானிய அமெரிக்க இந்திய விசுவாசமும் ஆகும். அண்மைய காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் எனக் கூறிக் கொள்ளும் சம்மந்தன், மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் சீன எதிர்ப்பை ஊதிப் பெருப்பித்து வருகிறார்கள். கொழும்பு யாழ்ப்பாண அதிவேகப் பாதையைச் சீனா போடப் போகிறது என அழுது புலம்பி அது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் குரல் வைத்துள்ளார் சுரேஸ் பிரேமச்சந்திரன். இந்தியாவின் தலைவர்கள் ராணுவ உயர் அதிகாரிக ளுக்கு இல்லாத அக்கறை இந்த இந்திய விசுவாசிக்கு இருப்பதில் தவறு இருக்கமுடியாது தான். அது மட்டுமல்ல திருகோணமலையில் சம்பூரில் அறுநூறு ஏக்கர் நிலத்தில் இந்திய அனல் மின் நிலையம் கட்டப்பட ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி அந்தச் சம்பூரின் பூர்வீக மக்களான தமிழ் விவசாயிகளும் மீனவர்களும் ஏனைய மக்களும் துரத்தப்பட்டு இன்று அகதி முகாம்களில் வாழ்ந்து வருவது பற்றி சம்மந்தனும் சுரேசும் ஏன் பேசவில்லை? சம்பூரில் இந்தியா கால் பதிப்பது எதற்காக வென்று சொல்வார்களா? இறுதி யுத்தத்தின் போது நாற்பதினாயிரம் மக்கள் கொல்லப்படவும் பல ஆயிரம் பேர் படுகாயங்கள் படவும் லட்சம் பேர் அகதிகளாகச் செல்லவும் இந்தியா வகித்த பங்களிப்பும் பற்றித் தமிழ் மக்களுக்கு இந்தக் கனவான்கள் என்ன கூறுவார்கள். இன்றைய வடக்குக் கிழக்கு நிலப்பறிப்பிலும் குறிப்பாக வலிவடக்கு நிலப்பறிப்பிலும் இந்தியா திரைமறைவில் இருப்பது பற்றி அல்லது மௌனம் சாதிப்பது பற்றி இந்த இந்திய விசுவாசிகள் என்ன கூறுகிறார்கள்? சீனா மட்டுமன்றி இந்திய, அமெரிக்க மேற்குலக நாடுகள் எதுவும் நமது நாட்டிற்கும் எமது மண்ணுக்கும் வேண்டாம் என்று கூறினால் அதில் ஒரு அரசியல் நேர்மை உண்டு. சீனா மட்டும் வேண்டாம் ஏனையவர்கள் இங்கு வருவது பற்றி ஆட்சேபனை இல்லை. அவர்களுக்கு வாழை தோரணம் கட்டிக் கும்பம் வைத்து வரவேற்கிறோம் என்று கூறுவதே இடக்குமுடக்கான தமிழ்த் தலைமை நியாயம் என்றால் தமிழ் மக்கள் எவ்வாறு இவர்களை நோக்குவது? சீனா இன்று சோசலிசப் பாதையில் இல்லை. அது முதலாளித்துவப் பாதையில் பயணிக்கிறது. அது தனது சொந்த நலன்களை முதன்மைப்படுத்தியே நிற்கிறது. இந்நிலையில் இந்தியா இங்கு எது செய்தாலும் சரி அமெரிக்கா முன்னெடுப்பவை எல்லாம் ஜனநாயகம், மேற்குலகம் வந்தால் எமக்குப் பாதுகாப்பு என்றவாறு கிணற்றுத்தவளை அரசியல் பேசும் தமிழ்த் தலைமைகள் இன்னமும் , மாக்சிச — கம்யூனிச — சோசலிச விரோதத்திலேயே நீந்தி வருகின்றன. அத்தகையவர்களுக்கு அன்று பிடித்த சீன சோசலிசக் விரோதக் காய்ச்சலும் வாந்தியும் இன்னமும் நின்றபாடில்லை. இந்திய அமெரிக்க மேற்குலக அடிமை விசுவாசிகளால் வேறு எதைத்தான் பேசமுடியும்?



## தோழர் சுகேசனன் தொடர்ந்து புனர்வாழ்வு முகாமில்



புதிய – ஜனநாயக மாக்சிச – லெனினிசக் கட்சியின் முன்னிலைத் தோழர் எஸ்.சுகேசனன் கடந்த செப்ரம்பர் மாதத்தில் இருந்து வவுனியா செட்டிக்குளம் புனர்வாழ்வு முகாமில் இருந்து வந்தார். இப்போது அவர் வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமிற்கு மாற்றப்பட்டுள்ளார். அவருக்கு நீதிமன்றம் ஒரு வருடப் புனர்வாழ்வுக்கே அனுப்பிவைத்தது. அதன்படி எதிர்வரும் செப்ரம்பர் வரை புனர்வாழ்வு முகாமிலேயே அவர் இருக்க வேண்டும். அவருடன் முன்பு கைது செய்யப்பட்ட ஏனைய நான்கு தோழர்கள் மூன்று வருடங்களுக்குப் பின்பு விடுவிக்கப்பட்டனர். அதேபோன்று வவுனியாவில் ஒரு தோழர் இரண்டு வருட விளக்கமறியலின் பின்பு விடுவிக்கப்பட்டார். எஞ்சி இருப்பவர் தோழர் சுகேசனன் மட்டுமேயாவார். அவரது வரவிற்காய் மக்களும் தோழர்களும் கட்சியும் தோழமை மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கின்றனர். அவரது அன்புத் தாயாரும் சகோதரர்களும் உறவினர்களும் பாசத்துடன் காத்து நிற்கின்றனர். ஒவ்வொரு தீய விடயத்தையும் நல்ல விடயமாக மாற்றுவதில் கம்யூனிஸ்டுக்கள் வல்லவர்கள்.

## பு.ஜ.மா.லெ. கட்சியின் மூன்று இடங்களிலான புரட்சிகர மேதினக் கூட்டங்களும் பேரணிகளும்

புதிய- ஜனநாயக மாக்சிச- லெனினிசக் கட்சியின் 2013 மேதினம் அட்டன் வவுனியா யாழ்ப்பாணம் ஆகிய மூன்று பிரதேசங்களில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர உணர்வோடு நினைவுகூரப்பட்டது. தொழிலாளி வர்க்கத்தினதும் அனைத்து உழைக்கும் வர்க்கங்களின் வர்க்க உணர்வை வெளிப்படுத்தும் வகையில் மேற்படி மூன்று மேதினக் கூட்டங்களும் பேரணிகளும் இடம்பெற்றன. அவற்றின் போது இன்றைய பாசிச சர்வாதிகாரத்தை முன்னெடுத்து வரும் ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சியில் உழைக்கும் வர்க்கம் அனுபவிக்கும் பொருளாதார நெருக்கடித் துயரங்கள் வெளிப்படுத்தப்பட்டன. அதேபோன்று இவ் ஆட்சியின் கீழ் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமையும் யுத்தத்தின் வெற்றியுடன் பேரினவாத ஒடுக்குமுறை புதிய வகையில் முன்னெடுக்கப்பட்டு வருவது பற்றியும் அம்பலப்படுத்தப்பட்டது. மேலும் மலையக மக்கள் இனம் வர்க்கம் என்ற இரு தளங்களில் ஒடுக்கப்பட்டு சுரண்டப்பட்டு வருவது வெளிப்படுத்தப்பட்டு கண்டனத்துடன் கூடிய எதிர்ப்பு முன்வைக்கப்பட்டது.

மேதினம் வெறும் விழா நிகழ்வு நாள் அல்ல. அதனைச் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத் தினமாக மூன்றாவது அகிலமும் மாமேதை ஏங்கல்ஸ்சும் பிரகடனப்படுத்திய போது அதன் புரட்சிகர குணாம்சம் எத்தகையது என்பதும் தொழிலாளி, வர்க்கத்திற்கும் உழைக்கும் மக்களுக்கும் உணர்த்தப்பட்டது. அதன் வழியிலேயே எமது புதிய-ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சி கடந்த 35 ஆண்டுகளில் யுத்தம், அடக்குமுறைகள், சவால்கள், எதிர்ப்புக்கள், ஜனநாயக மறுப்புக்கள், அராஜகங்கள் மத்தியிலும் இச் சர்வதேசப் புரட்சிகரத் தினமான மேதினத்தை மாக்சிச லெனினிச மாஓ சேதுங் சிந்தனை வழி நின்று வர்க்க உணர்வோடு நினைவுபடுத்திய கூட்டங்கள் பேரணிகள் என்பவற்றுடன் முன்னெடுத்து வந்துள்ளது. அந்தவகையில் கடந்த மே முதலாம் திகதி அன்று அட்டன் வவுனியா யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் கட்சியின் தலைமைத் தோழர்களும் பிராந்திய தலைமைத் தோழர்களும் தொழிற்சங்க பொது அமைப்புகளின் தலைவர்களும் கலந்து கொண்ட அதேவேளை பெருமள விற்கு தொழிலாளர்கள் விவசாயிகள் இளைஞர் யுவதிகள் பெண்கள் பெரும் தொகையில் கலந்து கொண்ட புரட்சிகர மேதினங்களாகக் காட்சி தந்தன. இம் மேதினத்தையொட்டி மூன்று பிரதேசங்களிலும் மேதின நிதியாக பொது இடங்கள், கிராமங்கள், தோட்டங்கள், நகரங்களில் கட்சித் தோழர்கள் கணிசமான நிதி திரட்டினர். அவ்வேளைகளில் மேதினத்தையொட்டி வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மக்களிடையே விநியோகிக்கப்பட்டு அவர்களது அபிப்பிராயங்களும் பெறப்பட்டன. அவ்வேளைகளில் மக்கள் தாம் அனுபவிக்கும் பல்முனைப் பிரச்சினைகள் அடக்குமுறைகள் பற்றிய பயனுள்ள தகவல்களையும் கருத்துக்களையும் நமது தோழர்களுக்கு வழங்கினர். எனவே இவ்வாண்டு மேதினத்திற்கு கட்சி எடுத்துக் கொண்ட முடிவும் முயற்சியும் புரட்சிகரமானதாகவும் பயன் உள்ளதாகவும் கட்சிக்குப் மக்களுக்கும் நம்பிக்கை அளிப்பதாகவும் அமைந்து கொண்டன.

1>> 13 திருத்தம் பதின்மூன்றாவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டிய அளவுக்கு இந்தியா அழுத்தம் கொடுத்திருந்தமையை மறுக்க முடியாது. பதின்மூன்றாவது திருத்தம் அரசியலமைப்பில் இடம் பெற்றிருந்தாலும் அதனை உள்வாங்கி ஜீரணிக்க முடியாத பேரினவாதிகள் அவ்வப்போது அதில் உள்ள சரத்துக்களுக்கு எதிராகச் சட்ட ரீதியிலும் பிரசாரரீதியிலும் செயல்பட்டே வந்தனர். ஒரு மாகாணசபையின் முதல் அமைச்சரின் ஒப்புதல் இன்றி ஆளுனர் சபையைக் கலைக்க முடியாது என்றிருந்த சரத்தினை அன்றைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா நீக்க முன்மொழிந்தார். அதனைப் பாராளுமன்றம் மூலம் நிறைவேற்றினார். புலிகள் இயக்கம் அன்று பாராளுமன்றத்தில் தமது சொற்கேள் பிரதிநிதிகளாக வைத்திருந்த ஈரோஸ் உறுப்பினர்களை கை உயர்த்த வைத்து பிரேமதாசாவின் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டனர். அதேபோன்று பத்தொன்பது வருடங்களுக்குப் பின்பு 2006 அக்ரோபரில் ஜே.வி.பி. தொடுத்த வழக்கின் மூலம் வடக்குக் கிழக்கின் இணைப்பை உயர் நீதிமன்றம் தனித்தனி மாகாணசபைகளாக இயங்கத் தீர்ப்பு வழங்கியது. அண்மையில் மாகாணசபைகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த சுமார் பதினைந்து விடயங்கள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கொண்டு வந்து நிறைவேற்றிய திவிநெகும சட்டமூலத்தின் ஊடே பறிக்கப்பட்டது: இப்பொழுது வெறும் மாகாணசபை என்ற கோதே இருந்து வருகிறது. அதனிடம் எழுத்தில் எஞ்சியிருப்பது மாகாணங்களுக்கான பொலீஸ் அதிகாரம், காணி அதிகாரம் எனப்படுபவை மட்டு மேயாகும். இதுவரை அவை எந்தவொரு மாகாண சபையிலும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையிலேயே யுத்தம் முடிந்து நான்கு வருடங்கள் கழிந்த நிலையில் முதல் மாகாணசபை கலைக்கப்பட்டு 22 வருடங்களுக்குப் பின்பு வடக்கில் மாகாணசபைக்குத் தேர்தல் நடாத்தப்படுகிறது. அதனைக் கூட ஜனாதிபதியும் அரசாங்கமும் விரும்பி நடாத்தவில்லை. வெளிநாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை போன்றவற்றின் அழுத்தம் காரணமாகவே வடக்கில் தேர்தல் நடாத்தப்படுவதற்கு ஜனாதிபதி முடிவு செய்து கொண்டார். அதிலும் சந்தேகமே நிலவுகிறது. அவ்வாறு எதிர்வரும் செப்ரம்பரில் வடமாகாசபைத் தேர்தல் இடம் பெறுமானால் அதற்கு முன்பாக பதின்மூன்றாவது திருத்தத்தில் எஞ்சியுள்ள மூன்று விடையங்களில் கைவைத்து அவற்றை பலவீனப்படுத்தவே ஜனாதிபதி முன்வந்துள்ளார். 1.இரண்டு மாகாணசபைகள் தங்களுக்குள் இணங்கினால் ஒரே சபையாக இயங்க முடியும் 2. மாகாண சபைகளுக்குரிய காணி அதிகாரம் 3. பொலிஸ் அதிகாரம் ஆகிய சரத்துக்களை அகற்றி தமக்குரியவற்றைப் புகுத்துவதற்கு ஜனாதிபதி தயாராகி வருகிறார். அதன் முன்னோடி நடவடிக்கைகளாகவே அமைச்சர் சம்பிக்க ரணவக்கவையும் அமைச்சர் விமல் வீரவன்சவையும் தட்டிக் கொடுத்து சைகை காட்டிக் கொண்டார். அதன் பின் சொல்லவா வேண்டும் அவ்விருவருக்கும். திருமண வீட்டில் அழுகிறவன் மரணவீட்டில் சும்மாவா இருப்பான்' என்பதற்கிணங்க எல்லாப் பேரினவாதிகளுமே கச்சைகளை இறுக்கிக் கொண்டு களத்தில் இறங்கியுள்ளனர். பதின்மூன்றையும் அகற்றுவோம் வடமாகாண சபைத் தேர்தலையும் நடக்கவிடமாட்டோம் ஒருகை பார்ப்போம் என்றவாறே தெற்கின் பேரினவாதிகள் களம் இறங்கி நிற்கிறார்கள்.

இவ்வாறான நிலை இலங்கையில் புதிய விடயமல்ல. அன்று செல்வநாயகம் பண்டாரநாயக்க இடையேயான ஒப்பந்தத்தை ஜே.ஆர். தலைமை தாங்க பேரினவாதிகள் அணி சேர்ந்து கிழித்தெறிய வைத்தனர். அதன் பின் டட்லி செல்வநாயகம் ஒப்பந்தம் வந்தபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பேரினவாதிகளும் திரண்டு எதிர்த்து அதனைக் கைவிடச் செய்தனர். 1995 சந்திரிகா கொண்டு வந்த அரசியலமைப்புத் திருத்தமும் ஐக்கிய தேசியக் கட்சியால் பாராளுமன்றத்தில் வைத்து எரிக்கப்பட்டது. அவை நடைமுறை வடிவம் பெறுமுன்னரே பேரினவாதிகளால் கைவிடச் செய்யப்பட்டன. ஆனால் நடைமுறையில் சட்ட ரீதியாகப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அரசியலமைப்பில் இருந்து வருகின்ற 13வது திருத்தத்தைத் திருத்து அல்லது அகற்று எனச் சிங்கள பௌத்த பேரினவாதிகள் கூச்சலிட்டு நிற்கிறார்கள். அவ்வாறெனில் இலங்கையின் சிங்கள பௌத்த பேரினவாதிகள் பின்னோக்கிச் செல்ல நிற்கிறார்களே தவிர முன்னோக்கி இலங்கையை எடுத்துச் செல்லத் தயாரில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு பேரினவாதிகள் கூச்சலிடுவதற்கு மேற்படி 13வது திருத்தமும் மாகாணசபையும் தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்க இயலாத வெறும் பெயர்ப் பலகையேயாகும். அதற்குள் அதிகாரப் பகிர்வும் இல்லை அரசியல் தீர்வும் இல்லை. எனவே ஒரு பெயருக்குத்தானும் ஜனநாயகம் இருக்கக்கூடாது என்பதே பேரினவாதிகளது நிலைப்பாடாகும்.

நாட்டின் தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்களின் தனித்துவம் தன்னடையாளங்கள் அடிப்படை வாழ்வுரிமைகளைச் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஏற்றுக் கொள்வது பேரினவாத நிலைப்பாட்டினால் மறுக்கப்படுகிறது. அதேவேளை இத் தேசிய இனங்கள் மீது இன ஒடுக்குமுறை உள்ளாகவும் வெளியாகவும் நின்று ஏவப்பட்டே வருகின்றது. இவ்வாறான போக்கினைக் கடந்த நூற்றாண்டு முழுவதும் வரலாற்றின் வாயிலாகக் காண முடிந்தது. இவற்றை அறிவுபூர்வமாகவும் விழிப்புணர்வு அடிப்படையிலும் தெற்கின் சிங்கள உழைக்கும் மக்கள் விளங்கிக் கொள்ளல் அவசியம். ஒரு தேசிய இனத்தை அடக்கி ஆளும் மற்றொரு தேசிய இனம் ஒருபோதும் சுதந்திரமாக இருக்கவோ வாழவே முடியாது என்பதே உண்மையாகும். இந்நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களும் தேசிய இனப்பிரச்சினை தோற்றுவித்த மோசமான விளைவுகள் பற்றி அரசியல் ரீதியில் விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

பேரினவாதத்தையும் அதனை எதிர்ப்பதாகக் கூறும் குறுந் தமிழ்த் தேசியவாதத்தையும் முறியடிக்காமல் நாட்டையும் மக்களையும் சுபீட்சமான பாதைக்கு இட்டுச் செல்ல முடியாது. எனவே உழைக்கும் வர்க்க சக்திகள் தாம் யாரால் பிளவுபடுத் தப்பட்டு யாருக்கு எதிராக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்து அரசியல் விழிப்புணர்வுடன் செயல்படு வதற்கு முன்வரல் வேண்டும். அதற்குரிய காலமாகவே இன்றைய சூழல் காணப்படுகிறது.

# வலிவடக்கிலும் சம்பூரிலும் நிலப்பறிப்பு

## திரைமறைவில் இந்தியா?

வடக்கு – கிழக்கு ஆகிய இரு பகுதிகளிலும் மக்கள் இருப்பிட மற்ற அனாதைகள் ஆக்கப்பட்டு நடுத்தெருவில் விடப்பட்ட நிலை யில் உள்ளனர். இந்த வகையில் இயற்கை வளங்கள் தொட்டு வளமான மீன்பிடி கரையோரங்கள் வருவாய்தரும் விவசாய நிலங்களை இழந்து வடக்கு கிழக்குப் பகுதிகளில் மக்கள் ஏதிலிகளாக்கப்பட்டுள்ளனர். அந்த அடிப்படையில் வடக்கில் வலிகாம மண் இன்னும் மக்களிடம் மீள ஒப்படைக்கப்படாமல் இந்திய பெருவல்லரசும் இலங்கை இராணுவமும் தொடர்ந்து மக்களை ஏமாற்றி வருகின்றனர். இது வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ச்சியாக நடந்தேறிக் கொண்டிருக் கின்றன இவ்விடயத்தில் இலங்கை பேரினவாத நிகழ்சி நிரலின் பின்னால் இந்திய முதலாளித்துவ வல்லரசின் பொருளாதார இராணுவ நலன்களே முன்னிற்பது குறிப்பிட த்தக்கதாகும்.

வலிவடக்கில் 24 கிராம சேவையாளர் பிரிவுகள் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. 1990 களில் இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் முழுமையாக வலிவடக்கில் மீள் குடியமர்த்தப்படவில்லை. யுத்தம் முடிவுற்று நான்கு வருடங்களாகியும் இம் மக்கள் இன்னும் தமது சொந்த மண்ணில் மீள் குடியமர்த்தப்பட வில்லை. அதன் பின்னால் உள்ள விடயங்களை மக்கள் நன்கு ஆராய்தல் வேண்டும். அந்த அடிப்படையில் வலிவடக்கில் புதிதாகக் காணிகளை சுவீகரிக்க வேண்டிய தேவை இல்லை. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமான நிலையப் புணரமைப்பு வவுனியா - காங்கேசன்துறை புகையிரதப் பாதை அமைத்தல் ஆகிய யாவும் இந்திய வல்லரசின் பொருளாதார இராணுவ நலன்களுக்காகவே செய்யப்படுகின்றன. வடக்கு கிழக்கின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் இந்தியாவின் பிடிக்குள் தான் இருக்கின்றன. இவற்றைத் தட்டிக் கேட்க முயலும் சக்திகளை மிரட்டும் தொனியில் இந்தியா கதைத்து வருகின்றது. இந்திய மீன்பிடி அத்துமீறல் பற்றிக் கதைத்தால் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க உரிமையுண்டென இந்திய முதலாளித்துவ அதிகார சக்திகள் சண்டித்தனம் செய்கின்றனர். இந்திய துணைத் தூதுவரே நமது நாட்டு நீதித்துறையில் தலையிட்டு கைது செய்யப்பட்ட மீனவரை விடுவிக்கின்றார். இங்கே மீன பிடிக்க வரும் தொழிலாளிகள் அப்பாவிகள். ஆனால் தொழி லாளர் வேறு அதிகாரத் தொனியுடைய அமைச்சர் வேறு என்பது இங்கு வேறுபடுத்திப் பார்க்கப்படல் வேண்டும். இது போன்று கிழக்கிலும் நிலஅபகரிப்பு இந்திய நலனுக்காக அபகரிக்கப்பட்டுள்ளது. திருகோணமலையின் சம்பூர் நிலப்ப குதியில் அம்மக்களை விரட்டியடித்து விட்டு இந்தியா அனல் மின் நிலையமொன்றை அமைத்து வருகின்றது. அவ் வலய த்தை இலங்கை அரசு உயர் பாதுகாப்பு வலயமாக்கி யாரும் அங்கு செல்ல முடியாத படி காவல் காத்து நிற்கின்றது. இச் சம்பூர் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் 14 குளங்கள் 273 ஏக்கர் வயல் காணிகள் 146 ஏக்கர் குடியிருப்பு காணிகள் 120 ஏக்கர் தோட்டக் காணி 21, மீன்பிடித் தளங்கள் 08 செங்கற்சூ ளைலைகள் 01 வைத்தியசாலை 01 கோவில் 01 பாலர் பாட சாலை என்பன அடங்கி நிற்கின்றது. இந்த இடத்தில் இருந்து விரட்டிய டிக்கப்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

அங்கிருந்து வெளியேறிய ரவீந்திரன் (வயது 46) சம்பூரின் ஐந்தாம் வட்டாரத்தைச் சார்ந்தவர். இவருக்கு மூன்று பெண் பிள்ளைகளும், ஒரு மகனும் உள்ளனர். இவருக்கு சம்பூரில் 12, ஏக்கர் குடியிருப்புக் காணி இருப்பதுடன், வயல் நிலங்களும், பசு மாடுகளும் இருந்தன. இன்று கட்டைப்பறிச்சான் முகாமில் சாப்பாடு சமைத்து அவற்றை கிராமங்களில் ஊர் ஊராகச் சென்று விற்றுத் தான் வாழ்க்கை நடாத்துகின்றார். சுயமாக வாழ்ந்த குடும்பம் எப்படி சீர்கெட்டுப் போகின்றது.

இந்த இடத்தில் தான் தமிழரின் அரசியல் சக்தி பற்றி கவன மெடுக்க வேண்டியுள்ளது. இன்னும் இந்தியாவின் அடிமை விசுவாசிகளாகவே தொடர்ந் தும் மக்களை ஏமாற்றி வருகின் றனர். தொப்புக் கொடி உறவு பேசிப் பேசியே எம்மை ஏமாற்று வதில் முன் நிற்கின்றனர். இந்திய எஜமான் எதைச் செய்தா லும் கும்புடுறேன் ஐயா, சாமி போட்டு தொடர்ந்து தமிழ்த் தேசிய இனத்தை காட்டிக் கொடுக்கின்றனர். அத்துடன் இன்று வரை இந்திய மீனவரின் அத்துமீறிய மீன்பிடிப்புச் சம்பவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டித்தது கிடையாது தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு எந்த தமிழ்ச் சமூகத்திற்காக அரசியல் செய்து கொண்டிருக்கிறது என்பதை மக்கள் கேள்வி கேட் காதவரை மக்கள் முட்டாள் ஆக்கப்படுவார்கள். வெகுஜன போராட்ட மாற்று அரசியல் சக்தியை மக்கள் கட்டியெழுப்பி தீர்வைப் பெற்றுக் கொள்ள முன்வருதல் வேண்டும்.

## ஆசியாவின் அதிசயம்

- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2005ல் 980 கோடி ரூபா லாபம் பெற்றது ஆனால் 2012ல் 8960 கோடி ரூபா நட்டமடைந்தது.
- இலங்கை மின்சாரசபை 2005 ல் 680 கோடி ரூபாய் நட்டமடைந்தது. ஆனால் 2012ல் 6110 கோடி ரூபாயாகிக் கொண்டது.
- 2005ல் சிறிலங்கா எயர்லயன்ஸ் 83 கோடி 40 லட்சம் ரூபா லயம் பெற்றது. 2011 ல் இருந்து தற்போது வரை அதன் நட்டம் 2590 கோடி ரூபாவாகும்
- 2005ல் மிகின் லங்கா வேவையில் இல்லை. அது 2011ல் 190 கோடி ரூபாவும் 2012ல் 280 கோடி ரூபாவும் நட்டமடைந்தது
- 2005ல் 110 கோடி ரூபா நட்டமடைந்த இ.போ.ச. 2012 ல் 460 கோடி ரூபா நட்டமடைந்தது 2005 ல் 9 கோடி 80 லட்சம் ரூபா நட்டமடைந்த விவசாய கமநல சபை 2012ல் 480 கோடி ரூபா நட்டமடைந்தது
- 2005 ல் 13 கோடி 50 லட்சம் நட்டமடைந்த மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை 2012ல் 25 கோடி 20 லட்சம் நட்டமடைந்து கொண்டது

இது போன்று வேறும் துறைகளில் ஏற்பட்டு வரும் நட்டம் அத்தனையும் நாட்டு மக்களின் தலைகளிலேயே சுமத்தப்படுகிறது. இது தான் இலங்கை ஆசியாவின் அதிசயமாக மாறிவரும் அபிவிருத்திப் பாதையின் லட்சணமாகும்.

# நெடுங்கேணி – சேனைப்புலவு பாடசாலை சிறுமி மீதான பாலியல் வன்புணர்வை எதிர்த்து மக்கள் போராட்டம்.

வவுனியாவின் நெடுங்கேணி – சேனைப்புலவு கிராமத்தில் 07 வயது பாடசாலைச் சிறுமியைப் பாலியல் வன்புணர்வு செய்த இராணுவச் சிப்பாயை கைது செய்யுமாறு கோரி சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பெருமளவிலான பெண்கள், இளைஞர்கள் மக்கள் பங்கு கொண்டு தமது கடும் எதிர்ப் பினை வெளிக்காட்டி நின்றனர்.

அத்துடன் இவ் ஆர்ப்பாட்டமானது இப் பாடசாலை சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்த கயவன் ஐந்து நாட்களாகியும் கைது செய்யாமையைக் கண்டித்தே இப் போராட்டம் முன்னெடுத்துச் செய்யப்பட்டது. இதன் போது புதிய ஜனநாயக – மாக்சிச லெனினிசக் கட்சியின் வவுனியா மாவட்டத் தோழர்களும் இவ் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு அளித்து பங்கெடுத்து இருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேயசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தனும், வினோதரலிங்கம் போன்றவர்களும் கலந்து கொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தி நின்றனர். அத்துடன் ஏனைய அரசியல் சார் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இப் போராட்டத்தில் பங்கெடுத்து நின்றனர். சிறி ரெலோ விடுதலை இயக்கம் சார்பில் உதயராசா, புளொட் அமைப்பின் சார்பில் மாவட்ட அமைப்பாளர் பவான், மற்றும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் என்.தேவகிருஸ்ணன், போன்ற வெகுஜன அமைப்புக்களின் பிரதி நிதிகளும் இப் போராட்டத்தில் ஐக்கியப்பட்டு சிறுமிக்கு அநீதி இழைக்கப்பட்டதைக் கண்டித்து நீதி வேண்டி நின்றனர்.

இப் போராட்டம் மூலம் இப் பாடசாலை சிறுமியை வன்புணர்வு செய்த கயவன் கொழும்பில் இருந்து வருகை தந்த குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டான். இக் கைதானது மக்கள் தமது எதிர்ப் பைக் காட்டாமல் வீடுகளில் இருந்திருப்பார்களானால் வன்புணர்ச்சியில் ஈடுபட்ட கயவனை காவல்துறை கைது செய் திருக் காது என்றே மக்கள் பேசிக்கொள்கின்றனர்.



எனவே இன்றைய யுத்த சூழலுக்குப்பின் வடக்கு கிழக்கு பலவழிகளிலும் அநீதி இழைக்கப்பட்டு வருவது அனைத்துத் தமிழ் மக்களாலும் உணரப்பட்டுக் கொண்டிருக்கின்றது எனவே மக்கள் தமக்கு நடக்கும் அநீதிக்கெதிராக வீதியில் இறங்கி ஐக்கியப்பட்டு சரியாக திசை மார்க்கத்தில் போராடாத வரை ஒரு தீர்வையும் பெற்றுக் கொள்ள முடியாது என்பது இச்சிறுமிக்கு நீதி கேட்டு போராட்டத்தின் மூலம் கிடைத்த வெற்றியின் மூலம் மக்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும். அத்துடன் வடக்கு கிழக்கு போராட்ட த்திற்கு ஆதரவளித்து சிங்கள மக்களும், முஸ்லிம் மக்க ளும் தமது ஆதரவை தெரிவித்து நின்றதுடன் கயவனை கைது செய்யுமாறும் கோரி நின்றனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தின் மூலம் மக்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஏதெனில் தமக்கு இழைக்கப்படும் அநீதியை கண்டித்து தாம் ஐக்கியப்பட்டு வீதியில் இறங்கி அநீதியை கண்டிக்காதவரை தமக்கான நீதியை ஒருபோதும் மக்கள் பெற்று விட முடியாது. எனவே மக்கள் ஐக்கியப்படுவதன் ஊடாக மட்டுமே அநீதியை தோற்கடித்து புதிய சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும். என்பது உண்மையாகும். எனவே மக்கள் மயப்பட்ட வெகுஜனமார்க்கம் திறக்கப்பட அனைத்து ஜனநாயக சக்திகளும் கைகோர்க்க வேண்டியது இன்றியமையாத கடமையாகும்.

நமது நிருபர்

# வவுனியா வைத்தியசாலை சிற்றூழியர் நியமனத்தில் முறைகேடு

வவுனியா பொது வைத்தியசாலையில் கடந்த 3½ வருடங்க ளாக ஒப்பந்த அடிப்படையில் கடமை புரிந்துக்கொண்டிருந்த 60ற்கும் மேற்பட்ட சிற்றூழியர்களை இடைநிறுத்தி விட்டு வெளியில் இருந்த நபர்களுக்கு அரசியல் ஆதரவுடன் மாகா ணசபை தேர்தலை இலக்கு வைத்து அமைச்சர். ரிசாட் பதியுதீன் வவுனியா நகரசபை மண்டபத்தில் வைத்து இந்த நிரந்தர நியமனத்தை வழங்கியிருந்தார்.

இதன் போது சிற்றூழியர் சார்பாக கருத்துத் தெரிவித்த அச் சங்கத்தின் செயலாளர் தாம் கடந்த 3½ வருடங்களாக ஒப்ப ந்த அடிப்படையில் வேலை செய்து கொண்டிருந்த தருணங்க ளில் ஆளுநர், சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார அமை ச்சு செயலாளர் என்போர் அடிக்கடி நேர்முகப்பரீட்சை மூலம் தங்களுக்கான நியமனம் வெகு விரைவில் வழங்கப்படும் என்று உறுதி கூறி வந்ததன் பிரகாரம் தாம் நம்பிக்கையோடு இருந்த போதும் அதற்கு நேர்மாறாக இவ் நியமனத்தை ஆளு நர் உட்பட அமைச்சர். ரிசாட் பதியுதீன் போன்றோர் வைத்தி யசாலைக்கும் அப்பணிகளுக்கும் தொடர்பில்லாத ஐம்பது நபர்களை நியமனம் செய்திருப்பதானது கடந்த மூன்றரை வருடங்களாக வேலை செய்த சிற்றூழிய சுகாதார தொழிலா ளர்களின் வயிற்றில் அடிப்பது போன்ற செயலாகும்.

எனவே மனிதாபிமற்ற இச் செயற்பாடு கண்டிக்கத்தக்க செயற்பாடு ஆகும் எனவே இவ் அநீதியான நியமனம் உடனடி யாக நிறுத்தப்பட்டு சரியான முறையில் வைத்தியசாலை யில் வேலைசெய்வோருக்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படல் வேண்டும் என அச் சங்கத்தின் செயலாளர் வலியுறுத்தினார்.

இதன் போது இவ் ஐம்பது பேரினது நியமனத்தை ரத்துச் செய்து தமக்கான நியமனத்தை உடன் வழங்கும் படி கோரி 07.06.2013 அன்று புதிய நகரசபை மண்டபத்தின் முன்பு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அச்சங்கம் ஏற்பாடு செய்திருந் தது இதன் போது புதிய – ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அமைப்பாளர் என்.பிரதீபன் உட்பட சமூக நீதிக் கான வெகுஜன அமைப்புப் பிரதிநிதி என்.தேவகிருஸ்ணன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவச க்தி ஆனந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டு இவ் கவன யீர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்ததும் குறிபிட த்தக்கது ஆகும்.

இவ் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சிற்றூ ழிய தொழிலாளர்கள் "அநீதி இழைக்கப்பட்ட தொழிலாள ருக்கு நீதி வழங்கு" "வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்" "தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்காதே" "தொழிலாளரின் நியமனத்தை பேரம் பேசாதே" "தொழிலாளரின் வயிற்றில் அடிப்பதா ஆளுனரின் நியமனம்" போன்ற கோசங்களை ஆர் ப்பாட்டத்தில் பங்கு கொண்டிருந்த தொழிலாளர்கள் எழுப்பி யிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். மேற்படி கவன யீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தமிழ் முஸ்லீம் சிங்கள ஊழியர்கள் ஐக்கியப்பட்டு நின்றமை கவனத்திற்குரியதாகும் ஆர்ப்பாட்ட த்தில் நின்றமை கவனத்திற்குரியதாகும் ஆர்ப்பாட்டத்தில் தமிழ் சிங்கள மொழிகளிலான பதாகைகள் அட்டைகள் என்ப வைற்றுடன் இரண்டு மொழிகளிலும் முழக்கங்கள் எழுப்பப்பட் டமை குறிப்பிடத்தக்கதாகும் இது உழைக்கும் வர்க்க ஒற்று மையை எடுத்துக் காட்டி நின்ற நடவடிக்கையுமாகும்.



நமது நிருபர்

# தோட்டத் தொழிலாளர்களும் சொந்த வீடுகளும்

மனிதனின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறையுள் எனப் பாலர் வகுப்பு முதலே அனைவருக்கும் கற்பிக்கப்படுகிறது. ஆகவே ஒரு மனிதன் தான் வாழ்வதற்கு இருப்பிடமொன்றை அமைப்பதற்கு தகுதியுடையவன். இயற்கையின் நியதிப்படி விலங்கு, பறவை இனங்கள் உட்பட உயிர்கள் அனைத்தும் தாம் வசிப்பதற்கான இருப்பிடமொன்றை அமைத்துக் கொள்கின்றன. அவ்வகையில் இன்றைய காலகட்டத்தில் மலையகத்தைப் பொறுத்தமட்டில் இருப்பிடவசதியானது கேள்விக்குரியதொன்றாகவே உள்ளது.

ஓடாத ரயில்களாகக் காணப்படுகின்ற லயன் அறைகளில் (10X8 அடி அறை) 4- 5 குடும்பங்கள் வசிக்கின்றனர். குடும்பம் பெருகப் பெருக வழியின்றி அவ் லயன் அறைகளுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர். மாற்றுவழிகளாக அண்மைய காலங்களில் 7 பேர்ச்சஸ் காணிகள் வழங்கப்பட்ட போதிலும் அவை முற்றுமுழுதாக இல்லை என்றே கூறலாம். சொந்தமில்லாத லயன்களையும், வீட்டுவசதியற்ற காணிகளையும் கொண்டுள்ள சமூகம் சுமார் இரண்டு நூற்றாண்டுகளாக வாழ்கின்றவர்களாக மலையகப் பெருந்தோட்ட மக்கள் காணப்படுகின்றனர்.

ஒரு மனிதன் தான் வசிக்கும் இருப்பிடத்தை பாதுகாப்பாக அமைத்துக்கொள்ள, உரிமை மறுக்கப்படுகின்ற நிலையும் மலையகப் பெருந்தோட்ட மக்களுக்குத்தான். விடயம் இவ்வாறு இருக்க அண்மையில் மாத்தளையில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது, எல்கடுவ பிளான்டேசனுக்குட்பட்ட ரத்வத்த குருப்பைச் சேர்ந்த ரத்வத்த கீழ்ப்பிரிவில் வசிக்கும் பெண்மணியொருவர் தான் வசிக்கும் மண் வீட்டிற்கு முன்னால் அத்திவாரமிட்டு பாதியளவு சுவர் எழுப்பும் கட்டுமானப்பணிகளில் ஈடுபட்டபோது, மறுநாள் தோட்டத்துரை இரு காவலகாரர்களுடன் வந்து அக்கட்டிடத்தை உடைத்தெறிந்துவிட்டார். விசாரித்தபோது, ஒரு மாதத்திற்கு முன்னரே அனுமதிக்கடிதம் கொடுக்கப்பட்டே கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாக அப்பெண் கூறுகின்றார்.

ஆயினும் ஏதோ காரணம் காட்டி அக்கட்டிடம் உடைக்கப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் தனிமனித வாழ்வு அச்சுறுத்தப்படுவதை இவ்விடயத்தில் அவதானிக்கலாம். அதிகார மமதையில் இவர்கள் செய்யும் அட்டூழியங்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும். இங்கு சோகம் என்னவெனில் பிரபல தொழிற்சங்கமொன்றே பலமாக இருக்கும் தோட்டமாக அத்தோட்டம் காணப்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக பெரிதாக யாரும் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் இன்று அப்பெண்ணுக்கு நடந்த விடயம் நாளை தனக்கும் நடக்கும். ஆகவே இவ்வியத்தை கூட்டாக இணைந்து எதிர்க்க வேண்டும் என எவரும் நினைக்கவில்லை. காரணம் அப்பெண் தோட்டத்தில் வேலை செய்யாத பெண் என அறியக்கிடைத்தது.



இவ்வாறு தங்களுக்குள்ளேயே பிரிவினைகளை வளர்த்துக் கொண்டு யாரை எதிர்க்க வேண்டும் யாருடன் கூட்டுச் சேர வேண்டும் எனத் தெரியாமல் தவிப்பது குருட்டுத்தனமாகும். தோட்டத்தொழிலாளர்கள் தங்களுக்கு நடக்கும் அட்டூழியங்களை, முற்காலங்களில் கூட்டாக இணைந்து போராட்ட வழிகளில் எதிர்த்துள்ள வரலாறுகள் அதிகம் உண்டு. ஆனால் கையாலாகாத சில பெரிய தொழிற்சங்கங்கள் யார் அரசமைக்கின்றனரோ அவர்களுடன் இணைந்து பெருந்தோட்ட மக்களுக்கு சேவையாற்ற போகின்றோம் என அறிக்கை விடுத்து, மக்களின் வர்க்க குணாம்சத்தையும், போராடும் திறனையும் மழுங்கடித்தே வந்துள்ளனர் என்பதை, இன்று நடக்கும் சம்பவங்கள் மூலம் தோட்ட மக்களது பிரதிபலிப்பை கொண்டு உணரலாம்.

ஆயினும் பல தோட்டங்களில் சுயமாக போராட்டங்களை முன்னெடுக்கும் தோட்டங்களும் இருப்பது மகிழ்விற்குரிய விடயமாகும். ஆகவே, பெருந்தோட்ட மக்கள் வாக்குரிமை இல்லாத வரைக்கும் மேற்சொன்ன பிரச்சினைகள் போன்று தொடர்ந்து பிரச்சினைகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். ஆகவே தொழிலாளர்கள் சரியான பாதையைத் தெரிவு செய்து தமது வாழ்வுரிமைகளை வென்றெடுக்க ஒன்று சேர்வது காலத்தினதும் எதிர்கால சந்ததிக்கச் செய்யவேண்டியதுமான தார்மீகக் கூர்மையினது கட்டாயமாகும்.

பெருந்தோட்டங்களைப் பாதுகாக்கும் மக்கள் ஒன்றியம்

மாத்தளைப் பிராந்தியம்

## யாருக்கு அதிஸ்டலாப சீட்டு? சுரண்டுவோருக்கா? சுரண்டப்படுவோருக்கா?

மோரா

அண்மைக்காலமாகத் தேசிய லொத்தர் சபை மக்கள்மீது அன்புகொண்டு, அவர்களுக்குப் பணம் கொடுப்பதற்காக, சகல நகரங்களிலும் நகரும் வாகனங்களில் (லொத்தர் சபையின் வாகனங்களில்) ஒலிபெருக்கி அறிவித்தல் வழங்கிக் கொண்டு அதிகளவான லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்து வருகின்றது.

(அந்த லொத்தர் சீட்டுகள் சுரண்டும், லொத்தர் சீட்டுகள்) மக்களை கூவி அழைத்து, ஓரிரு சீட்டுக்களுக்கு திட்டமிட்டவாறு 200/=, 300/=, 500/= ரூபாய்களை உடன் வழங்கி மேலும் மேலும் விற்பனையை அதிகரிக்கின்றனர். மக்களும் ஆச்சரியமான ஆசிய நாட்டில், தொடர்ந்த பல விலையேற்றங்களால் அல்லலுற்று அற்ப பொருட்களையும் அடகுவைத்து நகைகளையும் வங்கியில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் இவ்வேளையில் தமக்கும் ஏதாவது கிடைக்குமா என ஏங்கி லொத்தர் வாகனத்தருகில் கூடி நிற்பதைக் காணக்கூடிய தாகவுள்ளது.

ஆக இதைத்தான் மக்களின் நாடியறிந்து சேவை செய்யும் அரசென்பதோ? புரியவில்லை, ஒட்டுமொத்தமாக மக்களிடமுள்ள முழு ஆடைகளையும் உருவியெடுத்து, ஓட்டுப்போட கோவணத்தை வழங்கும் நிகழ்வு தான் இது. மேலும் இவ்விதமும் இதனைப் பார்க்கலாம் வரப்போகின்ற கசினோ, சாங்கறி – லா போன்ற பல சூதாட்ட நிறுவனங்களது நிகழ்விற்கு மக்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்வாகவும் இதனைக் கருதலாம்.

அதிஸ்டம் லாபம் எனும் சொற்களைப் பயன்படுத்தி, மக்களிடம் உள்ள பணத்தையும் சுரண்டிச் சுருட்டிக்கொள்ளும் துரதிஷ்ட சிந்தனை தான் மகிந்த சிந்தனை என்றே சிந்திக்க வேண்டியுள்ளது.

## அமைச்சர் ஆறுமுகன் கூறிய புதுடெல்கிக் கதை

அண்மையில் இ.தொ.கா வின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான தூதுக் குழுவினர் புதுடில்லி சென்றிருந்தனர். அங்கு ஆளும் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாவையும் அமைச்சர் நாராயணசாமியையும் சந்தித்தனர். அச் சந்திப்புப் பற்றி அமைச்சரே ஊடகங்களுக்கும் தெரிவித்தார். அதன் படி மலையக மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் அவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் படித்த இளைஞர் யுவதிகளுக்கு இந்தியாவில் பயிற்சி அளித்தல். நுவரேலியா மாவட்டத்தில் உள்ள நான்கு பாடசாலைகளின் தரங்களை உயர்த்துதல் 13வது திருத்தம் உட்பட பல விடயங்கள் விரிவாகப் பேசப்பட்டதாக அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார் இவற்றுக்கு சோனியா அம்மையார் சாதகமாகப் பதிலளித்து உறுதி வழங்கியுள்ளாதாகவும் தெரிவித்துள்ளார். மலையக சமூகத்தை தனி இனச் சமூகமாக இந்திய மத்திய அரசாங்கம் ஏற்றுள்ளமைக்கு தமது மகிழ்ச்சியையும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயத்தை மலையக மக்கள் எவ்வாறு புரிந்து கொள்ளமுடியும் என்றே கேட்கத் தோன்றுகிறது. சோனியா அம்மையாருக்குக் கூறிய அவ்வளவு விடயங்களையும் தான் அமைச்சர் பதவி வகிக்கும் இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவையிலோ அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடமோ கூறி இருப்பாரானால் அதில் ஒரளவுக்கு நேர்மை இருந்திருக்க முடியும். மலையக மக்களும் அதனை எதிர்பார்ப்புடன் நம்பியிருக்க முடியும். கொழும்பில் எடுத்துச் சொல்ல வேண்டியதை அங்கு எடுத்துச் சொல்லவோ கோரிக்கை வைக்கவோ தைரியத்துடன் முன்வர முடியாத அமைச்சர் ஆறுமுகன் புதுடில்லிக்கு விமானம் ஏறிச் சென்று கூறியிருப்பதாக ஊடகங்களுக்குத் தெரிவித்திருப்பது மலையக மக்களின் காதுகளில் பூச்சுற்றுவதாகவே உள்ளது

மலையக மக்களின் வாழ்வு மாற்றத்திற்கு எத்தனையோ திட்டங்கள் அறிவித்த அவையாவும் பொய்யாய் கனவாய் பழங்கதையாகிப் போனவைகளின் பட்டியல் நீளமானதாகும் தானே அமைச்சராக இருக்கும் இன்றைய அரசாங்கத்தின் தோட்ட நிலப்பறிப்பு முயற்சியை தடுத்து நிறுத்த முடிய வில்லை. நுவரேலியா மாவட்டத்தில் ஒரு தமிழ்ப் பாடசாலையைத் தேசியப் பாடசாலையாகத் தரமுயர்த்த முடியாத நிலையில் நான்கு பாடசாலைகளைத்தர முயர்த்துவது பற்றி டில்லியில் பேசியிருப்பதைக் கேட்டு அழுவதா அல்லது சிரிப்பதா எனப் புரியவில்லை வீட்டுத் திட்டம் பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளது. ஏற்கனவே மலையக மக்களுக்கு வாக்குகளுக்கான வாக்குறுதிகளான மாடி வீட்டுத்திட்டம் காணி உறுதிவழங்கும் திட்டம் மட்டுமன்றி மாட்டுத் திட்டம் போன்ற ஏராளமானவற்றைக் கேட்டுக் கேட்டு ஏமாந்த நிலையிலேயே மக்கள் இருந்தனர் இப்போது புது டில்லியில் இருந்து புதிய ஏமாற்றுக்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. மக்கள் தான் உரிய பதிலை வழங்க வேண்டும்.

## விழித்திடுமா மலையகம்

கடந்த 2012.06.26ம் திகதி (சூரிய காந்தி) முதல் பக்க செய்தியாக வெளியான "அரசாங்க தோட்டங்களைத் தனியாருக்கு விற்கும் திட்டங்கள் ஆரம்பம்" என்ற செய்தியிலே தற்போது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் இயங்கி வரும் "ஜனவசம" ,அரச கூட்டுத்தாபனம் மற்றும் எல்கடுவ பிளான்டேசனுக்குக் கீழ் இயங்கும் அனைத்துதோட்டங்களையும் தனியார் கம்பனிகளை விற்பதற்கான விலை மனுக்கோரப்பட்டுள்ளதாக அரச வள மற்றும் தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரைச் சுட்டிக்காட்டிச் குறிப்பிட்டிருந்தது.

கடந்த 175 வருடங்களுக்கு மேலாகப் பெருந்தோட்டத்துறை சார்ந்து எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் வாழ்ந்து வரும் மலையக மக்கள் அரசின் இத்தீர்மானத்தின் மூலமாகத் தமது தொழில், குடியிருப்பு, பிள்ளைகளின் கல்வி மற்றும் பொருளாதார ரீதியாகவும் மிகவும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்படவுள்ளனர். முறைகேடான நிர்வாகத்தினால் தோட்டங்களை இவ்வாறு இக்கட்டான நிலைக்கு கொண்டு வந்தும் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாக கூறும் உயர் நிர்வாகத்தினர் தமது சொகுசு வாழ்க்கை தொடர்பாகவே நினைக்கின்றனரே தவிர சாதாரண தொழிலாளர்களை பற்றி துளியேனும் நினைப்பதில்லை, இது தொழிலாளர்களுக்கு தெரிவதில்லை.மாறாக சம்பளப்பிரச்சினை தோன்றும் போது சந்தையில் தேயிலையின் விலை வீழ்ச்சி என்றும் அதிகரித்து செல்லும் செலவீனங்களால் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகவும் கூறி வருகின்றனர். இவ்வாறு ஏற்படும் நட்டத்தை ஈடு செய்யவும் தொழிலாளர்களின் மாதாந்த சம்பளத்தையும் ஓய்வூதியத்தையும் கொடுக்கப்பட வேண்டும் எனக்கூறி தோட்டங்களிலுள்ள மரங்களை ஒவ்வொரு வருடமும் பல கோடி ரூபாவிற்கு வெட்டி விற்கின்றனர். இதற்கு பிரதியீடாக மர நடுகையோ தேயிலை சார்ந்த புதிய நடுகை முறைமையோ மேற்கொள்வதில்லை. பயிர்ச்செய்கை பிரதேசங்களுக்கு உரமிடுதல்,இரசாயனம் தெளித்தல் என்பன இல்லாத நிலையில் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகக் கூறுவது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாததாகும்.

இது இவ்வாறு இருக்க கடந்த 2011ம் ஆண்டின் "கோப்" அறிக்கையில் தேயிலை தோட்டங்கள் இலாபத்தில் இயங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை வியப்பைத் தருகின்றது. ஏழைத் தோட்ட தொழிலாளர்களை வைத்து தொழிற்சங்கம் நடாத்தி வரும், தங்களை தோட்ட தொழிலாளர்களின் ஏகப்பிரதிநிதிகளாக கூறிக்கொண்டு அரசிற்கு முட்டுக்கொடுத்து அரசில் அமைச்சு பதவிகளை வகித்து உல்லாசமாக வலம் வரும் தொழிற்சங்க தலைவர்களும் , மலையக மக்கள் எமது உயிர் மூச்சு என்று கூறி வரும் மின்னல் (ஆ)சாமிகளும் இவ்விடயம் தொடர்பாக எவ்வித எதிர்ப்பையும் வெளிப்படுத்தாத நிலையில் வாயடைத்து நிற்பது அவர்களின் கையாலாகாத தனத்தையே வெளிப்படுத்துகின்றது.

கடந்த 175 வருடங்களுக்கு மேலாகத் தமக்கென்று ஒரு அடி நிலம் கூடச் சொந்தமாக இல்லாது. வெறுமனே தோட்ட தொழிற்துறையை நம்பி வாழ்ந்து வருகின்ற மலையக மக்கள் கல்வி,பொருளாதாரம்,மற்றும் தொழில் பாதுகாப்பு என்பனவற்றிற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை இவ்வாறு தோட்டங்கள் தனியார் கம்பனிகளுக்கு விற்கப்படுகின்ற நிலையில் தொழிலாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவர். இவ்வளவு காலமும் மலையக மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக நம்பிக்கொண்டிருந்த (ஆ)சாமிகளை நம்புவதை தவிர்த்து இந்நிலைமை தொடர்பாக மலையக மக்கள் அனைவரும் ஓரணியில் ஒன்று சேர்ந்து தமது பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பான பயணத்திலே செல்வதை தவிர வேறெதுவும் தீர்வாக அமையாது.

செங்கதிர்

# புதிய நீதி

Puthiya Neethi
புதிய நீதி

முரசம் 02, யூன் 2013, பக்கம் 16, விலை ரூ.30. முழக்கம் 03

இல. 15/4இ மகிந்தாராம வீதி, கல்கிசை
தொ.பேசி: 0716 745 642, 0779 774 427 தொ.நகல்: 0112 473 757
WEB: www.ndpsl.org Email: puthiyaneethi2012@gmail.com

## பல்கலைக்கழக மாணவர்கள் மீதான அரசின் அடக்குமுறைகள்

இன்று பல்கலைக்கழங்கள் போராட்டக்களங்க ளாகவே காட்சி தருகின்றன. உயர்கல்வி கற்கச் சென்ற மாணவர்கள் கோரிக்கைகளுடன் ஊர்வலங்களில் ஆர்ப்பாட்டங்களில் இறங்கி நிற்கின்றனர். மாணவர்கள் மட்டுமன்றிப் பல்கலைக்கழக ஆசிரியர்களான விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் என்போரும் தமக்கான கோரிக்கைகளுடன் முன்பு வீதிக்கு வந்து கொண்டனர். அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளில் முக்கியமானது மொத்த தேசிய வருமானத்தில் 6 வீதத்தைக் கல்விக்கு ஒதுக்க வேண்டும் என்பதாகும். அதே போன்று பல்கலைக்கழகக் கல்வியைச் சீர்குலைத்து தனியார் பல்கலைக்கழங்களைக் கொண்டு வரும் அரசாங்கத்தின் தனியார்மய சதித்திட்டத்தை மாணவர்கள் எதிர்த்து வருகின்றனர். அத்துடன் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தி லும் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், தத்தமது கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிறார்கள். அவ்வப்போது வகுப்புப் பகிஸ்கரிப்பு. கவனயீர்ப்பு, வீதி ஆர்ப்பாட்டங்கள் போன்ற போராட்டங்களில் அநேகமாக எல்லாப் பல்கலைக்கழகங்களுமே சம்மந்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய போராட்டங்களில் அரசாங்கத்தின் கல்விக் கொள்கையும் அதனை நடைமுறைப்படுத்துவோருமே பல்கலைக்கழக மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் கண்டித்து எதிர்க்கப்படுகின்றனர். குறிப்பாக உயர்கல்வி அமைச்சரின் பேச்சுகளும் செயற்பாடுகளும் கடுமையாக எதிர்க்கப்படுகிறது. அதனால் அவர்கள்மீது பொலீஸ் அடக்குமுறையை ஏவிடுவதிலும் உயர்கல்வி அமைச்சரின் பங்கு பிரதானமானதாகும். அவர் ஒரு சர்வாதிகாரி போன்று ஷநான் உங்கள் போராட்டங்களுக்கு மசியப்போவ தில்லை. எடுத்த எனது முடிவுகளை நிறைவேற்றியே தீருவேன்' என்ற விதமாக செயல்பட்டு வருகிறார். அதே போன்று பல்கலைக்கழ மானிய ஆணைக் குழுவும் ஆண வமாகவே செயல்பட்டு வருகிறது.

அண்மைக் காலங்களில் போராட்டங்களில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் பலவழிகளாலும் பழிவாங்கப்பட்டு வருகின்றனர். விசாரணை என்றும் வகுப்புகளுக்குச் செல்லவிடாது தடைவிதித்தும் மாணவர்கள் மீதான அடக்குமுறை மேற்கொள்ளப்படுகிறது. அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கைகளைக் கண்டித்து எதிர்க்கும் மாணவர்கள் பழிவாங்கப்பட்டு வருகின்றனர். சப்பிரகமுவா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் 5 பேரும், பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் 23 பேரும் களனிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 7 பேரும் ஸ்ரீ ஜெயவாத்தனபுர பல்கலைக்கழக 21 மாணவர்களும் வகுப்புக்களுக்குச் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளனர் இத் தொகை மேலும் அதிகரித்துச் செல்லுகின்றா. இவற்றுக்கு மாணவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். மாணவர்களுக்கு எதிராகக் கடுமையான பொலீஸ் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். அண்மையில் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மீது கடும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் மாணவர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். அதேபோன்று களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டனர். இரவுவேளையில் மாணவர் விடுதிக்கள் புகுந்த இனம் தெரியாத குண்டர்கள் விஞ்ஞானப் பிரிவு மாணவர்களைக் கடுமையாகத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். அண்மைக் காலங்களில் இரண்டு பல்கலைக்கழக மாணவ ர்கள் கொல்லப்பட்டும் உள்ளன்ர். மாணவர் தலைவர்கள் சிலருக்கு எதிராகப் பொய் வழக்குகள் சோடித்து விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். பின்பு பிணையில் விடப்பட்டனர்.

இவ்வாறு கடந்த நவம்பர் மாதத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மீது ராணுவம் பொலீஸ் இரவு வேளை விடுதிகளுக்குள் புகுந்து தாக்குதலில் ஈடுபட்டனர். அங்கு மாணவிகளின் விடுதிகளுக்குள்ளும் புகுந்து தாக்குதல் நடாத்தினர். மறுநாள் இச்சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் மீது மோசமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மாணவர்கள் காயங்கள் அடைந்தனர். ஐந்து மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். பின்பு இருவர் விடுவிக்கப்பட மூவரையும் புதிய நடைமுறையாக வெலிக்கந்த முகாமிற்குப் புனர்வாழ்வு எனக் கூறி அனுப்பினர். அவர்களுக்கு சட்டமோ நீதிமன்ற நடைமுறைகளோ கூடப் பின்பற்றப்படவில்லை. இதன் மூலம் யாழ் பல்கலைக்கழக மாணவர்களை அச்சுறுத்தி அடக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் மாணவர்களிடையே அமைதியின்மை இருந்து வருகிறது.

இவ்வாறு நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழங்களிலும் அமைதியின்மையும் போராட்டங்களுமே காணப்படுகின்றன.

இன்றைய அரசாங்கம் பின்பற்றி வரும் கல்விக் கொள்கை யும் பல்கலைக்கழகங்களைத் திட்டமிட்டே சீர்குலைக்கும் நடைமுறைகளுமே பிரச்சினைகளின் மையமாகக் காணப்படுகின்றன. பாடசாலைக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை முழுக் கல்வித்துறையையும் தனியார் மயமாக்குவதே இன்றைய அரசாங்கத்தின் நோக்கும் போக்குமாகவே இருந்து வருகிறது. இதன் ஊடே நாட்டில் ஏற்கனவே இருந்து வரும் இலவசக் கல்விக்கு ஆப்பு வைப்பதே அவர் களது திட்டமாகும்.

இந்தநாட்டின் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுத் துறைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு இலவசக் கல்வியும் தாய் மொழிக் கல்வியும் பெரும் பங்களித்து வந்து ள்ளன. இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு சுமார் எழுபது ஆண்டுகள் ஆகப்போகிறது. நாட் டில் இன்று பதினைந்து, பல்கலைக்கழகங்களும் ஏனைய உயர்கல்வி நிலையங்களும் இருந்து வருகின்றன. நாட்டில் மொத்தம் 9600 வரையான பாடசாலைகள் இருந்து வருகின்றன. இவை அனைத்திலும் இலவசக் கல்வியே நடைமுறையில் இருந்து வருகிறது. இருப்பினும் படிப்படி யாக இலவசக் கல்வி அதன் அர்த்தத்தை இழந்து வருகின்றமை மறுப்பதற்கில்லை.

இலங்கையில் இலவசக் கல்வியைச் சீர்குலைத்து ஆங்கிலக் கல்வியை முன்தள்ளி தனியார் கல்வியைப் பாடசாலை மட்டங்களில் இருந்து பல்கலைக்கழகங்கள் வரை கொண்டு வருவத ற்கே உலக வங்கி முழு முயற்சி செய்து வருகிறது. அந்தவகையிலேயே தனியார் மருத்துவப் பல்கலைக்கழகம் என ஆரம்பித்து இன்று தனியார் பல்கலைக்கழகங்கள் பெருகி வருவதைக் காணமுடிகிறது. அதே வேளை இலங்கையில் மிகவும் தரம் கொண்ட நிலையில் பல்கலைக்கழங்கள் இயங்கி வந்துள்ளன. அவற்றைப் பாதுகாத்து மேலும் அவற்றின் தரத்தை உயர்த்தவே கல்விக்கு மொத்த தேசிய வருமானத்தில் 6 வீதத்தை ஒதுக்கப் பல்கலைக்கழகங்களின் ஆசிரியர் சம்மேளனமும் மாணவர்களிடம் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். இதனையே அரசாங்கமும் உயர் கல்வி அமைச்சரும் மறுத்த வருகின்றனர். அத்துடன் மாணவர்களின் கோரிக்கைகளை மறுக்கும் அரசாங்கம் அடக்கு முறைகளை ஏவியும் வருகிறது. இதன் விளைவே இன்றைய பல்கலைக்கழக மாணவர்களிடையேயான அமைதியின்மையும் போராட்டங்களுமாகும். மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பல்கலைக்கல்வியைப் பாதுகாக்கும் கோரிக்கைகளுக்கும் போராட்டங்களுக்கும் புதியநீதி தனது ஆதரவை வழங்கி நிற்கிறது. அத்துடன் பழிவாங்கப்பட்டு வகுப்புக்களுக்குச் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்ட மாணவர்கள் மீதான தடைகள் அகற்றப்படல் வேண்டும். பொய் வழக்குகள் சோடிக்கப்பட்ட மாணவர்கள் விடுவிக்கப்படல் வேண்டும். மாணவர்கள் மீதான கண்காணிப்புகள் அச்சுறுத்தல்கள் தாக்குதல்கள் யாவும் நிறுத்தப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம்.

*ஆசிரியர் குழு*





## 13வது திருத்தம் வடக்கிலும் தெற்கிலும்

*வெகுஜனன்*

தெற்கிலே பௌத்த சிங்களப் பேரினவாதிகளும் கடும்போக்காளர்களான பௌத்த தேரர்களும் 13வது திருத்தத்திற்கும் வட மாகாண சபைத் தேர்தலுக்கும் எதிராக பெரும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஜாதிகஹெல உறுமயவும் அதன் அமைச்சர் சம்பிக்கரணவக்கவும் பதின்மூன்றாவது திருத்தத்தை அரசமைப்பில் இருந்து அகற்றும் தனி நபர் பிரேரணையைப் பாராளு மன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். அதே வேளை தேசிய சுதந்திர முன்னணியின் அமைச்சர் விமல் வீரவன்சா வடமாகாண சபைத் தேர்தலை நடாத்தக் கூடாது என அரசாங்கத்தைக் கோரும் இருபது லட்சம் கையெழுத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளார். இவர்களை விடவும் பொதுபலசேனா, தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம், பௌத்த தேசிய சங்கம் உள்ளிட்ட பல்வேறு பேரினவாத அமைப்புகளுள் பதின்மூன்றாவது திருத்தத்திற்கும் வட மாகாண சபைத் தேர்தலுக்கும் எதிராகப் போர்க்கொடி தூக்கி நிற்கின்றன. தாங்கள் பேசுவது இனவாதமோ தமிழர்களுக்கு எதிரானதொன்றோ இல்லை என்று இடையிடையே கூறிக்கொள்வதையும் கேட்க முடிகிறது. ஆனால்யாவும் பச்சை இனவாதமும் தமிழர் விரோதமாகவுமே உள்ளன.

யுத்தம் முடிந்த அல்லது வெற்றி பெற்றதாகக் கூறப்பட்டு நான்கு ஆண்டுகளுக்குப் பின்பும் இலங்கையின் கதி எவ்வாறு உள் ளது என்பதற்கு மேற்கூறிய விடயங்கள் ஏன் எதற்காக என்ற கேள்விகளை எழுப்பி நிற்கின்றன. அவை வாக்கு வங்கி. ஆட்சி அதிகாரம். சொத்து. சுகபோக வாழ்க்கை. அந்நிய சக்திகளின் பலத்த பின்புலம் மற்றும் கண்களுக்குத் தெரியாத இறுக்கமான நூல் இழைகள் எனப் பலவிடயங்கள் இருந்து வருகின்றன. இவை பற்றி சாதாரண சிங்கள மக்களுக்கு விளக்கம் எதுவும் கிடையாது. அவர்களுக்கு இலகுவில விளங்கக் கூடியது 'இலங்கை எங்களது நாடு. பௌத்தம் எமது புனித மதம்', 'இந்த நாட்டை விட்டால் வேறு நாடு நமக்கு இல்லை', 'நமது இனம் உலகில் வேறெங்கும் இல்லை'. எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்' என்பன போன்ற இலகுவழிப் பிரச்சாரங்களை நம்புவ தைத் தவிர சிங்கள மக்களுக்கு மாற்று எதுவும் கிடையாது. ஏனெனில் பௌத்த சிங்களப் பேரினவாதப் பிரசாரங்களை முறியடித்து தமிழ் முஸ்லீம் மலையகத் தேசிய இனங்களின் நியாயமான உரிமைகளை சிங்கள மக்களிடையே வலியுறுத்தக் கூடிய பலமான ஜனநாயக இடதுசாரி சக்திகள் தெற்கில் இல்லாத பலவீனம் தொடர்கிறது. பழைய இடதுசாரிகள் தமது முன்னைய நிலைப்பாடுகளை அறுபதுகளின் நடுப்பகுதிக்குப் பின் இழந்து பேரினவாத ஆளும் கட்சிகளுக்கு முன்னால் மௌனமாகிக் கொண்டனர். எனவே தெற்கில் பேரினவாதிகளின் கைகள் மேலோங்கிக் கொள்ளவும் அவர்களை நோக்கி எதிர்க் கேள்வி கேட்கக் கூடிய சக்திகள் இல்லாத நிலையுமே காணப்படுகிறது.

அதேவேளை வடக்கு கிழக்கிலே தமிழ்த்தரப்புக் கட்சிகள் மத்தியில் கடந்த காலப் பட்டறிவின் மூலமான புதிய மாற்றுக் கொள்கை முன்வைப்போ அல்லது தெளிவான வேலைத் திட்டங்களோ காணப்படவில்லை. கடந்த காலத்தில் தங்களால் முன்வைக்கப்பட்ட அரசியல் கொள்கைகள் திட்டங்கள் ஏன் தோல்வி பெற்றன என்பது பற்றிச் சிந்திக்கவோ சுயவிமர்சனமோ செய்யமறுத்தே வருகிறார்கள். ஒவ்வொரு தரப்பும் தங்களது கடந்த கால நிலைப்பாடுகள் ஒவ்வொன்றும் சரி எனக் கூறித் தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் தான் என்றும் அதுவே சரியானது என்றே கூறி வருகிறார்கள். சேர் பொன் இராமநாதன் முதல் பிரபாகரன் வரை தத்தம் தலைவர்கள் கூறியவைகளும் செயற்படுத்தியவைகளும் சரியானவை என்றே வாதிட்டு வருகிறார்கள். அப்படி யானால் ஏன் அவை எதுவும் வெற்றி பெறவோ தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுத்தரவோ இல்லை என்பதையிட்டு கேள்வி எழுப்புவதாகவும் இல்லை. இதையிட்டுத் தமிழ் மக்களோ அல்லது இளம் தலைமுறையினரோ அக்கறைப் படுவதாகவும் இல்லை. அதன் அர்த்தம் அவர்கள்அரசியல் விழிப்புணர்வுக்கு வரத்தயாராக இல்லை என்பதேயாகும்.


இத்தகைய நிலை தமிழ்த் தேசியவாதத் தரப்புக் கட்சிகள் ஒவ்வொன்றிற்கும் வாய்ப்பானதாகும். தெற்கிலே வேகமாகப் பிரசாரப் படுத்தப்படும் பேரினவாதக் கருத்தக்களும் அதன் பாற்பட்ட செயற்பாடுகளும் தமக்கு வாக்கு வங்கிகளாகி வாக்குப் பெட்டிகளை நிரப்பும் என்ற நம்பிக்கையில் இருந்து வருகிறார்கள். தெற்கின் பேரினவாதத்தைக் காட்டித் தமது பாராளுமன்ற உள்ளூராட்சிச் சபைகளுக்கு வாக்கு வாங்கியவர்கள் இப்போது மாகாணசபைக்கும் அவ்வாறே வாக்குப் பெட்டிகளின் ஊடே பதவிகளையும் அதிகாரங்கள் அற்ற பதவிகளையும் கைப்பற்றலாம் என நம்பி உள்ளனர். அதன் அடிப்படையிலேயே வெற்று டப்பாவாகக் காட்சி தரும் மாகாணசபைக்கு முதலமைச்சர், அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர், உறுப்பினர்கள் பதவிகளுக்காக உட்சுற்றுச் சண்டையில் இறங்கி உள்ளனர். தமிழரசுக் கட்சியா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா என்பதுடன் ஐந்து கட்சிகளை அல்லது ஆறாவது கட்சியாக தமிழ்த் தேசிய முன்னணியை இணைப்பதா அல்லது விடுவதா என்ற வாதப் பிரதிவா்தங்களும் நடைபெறுகின்றன.

இவ்வாறான ஒற்றுமை நடவடிக்கையானது எதற்காகவென்றால் உரிமைப் போராட்டங்களை முன்னெடுப்பதற்காகவல்ல. இருக்கும் பதவிகளைப் பாதுகாப்பதும் புதிதாக வரக் கூடிய மாகாணசபைகளுக்கு வந்துவிட வேண்டும் என்ற 'இனஉணர்வுத்' துடிப்பேயாகும். பேரினவாதிகளும் அவர்களது அரசாங்கமும் பதின்மூன்றாவது திருத்தத்தைப் பற்றியும் வடமாகாண சபைத் தேர்தல் பற்றியும் முடிவான முடிவுக்கு இன்னும் வரவில்லை. ஆனால் முதலமைச்சர் வேட்பாளர் யார் ஏனைய வேட்பாளர்கள் யார் என்பனவற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் கடும் போட்டியும் குத்துவெட்டுக்களும் ஆரம்பித்துவிட்டது. அதில் உள்ள முக்கிய விடயம்

>>12

# தற்கொலைகளுக்குப் பின்னால்...

கடந்த மாதம் 18ம் திகதி காலிமுகத்திடலிலே யுத்த வெற்றியின் நான்காவது ஆண்டு வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. ஜனாதிபதியானவர் வெற்றிப் பெருமிதப் பேச்சுப் பேசிக் கொண்டார். அதனைத் தொடர்ந்து 24ம் திகதி வெசாக் தினம் கொண்டாடப்பட்டது. கௌதம புத்தரின் போதனைகள் பரப்பப்பட்டன. இவற்றின் நடுவே வடக்குக் கிழக்கில் மட்டுமன்றி தெற்கிலும் தற்கொ லைகள் இடம்பெற்றன. இதற்கு முன்பும் அவற்றுக்குப் பின்பும் தற்கொலைகள் தாராளமாக இடம்பெற்று வரும் நாடாகவே மும்மணிகளின




ஆசீர்வாதம் பெற்ற இலங்கை நாடு இருந்து வருகிறது.

மே மாதம் பதினேழாம் திகதி அன்ற வவுனியா தாண்டிக்குளத்தில் ஒரு தாய் தனது 6, 2 ½, 1 ½ வயதுக ளைக் கொண்ட மூன்று பெண் குழந்தைகளை கிணற்றில் வீசியதுடன் தானும் அதில் வீழ்ந்து தற்கொலை செய்ய முன்வந்தார். மூன்று குழந்தைகளும் பரிதாபமாக இறக்க தாய் மட்டும் அயலவர்களால் காப்பாற்றப்பட்டார். பிள்ளைகளை வளர்க்க முடியாத வறுமையே அத்தாயைத் தற்கொலைக்குத் தள்ளியது. அதற்குப் பின்னால் இருந்த கதை கல்லையும் கரையச் செய்யும் சோகம் நிறைந்ததாகும்.

மே 27 அன்று கிழக்கிலே மீராவேடையில் ஒரு தாய் தனது இரண்டு சிறுபிள்ளைகளை ஆற்றில் எறிந்துவிட்டு தானும் குதித்துள்ளார் பிள்ளைகள் இருவரும் இறந்தனர் தாய் காப்பற்றப்பட்டார். மே 19 அன்று சுன்னாகத்தில் 27 வயதுடைய ஒரு பெண்ணும் தெல்லிப்பளையில் 32 வயதுடைய மற்றொரு பெண்ணும் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டனர். இவை சமகாலத்தில் வடக்குக் கிழக்கில் இடம்பெற்ற தற்கொலைகளாகும். அதன்பின்பும் சுன்னாகத்தில் யுவதி (26) தனக்குத்தானே தீமூட்டியதுடன் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

இவ்வாறு மே 26ல் குருநாகல் மாவட்டத்தில் ஒரு தாதியான பெண் (32) தனது பத்து மாதக் குழந்தையுடன் கிணற்றில் வீழ்ந்து தற்கொலைக்கு முயன்றார். அப்பெண் காப்பாற்றப்பட்டார். கைக்குழந்தை கிணற்றில் இறந்தது. புத்தரின் புனித நாளான வெசாக் அன்று கண்டி தலதா மாளிகை முன்பாக ஒரு பௌத்த பிக்கு தனக்குத்தானே தீ மூட்டித் தற்கொலை செய்து கொண்டார். அவரது தற்கொலைக்கு வெளியே சொல்லப்பட்ட காரணம் இட்டுக் கட்டப்பட்ட கதை என்றே மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. புத்த பிக்குமார் எல்லோரும் புனிதர்கள் அல்லவே.

மேற்கூறிய தற்கொலைச் சம்பவங்கள் சோற்றுப் பதமாகவே சுட்டிக் காட்டப்படுகிறதே ஒழிய தற்கொலையில் இலங்கை முதல் வரிசையிலேயே இருந்து வருகிறது. யுத்த சூழலில் அதன் இறப்புகளினால் தற்கொலைகள் மறைக்கப்பட்டிருப்பினும் இப்போது அவை நாளாந்தம் வெளிவந்தபடியே உள்ளன. இதனை அண்மையில் ஒரு நாளிதழ் தனது கருத்துச் சித்திரத்தில் ஒரு தாயும் பிள்ளைகள் மூன்றும் கிணற்றில் குதிக்கத் தயாராவதை ஆசியாவின் அதிசயம்' எனக் குறிப்பிட்டிருந்தது.

இவ்வாறு தற்கொலைகள் அதிகரித்தச் செல்வதற்கு நாட்டின் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டு நிலைகள் பிரதான காரணப் பின்புலமாக இருந்து வருகிறன. நாட்டின் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோரின் எண்ணிக்கை மாதா மாதம் அதிகரித்த வண்ணமே உள்ளது. பணம் படைத்தோர் மேன்மேலும் பணக்காரர்களாகி வருகின்றனர். அப்படியானால் இயல்பாகவே ஏழைகளின் எண்ணிக்கை பெருகிறது. அவர்களிடம் வறுமை குடிகொள்கிறது. உழைத்து வாழ வழியில்லை. அப்படி உழைத்தாலும் அதற்குரிய வேதனம் கிடைப்பதில்லை. குறைந்த வருமானத்தை வைத்து உணவு உடை இருப்பிடம் கல்வி சுகாதாரம் ஆகிய அடிப்படைத் தேவைகளைப் பெற முடியவில்லை. வேலை இன்மை என்பது படித்துப் பட்டம் பெற்றவர். முதல் சாதாரண கல்வித்தரம் பெற்ற இளைஞர் யுவதிகள் வரை பரவி நிற்கிறது. பெறுகின்ற கல்விக்கும் நடைமுறையில் உள்ள பொருளாதாரத்திற்கும் உறவு கிடையாது. உற்பத்திப் பொருளாதாரம் நாட்டில் திட்டமிட்டவாறு முன்னெடுக்கப்பட்டால் அதற்கான கல்வியும் வேலை வாய்ப்பும் உருவாக வழிகள் இருக்கும். நாட்டின் வளங்களைப் பயன்படுத்தி மக்களுக்கான பொருளாதாரத்தை கட்டி எழுப்ப முடியும்.

வறுமை என்பதை மக்கள் தாமாகத் தேடிக் கொள்வதல்ல. இன்றைய சுரண்டல் பொருளாதார அமைப்பும் அதனை காத்து நிற்கும் ஆளும் அதிகாரவர்க்கமுமே வறுமையைத் தோற்றுவிக்கின்றனர். எனவே வறுமையினால் விரக்தியுற்று வெறுப்படைவோர் தமக்குக் கிடைக்கும் இறுதி வழி முறையாகவே தற்கொலையை நாடுகின்றனர். தற்கொலைக்கு வறுமை மட்டுமன்றி ஏனைய சமூக பண்பாட்டுத் தளங்களிலான பிரச்சினைகளும் நெருக்குவாரங்களும் காரணமாகின்றன. கல்வி கூட மாணவர்களைத் தற்கொலைக்கு இழுத்துச் செல்லும் ஒன்றாகவே இருந்து வருகிறது.

யுத்தம் நாட்டின் வடக்குக் கிழக்கை சின்னாபின்னாப்படுத்தி விட்டுள்ளது. அதனின்றம் மீள முடியாத நிலையிலேயே வடக்குக் கிழக்கு மக்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். உணவு, உடை, இருப்பிடம் தொழில் கல்வி சுகாதாரம் ஆகியவற்றைப் பெற்று இயல்பு வாழ்வுக்குத் திரும்பும் நிலை அங்கு. அதிலும் குறிப்பாக வன்னிப் பெரு நிலப்பரப்பு மேற் கூறியவற்றைப் பெற இயலாத சூழலிலேயே இருந்து வருகிறது. அதேவேளை பொருட்கள் மீதான விலை அதிகரிப்புகளும் வாழ்க்கைச் செலவின் உயர்வும் சாதாரண உழைக்கும் மக்களை வாட்டி வதைக்கின்றன. இத்தகைய சமூக சூழலில் வாழ முடியாத வாழ்க்கை நெருக்கடிகளும் குடம்பச் சச்சரவுகளும் தற்கொலை என்ற மனவிரக்தி நிலைக்கு ஒருவரைத் தள்ளிவிடுகிறது.

தற்கொலை செய்வது சட்டவிரோதம் என்கிறது அரசின் சட்டங்கள். தமது உயிர்களை மாய்த்துக் கொள்ளும் உரிமை எவருக்கும் இல்லை என்றே சட்டம் கூறுகிறது. அப்படியானால் ஒருவரது வாழ்வாதாரத்திற்கான வளங்களை எந்தச் சட்டமும் வழங்குவதாக இல்லை. உணவு உடை இருப்பிடம் தொழில் கல்வி சுகாதாரம் பெற முடியாது பல்லாயிரம் பேர் பரிதவித்து நிற்கும்போது அது பற்றி ஏன் எது எனச் சட்டங்கள் எதுவும் கேட்ப தில்லை. ஏன் பட்டினி இருக்கிறாய் அதோ அதற்குப் பரிகாரம் இருக்கிறது என எந்தச் சட்டமும் வழி காட்டுவதில்லை. ஆனால் அதனைப் பெற முடியாத விரக்தி வெறுப்பு நிலையில் தற்கொலை செய்து கொண்டால் மட்டும் ஏன் தற்கொலைக்கு முயற்சித்தாய் என கூறி சட்டம் தண்டிக்க முற்படுகிறது.

எனவே தற்கொலைகள் பெருகிவருவதற்கு அடிப்படையாக இருப்பது இன்றைய ஏற்றத்தாழ்வான சுரண்டலும் சமூக அநீதிகளும் அடக்குமுறைகளும் கொண்ட சமூக அமைப்பேயாகும். ஆதலால் தற்கொலை செய்வோரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புத்தான் தற்கொலைக்குக் காரணம் என்று வெறுமனே கூறுவது தவறான முடிவாகும். ஒருவரைத் தற்கொலைக்குத் தள்ளிவிடும் சமூகக் காரணங்களைக் கண்டு கொள்வதற்குப் பதிலாக ஒருவரது முற்கோபம், மது பாவனை, மனநோய், மன அழுத்தம், கோழைத்தனம் என்றெல்லாம் காரணங்கள் கற்பிப்பது உண்மையான சமூகப் பின்புலச் சூழலை ஆராய மறுப்பதன் நிலைப்பாடாகும். எனவே இன்றைய ஈவிரக்கமற்ற கொடிய சமூக அமைப்பைக்



கண்டு கொள்ளவும் மாற்ற முற்படாதும் தற்கொலைகளைத் தடுக்க முடியாது. இதனைக் கூறி தற்கொலைகளை நியாயப்படுதவும் முடியாது. ஏற்றத்தாழ்வற்ற எல்லோரும் எல்லாவற்றையும் பெறக் கூடிய ஒரு சமத்துவம் மிக்க சமூக அமைப்பினால் மட்டுமே தற்கொலைகளைத் தடுத்து நிறுத்த முடியும். அதனை நடைமுறைப்படுத்திய சமத்துவ சமூக அமைப்புகள் கடந்த நூற்றாண்டில் இருந்து வந்தன. அங்கே தற்கொலைகள் மிக அரிதாகவே இடம்பெற்றன என்பது நினைவு கொள்ளத்தக்கதாகும்.



# சமூகத்தின் போட்டியும் உழைப்பு சக்தியும்

ப□ரெ□க்ற் ஏங்கல்ஸ்

நமது இன்றைய சமூகத்தில் நிலவுகின்ற போட்டி முறையினால் ஏற்படுகிற நேரடியான விளைவு உழைப்புச் சக்தி மேலும் வீணாவதே. ஏனென்றால் இந்தப் போட்டி வேலை செய்யத் தயாராகவுள்ள, ஆனால் ஒரு வேலையும் கிடைக்காத வகையற்ற தொழிலாளர்களை ஏராளமான எண்ணிக்கையில் ஏற்படுத்துகிறது. சமூகம் உழைக்கும் அணியை உண்மையான வகையில் பயன்படுத்திக் கொள்வது பற்றிய கவனிக்கக் கூடிய வகையில் எவ்விதத்திலும் அமைக்கப்படாததால், ஒவ்வொரு தனிநபரும் தனக்கு லாபம் கிடைக்கக் கூடிய வழியைத் தேடிக்கொள்ளுமாறு விடப்படுவதால், உண்மையாக அல்லது பார்வைக்கு மட்டும் பயனுள்ள வேலை பங்கிட்டுத்தரப்படுகிற பொழுது அதிகமான எண்ணிக்கையுள்ள தொழிலாளர்களுக்கு ஒரு வேலையும் கிடைக்காது போவது மிகவும் இயற்கையானதே. மேலும் இந்த மூர்க்கத்தனமான போட்டி ஒவ்வொருவரையும் தன்னுடைய முழு சக்தியையும் தீவிரமாகப் பயன்படுத்துமாறு, சாதகமான எல்லா வழிகளையும் கையாளுமாறு அதிக விலையுள்ள உழைப்புக்குப் பதிலாகக் குறைந்த விலையுள்ள உழைப்பைப் பயன்படுத்துமாறு- நாகரீக முன்னேற்றம் இதற்கு மேலும் மேலும் அதிகமான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கிறது- நிர்ப்பந்திப்பதால், வேறு வார்த்தையில் சொல்வதென்றால், ஒவ்வொருவரும் மற்றவர்களை வகையற்றவராகச் செய்வதற்கு, மற்றவர்களின் உழைப்பை ஏதாவதொரு வழியில் அகற்றுவதற்குப் பாடுபட வேண்டியிருப்பதால், இது மேலும் நிச்சயமாக நடக்கும். ஒவ்வொரு நாகரீக சமூகத்திலும் வேலை செய்வதற்குத் தயாராகவுள்ள ஆனால் வேலை கிடைக்காதவர்கள் ஏராளமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை சாதாரணமாகச் சொல்லப்படுவதைக் காட்டிலும் மிகவும் அதிகமாகும். எனவே இவர்கள் ஏதாவதொரு வழியில் தங்களைத் தவறாகப் பயன்படுத்துவதை, பிச்சையெடுப்பதை, தெருக்களைக் கூட்டுவதை, தெருமுனைகளில் நின்று கொண்டிருப்பதை, ஏதாவது சில்லறை வேலைகளைச் செய்து தங்கள் உடலில் உயிரை மட்டுமே ஒட்டிவைத்துக் கொண்டிருப்பதை, பலவிதமான சாதாரணப் பொருள்களை விலை கூவி விற்பனை செய்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அல்லது இன்று மாலையில் நாம் பார்த்த ஏழைப் பெண்களைப் போல கையில் ஒரு வாத்தியத்தை வைத்துக் கொண்டு ஒவ்வொரு இடமாகச் சென்று, பணத்துக்காக ஆடிப்பாடி ஏதோ சில சில்லறைக் காசுக்களுக்காக எல்லாவகையான வெட்கமற்ற பேச்சுக்களையும் கேட்டுக் கொள்வதும், அவமானமுண்டாக்கும் தூண்டுதல்கள் ஒவ்வொன்றையும் சகித்துக் கொண்வதுமாக இருக்கிறார்கள். இவர்களில் எத்தனை பேர்கள் கடைசியாக விபசாரப் படுகுழியிலே விழுந்து அழிந்து போகிறார்கள். அன்பர்களே! ஏதாவதொரு வழியில் விபசாரத்திலே ஈடுபடுவதைத் தவிர வேறு வழியில்லாத இந்த வகைற்றவர்களின் எண்ணிக்கை ஏராளமாகும். நமது ஏழைகள் நிவாரண இலாகாவின் அதிகாரிகள் இதைப் பற்றி உங்களிடம் இன்னும் அதிகமாகச் சொல்ல முடியும். எனினும் இவர்களால் எந்தப் பயனும் இல்லை என்றாலும் கூட, சமூகம் ஏதாவதொரு வழியில் இவர்களுக்கு உணவு கொடுக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள். இவர்கள் வாழ்வதற்கான செலவைச் சமூகம் ஏற்றுக்கொள்ளுமானால், வேலையில்லாதவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான பொருளை கௌரவமாகச் சம்பாதிப்பதற்குரிய வழியைச் சமூகம் காட்ட வேண்டும். ஆனால் இன்றுள்ள போட்டிமுறைச் சமூகத்தால் இதைச் செய்ய முடியாது.

அன்பர்களே! நீங்கள் இவற்றைப் பற்றிச் சிந்தித்தால்- நமது இன்றைய சமூகம் அதனுடைய உழைப்பு அணியை எப்படி வீணாக்குகிறது என்பதற்கு மேலும் பல உதாரணங்களை நான் கொடுக்க முடியும்- இதைப் பற்றி நீங்கள் சிந்தித்தால் மனித சமூகம் அபரிமிதமான உற்பத்திச் சக்திகளைத் தன் கையில் வைத்திருக்கிறது. அவற்றைப் பகுத்தறிவுக்கேற்ற வகையில் திருத்தியமைத்து, வினியோகத்தை ஒழுங்குபடுத்திவிட்டால், எல்லோருக்கும் மிகவும் அதிகமான நன்மை கிடைக்கக் கூடிய வகையில் அது பயன்பட முடியும் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். சமூக நடவடிக்கைகளை நியாயமான முறையில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கும் பொழுது, தனிநபர்கள் வேறு எந்த விதமான நடவடிக்கையிலும் ஈடுபட முடியாத அளவுக்கு அதிகமான உழைப்புச் சுமையைத் தாங்க வேண்டியிருக்கும் என்ற அச்சம் எந்த அளவுக்கு ஆதாரமற்றது என்பதைப் பற்றி நீங்களே இதிலிருந்து முடிவு செய்யலாம். இதற்கு மாறாக, இப்படிப்பட்ட ஒரு அமைப்பு ஏற்பட்டால் ஒரு தனிநபரின் இப்போதைய உழைப்பு நேரம், இதுவரை உபயோகப்படுத்தப்படுகின்ற உழைப்பைப் பயன்படுத்தி பாதியாகக் குறைத்துவிடலாம் என்று கூற முடியும்.

இப்பொழுது வீணாகின்ற உழைப்புச் சக்தியைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமாக பல நன்மைகள் விளையும் என்று கம்யூனிஸ்டு அமைப்பு சொல்கிறது. எனினும் இதுவே மிக முக்கியமானதல்ல. தனிப்பட்ட உழைப்புச் சக்திகளை சமூகச் சக்தியாக, கூட்டுச் சக்தியாக இணைப்பதிலும், இதுவரை ஒன்றையொன்று எதிர்த்து நின்ற சக்திகளை ஒன்று சேர்ப்பதும், அதை அடிப்படையாகக் கொண்ட அமைப்பை ஏற்படுத்துவதிலேதான் உழைப்புச் சக்தியின் மிக அதிகமான சேமிப்பு அடங்கியிருக்கிறது.

1845 பிப்ரவரி 8ந் தேதியன்று

நிகழ்த்திய சொற்பொழிவில் இருந்து ஒரு பகுதி

# தமிழ் நாட்டு இழுவைப் படகுகளால் அவதியுறும் இலங்கை மீனவர்கள்

இலங்கைக்குச் சொந்தமான கடற்பரப்பில் இந்தியப் படகுகள் ஊடுருவி மீன், இறால், கடல் அட்டை என்பனவற்றை அள்ளிச் செல்கின்றன. இந்தியத் தரப்பினரும் இந்திய அரசியல்வாதிகளும் குறித்த மீன்பிடி வள்ளங்கள் தவறுதலாகவே இலங்கைக் கடற்பரப்புக்குள் வருவதாகக் கூறி அவர்கள் மீது கருணை காட்டுமாறு வலியுறுத்துகின்றனர். ஒரு சில படகுகள் தவறுதலாக ஊடுருவுகின்றன என்று கூறினால் அதை நாம்



ஏற்றுக்கொள்ள முடியும். இரண்டாயிரம் படகுகள் ஊடுருவதென்பது தவறுதலான செயல் அல்ல. இலங்கைக் கடற்பரப்புக்குள் பிரவேசித்து கடல் உணவுகளை பிடித்து வருமாறு இழுவைப் படகுகளை உரிமை கொண்டுள்ள தமிழ்நாட்டு எம்பிக்களும், அமைச்சர்களும் அரசியல்வாதிகளும் மீனவர்களுக்குக் கட்டளை இடுகின்றனர். அந்தப் படகு மீன்பிடி முதலாளிகளிடம் தொழில் புரியும் அன்றாட உழைப்பாளர்களான தமிழக மீனவர்கள் தமது பிழைப்புக்காக எல்லை மீறி வந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். அதேவேளை இலங்கை மீனவர்கள் குறிப்பாக வடக்குக்கிழக்கு மீனவர்கள் இவ் இந்திய இழுவைப் படகுகளினால் கடுமையான தொழில் பாதிப்புகளுக்கு உள்ளாகி அல்லற்பட்டு வருகின்றனர்.

"இந்திய இழுவைப் படகுகள் யூன் மாதத்திலும் ஒக்டோபர் மாதத்திலுமே இங்கு வருவதில்லை"

இந்தப் படகுகள் பெரிய எண்ணிக்கையில் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார்வரை வருகின்றன. நாகப் பட்டினம் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வரை வருகின்றன. அந்தப் படகுகள் முல்லைத்தீவிலும், புல்மோட்டையிலும் அண்மையில் காணப்பட்டன. கொக்களாய், நாயாறு பகுதிகளிலும் இந்திய ஊடுருவல் இடம் பெற்றதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டு வாரங்களுக்கு முன் எட்டு ஒன்பது கிலோமீட்டர் தூரத்தில் கல்பிட்டியின் உச்சிமுனை தீவுக்கு அண்மித்து இந்திய இழுவைப் படகுகள் காணப்பட்டன. இவ்வாறான இந்திய ஊடுருவல் இடம்பெறும் நாட்களில் இலங்கை மீனவர்கள் அவ்விடத்தைவிட்டு விலகுகின்றனர். இந்தியப் படகுகளால் தமது படகுகளின் என்ஜின்கள், வலைகள் சேதமாக்கப்படுவதைத் தவிர்க்குமுகமகவே இதைச் செய்கின்றனர். கடற்படுக்கையின் ஆழத்தில் இரும்பு பாளங்களால் இழுக்கும் போது கடலடியில் உள்ள அனைத்தும் அழிவடைகின்றன. பவளப் பாறைகள், கடற் தாவரங்கள் என்பன கிளறப்படுகின்றன. இவற்றின் மீதே மீன்கள் முட்டையிடுகின்றன. கடலடி கிளறப்படுவதால் மீன் முட்டைகள் சேதமாகின்றன. இனப்பெருக்கம் பாதிக்கப்பட்டு மீன்வளம் குறைவடையும் அபாய நிலை ஏற்படும்.

வடமாகாணத்தில் முழுநேர மீன்படித் தொழில் இருபத்தைந்தாயிரம் (25,000) பேர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்கள் குடும்ப அங்கத்தவர்களையும் சேர்த்தால் அந்த எண்ணிக்கை ஒரு இலட்சமாகும் என மாட்டின் பாவின்க் (Marten Bavinck) என்ற டச்சுக்கார ஆய்வாரள் கூறுகிறார். 30 வருட யுத்தத்தின் போது இந்த மீன்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

சென்ற வருடம் பருத்தித்துறைக்கு அப்பால் பல இந்திய இழுவைப் படகுகளை மீனவர்கள் கைப்பற்றியிருந்தனர். எமது அதிகாரிகளோ அந்தப் படகுகளை வரைவதாக விடுவித்தது மட்டுமல்லாமல் இந்த மாதிரி நடவடிக்கைகளில் எமது மீனவர்கள் ஈடுபடக் கூடாதெனவும் எச்சரிக்கப்பட்டனர்.

இலங்கை அதிகாரிகளுக்கும் இந்திய அதிகாரிகளுக்குமிடையில் அவ்வப்போது பல வருடங்களாகப் பேச்சுவார்த்தை இடம்பெற்று வந்துள்ளது. இவையாவும் பெரிய அண்ணனின் திமிர்த்தனத்தால் எதுவித பலனையும் எட்டவில்லை. பாதிகப்பட்ட மீனவர்கள் தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டணியினர் மௌனம் சாதிக்கின்றனர். மீனவர் பிரச்சினையைப் பற்றிக் கதைத்தால் தொப்பிள் கொடி உறவு அறுந்துவிடும் என அஞ்சி மௌனம் காக்கின்றனர். அதே வேளை இந்திய இலங்கை அரசாங்கங்கள் இருதரப்பு மீனவர் பிரச்சினையையும் மோதல்களையும் அத்துமீறல் களையும் வைத்து தத்த மது அரசியல் லாபங்களைப் பெறுகின்றனர். தமிழ்நாட்டு திராவிடக் கட்சிகள் இந்திய இலங்கை மீனவர் பிரச்சினையில் குளிர்காய்ந்து மீன் முதலாளிகளின் பக்கம் நிற்பதுடன் தமக்கான வாக்கு வங்கிக்கும் ஏற்றவாறு நடந்து கொள்கின்றனர்.

**பாதிகப்பட்ட மீனவர்கள் தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டணியினர் மௌனம் சாதிக்கின்றனர். மீனவர் பிரச்சினையைப் பற்றிக் கதைத்தால் தொப்பிள் கொடி உறவு அறுந்து விடும் என அஞ்சி மௌனம் காக்கின்றனர்.**

# வடபுலத்தில் பெருகிவரும் மது - சீட்டு - வட்டி மக்களை வாட்டி எடுக்கின்றன!

என்ன வளம் இல்லை எங்கள் திருநாட்டில் என்றொரு சினிமாப் பாடல் வரி உண்டு. அதே போன்று என்ன சீரழிவு இல்லை எமது நாட்டில் என்றே கேட்கத் தோன்றுகிறது. இதனை இன்றைய வடபுலத்திற்குப் பொருத்திப் பார்ப்பது அவசியம். குறிப்பாகக் குடாநாட்டில் மதுப்பாவனை முன் எப்போதையும் விடப் பயங்கரமாக அதிகரித்திருப்பதாக கலால் திணைக்களம் அறிவித்துள்ளது. கடைசியாகக் கிடைத்த புள்ளி விபரப்படி நாள் ஒன்றில் ஒரு கோடி ரூபா (10மில்லியன்) பெறுமதியான மதுபானங்கள் விற்பனையாகிறது எனக் தெரிவிக்கப்படுகிறது. சாராயம், பியர், மற்றும் வெளிநாட்டு மதுவகைகள் என மது விற்பனை நிலையங்களிலும் ஏனைய மதுபான உணவக ங்களிலும், சிறிய பெரிய உல்லாச விடுதிகளிலும் தாராளமாக விற்கப்படுகின்றன. இவற்றுக்குரிய அனுமதியை அரசாங்கமே வழங்கி வருகிறது. ஆனால் மது ஒழிப்புப் பற்றியும் அதே அரசு நீட்டி வாசிக்கிறது.

இம் மதுப் பாவனையில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி, மாணவர்கள் முதல் இளைஞர்கள் வயது வந்தோர் எனப் பல தரத்தினரும் ஈடுபட்டு வருகின்றனர். யாழ் பல்கலைக்கழகத்தை அண்மித்த நாலாதிக்குகளிலும் பதினாறுக்கு மேற்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. குடாநாட்டில் ஒரு நாளைக்கு ஒருகோடி (பத்து மில்லியன்) ரூபாவிற்கு மதுபான வகைகள் விற்கப்படுகின்றன என்றால் நிலைமை எவ்வளவு மோசமானதாக உள்ளது என ஊகிக்கலாம். இதற்குள் கள்ளு விற்பனையும் உள்ளடக்கம். கடந்த வருடத்தில் கள்ளு விற்பனை 60 லட்சம் லீற்றராகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான மதுப்பாவனையானது சமூகத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் நாளாந்தம் ஏற்படுத்திவருகின்றன. சாதாரண குடும்பச் சண்டை சச்சரவுகள், தொடக்கம் குழுச் சண்டைகள், கும்பல் வன்முறைகள் தற்கொலைகள் என நீள்கின்றன. கொலைகள் இடம்பெறுவதுடன் பெண்கள் சிறுவர்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுக்கும் மதுப்பாவனை பிரதான காரணமாகிறது. குறிப்பாக இளந்தலைமுறையினர் இதில் மும்முரமாக இறங்கி நிற்கின்றனர். இத்தகைய இளைஞர்களின் வெளிநாடுகளில் உள்ள உறவுகள் மூலம் வரும் பணம் பேருதவி புரிகின்றது. மேற்படி பணமானது இளைஞர்களுக்கு தேவையற்ற வழிகளுக்கும் மதுப்பாவனைக்கும் ஏனைய ஆடம்பர நுகர்வுக்கும் செலவாகிறது. இத்தகைய சீரழிவுகளுடன் வீதி விபத்துகளும் இறப்புகளும் இடம்பெறுகின்றன. இவ்வாறு இளம் தலைமுறையினர் சீரழிந்து போவதை ஆளும் வர்க்கமாக உள்ளவர்கள் தாராளமாக விரும்புகிறார்கள். அதனால் அவற்றை ஊக்குவிப்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ளனர். இளம் தலைமுறையினர் சமூக அக்கறையும் அரசியல் நாட்டமும் கொண்டவர்களாக வளர்வதைத் திசை திருப்பி \'பெரும்குடி" இளைஞர்களாக மாற்றி விட்டால் மதுப் பிரியர்களாகவும் மது அடிமைகளாகவும் சீரழிந்து கொள்வது ஆளும் வர்க்கத்தினருக்கு தேவையும் பாதுகாப்புமாகும். அதனாலேயே அரசாங்கம் மதுப்பாவனையை ஊக்குவிக்கும் முகமாக தாராள அனுமதியை மதுக்கடைகளுக்கு வழங்கி வருகிறது. இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாக்கல் நிகழ்ச்சி நிரலின் கீழே மேற்படி மதுப்பாவனையும் சமூகச் சீரழிவுகளும் முன் தள்ளப்படுகின்றன என்பது மக்கள் மத்தியில் உணரப்படுவது அவசியமாகும்.

<u>**சீட்டும் மீற்றர் வட்டியும் பெரும் பிரச்சினையாகிறது**</u>

வடபுலத்தில் சீட்டுப் பிடித்தலும் மீற்றர் வட்டியும் பல்வேறு பிரச்சினைகள் நெருக்கடிகளை மக்கள் மத்தியில் தோற்றுவித்து வருகின்றன. இவற்றால் எழும் பிரச்சினைகள் பொலீஸ் நிலையங்கள் வரை சென்று நிற்கின்றன. சீட்டுப் பிடிப்போ ரும், சீட்டுக் கட்டுவோரும், சீட்டு எடுத்தவர்களும் ஒருவரை ஒருவர் ஏமாற்ற முற்பட்டு இவர்களிடையே ஏற்படும் பிரச்சி னைகள் பல குடும்பங்களைப் பாதித்து வருகின்றன. இத் தரப்பினர்களிடையே நம்பிக்கை மோசடி செய்யப்படும் போது பெரும் தொகைப் பணம் ஏமாற்றுதல்களுக்கு உள்ளாகிறது. ஒருவரது கடும் உழைப்பின் மூலம் வரும் வருமானத்தில் ஒரு சிறு பகுதியாவது சீட்டு முறையின் மூலம் சேமிப்பாகியது. இச்சீட்டு முறையானது முழுக்க முழுக்க நம்பிக்கையின் அடிப்படை யிலேயே இடம்பெற்று வந்தது. சீட்டுப் பிடிப்போர் அல்லது சீட்டு முதலாளி என்போர் வாய் வல்லமை அல்லது கடும் தொனியில் பேசுதல், மிரட்டுதல், கண்படி தூஷண வார்த்தைப் பிரயோகம் செய்பவராக இருந்தால் மட்டுமே சீட்டைப் பழுதின்றி நடாத்த முடியும் என்ற நம்பிக்கை இருந்து வந்தது. அதில் மாற்றங்கள் வந்து இப்போது உரிய தவணைக்குப் பணம் கொடுபடாது விட்டால் அதற்கு தண்டமாக பணம் அறவிடும் முறை வந்துள்ளது. சீட்டுப் பிடிக்கும் முதலாளி என்பவர் கட்டுவோரின் முதல் பணத்திலேயே பெருமுதல் சேர்த்து அதனை கூடிய வட்டிக்கு கொடுத்து விட்டு அதன் மூலம் பணம் படைத்தவராகிக் கொள்வதையே காண முடிகிறது. சீட்டு என்பது பரஸ்பரம் உதவி, சேமிப்பு, குடும்ப அடிப்படைத் தேவைகளுக்கு செலவு செய்தல் என்பதாகவே மக்கள் மத்தி யில் பயன்படுத்தப்பட்டது. ஆனால் பண ஆசை பேராசையாகியுள்ள இன்றைய சூழலில் சீட்டு என்பது ஏமாற்றுதல்களுக்கு உரியதொன்றாக மாற்றப்பட்டுவிட்டது. சுருக்கமாகக் கூறின் சீட்டின் மூலம் சும்மா இருந்து பணம் சேகரித்தல் அல்லது குறுக்கு வழிச் சம்பாத்தியத்திற்குச் செல்லவே சீட்டு முறை வழிகாட்டுகிறது. சீட்டுக் கட்டுவோர் சேர்ந்து தனி ஒருவரை சீட்டு முதலாளியாக உருவாக்கிக்கொள்கி றார்கள் என்றே கூறமுடியும். அத்தகையவர் விரைவாகவே அதிக வட்டி மீற்றர் வட்டி வாங்குவோராகின்றார்.

இன்று வடபுலத்துச் சூழலில் வட்டிக்குப் பணம் கொடுத்தலும் வாங்குதலும் பெரு ஓட்டமாக இடம்பெறுகின்றன. வங்கிகளின் தொழிலும் வட்டியேதான். அது சட்டபூர்வமானதாகும். ஆனால் வங்கிகளும் மக்களைச் சுரண்டும் வட்டி முதலாளிகள் போன்றே செயல்பட ஆரம்பித்துள்ளன. வட்டி முறை கூட ஒருவகை உதவி – நம்பிக்கை அடிப்படையிலேயே முன்பு இடம்பெற்று வந்தது. இரண்டு அல்லது மூன்று வீத வட்டியும் குறுகிய கால மீளப் பெறுதலும் ஒரு நியாயமானதாக மக்கள் மத்தியில் பேசப்பட்டது. ஆனால் அண்மைய காலங்களில் பெரும் பணம் சேர்க்கும் பேராசை கொண்ட வட்டியாக மாற்றம் பெற்றுள்ளது. அதுவே மீற்றர் வட்டி என்ற பெயரில் பத்து, இருபது, முப்பது வீதமாக உயர்வடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறத. இத்தகைய வட்டிக்கு கொடுப்போரிடம் பணம் அற்றவர்களே வாங்குகிறார்கள். இரகசியமாக வட்டிக்குப் பணம் கொடுக்க ஆரம்பித்து நாளடைவில் பரகசியமாகவும் அதிகரித்த வட்டிக்கும் பணம் கொடுப்போராக மாறிக் கொள்வர். வட்டியையும் முதலையும் அறவிடும் போது மிரட்டல், கடும் வார்த்தைப் பிரயோகம், தான் சார்ந்த ஊர், சாதி போன்றவற்றையும் கூறி வட்டிக்கும் பணம் பெற்றவரை வெருட்டிச் சண்டித் தனம் காட்டி பணம் அறவிடுவதையும் காண முடிகிறது. இதனால் வட்டிக்குப் பணம் பெற்ற சிலர் தற்கொலைக்குச் சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இன்றைய பொருளாதார நெருக்கடியானது சாதாரண மக்களில் பலரை வட்டிக்குப் பணம் பெறவே வைக்கிறது. வங்கிக்கும் வட்டிக்காரருக்கும் அதனைத் திருப்பிச் செலுத்த முடியாது திண்டாடுகின்ற சூழலையும் காணலாம். அதனால் அதிக வட்டிக்குப் பணம் கொடுப்போரை மக்கள் திட்டித்தீர்த்து வருவதையும் காணலாம். எனவே வட்டிக்குப் பணம் கொடுத்து சும்மாவிருந்து பணம் சம்பாதிக்கலாம் என்ற சிந்தனையும் செயற்பாடும் அடிப்படையில் மக்கள் விரோதச் செயற்பா டேயாகும். இதன் மூலம் பின்தங்கிய சாதாரண மக்களை முன்னேற்ற முடியாது. சாதாரண மக்களும் இதில் முன்னெச்சரிக்கையாக இருப்பது அவசியம். வட்டிக்குப் பணம் பெற்று மீற்றர் வட்டிக்குப் பணம் வாங்கிய எவரும் எந்தத் தொழிலும் முன்னேறியது கிடையாது. வட்டியால் அழிவுற்ற வர்களே அதிகம். வடமராட்சிப் பகுதியில் ஒரு கிராமத்தில் சீட்டு, வட்டி, மீற்றர் வட்டி என்பவற்றை மக்கள் ஒன்று சேர்ந்து தடுத்துள்ளதாக பொலீஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




வடபுலத்தான்

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

21

வெகுஜனன்

2005ம் ஆண்டின் நவம்பரில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவிக்கு வந்ததுடன் யுத்தத்தின் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற பேரினவாத ராணுவத் திட்டம் வேகமடைய ஆரம்பித்தது. இது பற்றிக் காண்பதற்கு முன்பு சமாதான உடன்படிக்கையும் யுத்தம் நிறுத்தம் என்பதும் நடைமுறையில் இருந்த சூழலில் இடம்பெற்ற சில முக்கிய நிகழ்வுகள் பற்றிக் காணுதல் வேண்டும். ரணில் தலைமையிலான அரசாங்கம் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு முன்வைத்த நகல் தீர்வு யோசனைகள் இரண்டையும் புலிகள் நிராகரித்துவிட்டனர். இந்நிலையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்னால் இருந்து வந்த இணைத்தலைமை நாடுகளும் அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வேயும் புலிகள் தமது தீர்வுத் திட்ட யோசனையை




முன் வைக்க வேண்டும் என வற்புறுத்தினர்.

இந்நிலையிலேயே 2003ம் ஆண்டின் நவம்பரில் புலிகள் இயக்கம் வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை முன்வைத்தனர். இதனை அன்றைய பிரதமராக இருந்த ரணிலும் அவரது தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் ஏற்றுக் கொளளவோ அதனை விவாதிக்கவோ முன்வரவில்லை. அதேபோன்று ஜனாதிபதியான சந்திரிகாவும் அவரது தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் எதிர்த்து நின்றனர். இவர்களுக்கும் அப்பால் ஜே.வி.பி. ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்பையும் பேரினவாதப் பிரசாரத்தையும் மேற்கொண்டனர். அதேவேளை சிங்களப் புத்திஜீவிகள் மத்தியில் ஓரளவு நெகிழ்வான கருத்துக்கள் நிலவின. புலிகள் தமது தனித் தமிழீழத்திற்கான நிலைப்பாட்டிலிருந்து ஒருவகைச் சம'டி முறைமைக்கு கீழிறங்கி வந்துள்ளனர். எனவே முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை பற்றி கலந்து பேசி இருதரப்புகளும் ஷமாற்றங்களும்' விட்டுக் கொடுப்புக்களுக்கும் வந்து கொள்ள முடியும் எனச் சிலர் நம்பிக்கை தெரிவித்தனர். ஆனால் அத்தகைய கருத்துக்கள் பேரினவாதப் பரப்புரைகள் மத்தியில் மேல் கிளம்ப முடியவில்லை.

மேற்படி இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்ட ஆலோசனையில் புலிகளால் முன்வைக்கப்பட்டவற்றில் சில கவனத்திற்குரியனவாகக் காணப்பட்டன. மேற்படி சபை வடக்குக் கிழக்கை உள்ளடக்கியதாக அமையும் போது தமிழ்ப் பிரதிநிதித்துவத்துடன் முஸ்லீம் பிரதிநிதித்துவமும் சிங்கள பிரதிநிதித்துவமும் உள்ளடங்குவதைச் சுட்டிக் காட்டியது. குறிப்பாக மாவட்ட பிரதிநிதித்துவத்தில் சகல இனங்களினது பங்குபற்றல் அவர்களது விகிதாசாரத்தில் இருக்கும் எனப்பட்டது. சுயாதீனமான மனித உரிமை ஆணையம் உருவாக்கப்படுதல். மதசார்பின்மையைப் பின்பற்றுதல். ஐந்து வருடங்களுக்கு நீடிக்கும் இவ் இடைக்கால சபை அதன் பின் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களின் பிரசன்னத்துடன் சுயாதீனத் தேர்தலை நடாத்துவது. இவற்றை விட முக்கியமான அம்சம் வடக்கு கிழக்கின் அரசாங்கப் பொதுக் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் அதிகாரத்தை மேற்படி இடைக்கால சபை தன் பொறுப்பில் கொண்டிருக்கும் என்பதாகும். இவ்விடயம் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையின் வளர்ச்சியிலும் வரலாற்றிலும் முக்கியமானதாகும்.

ஆனால் மேற்படி இடைக்கால தன்னாட்சி அதிகார சபையைப் பேரினவாதிகளும் அவர்களது அரசாங்கமும் எதிர்க் கட்சியில் இருந்தவர்களும் கடுமையாக எதிர்த்து நின்றனர். அதேவேளை புலிகள் இயக்கம் கொண்டிருந்த நிலைப்பாடானது இரண்டு தேசக் கொள்கையை அடிப்படையாக வைத்தே மேற்படி இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஆலோசனையை முன்வைத்திருந்தது என்ற சந்தேகம் பொதுவாகவே காணப்பட்டது. அதனால் அவ் ஆலோசனைத் திட்டம் விவாதிக்காமலே நிராகரிப்புக்கு உள்ளாகியது. அதேவேளை சமாதான உடன்படிக்கையும் யுத்த நிறுத்தமும் பெயரளவில் தொடர்ந்து இருந்து வந்தது.

இந்நிலையில் 2004ம் ஆண்டு டிசம் பர் 26ம் திகதி காலையில் சுனாமி என்றழைக்கப்பட்ட ஆழிப் பேரலை இலங்கையின் வடக்கு கிழக்கு தெற்கு மேற்கின் சில பிரதேசங்கள் உட்பட கரையோரங்களை கடுமையாகத் தாக்கி அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டது. இவ் ஆழிப் பேரலையின் பயங்கரத்தையும் அதன் நாசகாரமான அழிவுகளையும் அது தாக்கிக் கொண்ட கரையோர மக்கள் பெரும் துயராகவும் பேரழிவுகளாகவும் அனுபவித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. அரைமணி நேரத்திற்குள் பல ஆயிரக்கணக்கான மக்கள் இப்பேரலையால் அடித்தும் இழுத்தும் செல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்கள் வெற்று உடல்கள் கூடக் கிடைக்கவில்லை. மீனவர்களினதும் ஏனைய கரையோரங்களில் இருந்து வந்த ஏனையவராலும் தொழில் ஆதாரங்களும் வீடு வாசல்களும் அழிவுற்றன. வர்ணிக்க வார்த்தைகள் இல்லாத இழப்பின் சோகங்களுடன் மக்கள் நிர்க்கதிக்கு ஆளாகினர். இதில் வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய ஆறு மாவட்டங்கள் மிகப் பெரும் அழிவுகளைக் கண்டது. அவ்வாறே சிங்கள மக்களைப் பெரும்பான்மை யாகக் கொண்ட அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத்துறை, கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய மாவட்டங்களின் கரையோரங்களும் கடும் பாதிப்பைப் அடைந்தன.

இவ் ஆழிப் பேரலையைத் தொடர்ந்து வெளிநாடுகளின் உதவிகள் பெருந்தொகையில் அரசாங்கத்திற்கும் அரசுசாரா நிறுவனங்களுக்கும் தாராளமாகக் கிடைத்தன. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கென வந்த பெரும் தொகைப் பணம் பெரும் பெரும் அரசியல் தலைமைப் புள்ளிகளின் பைகளைச் சென்றடைந்த பல கதைகள் உண்டு. அதேபோன்று புலிகள் இயக்கத்திற்கும் பெரும் தொகைப் பணம் வந்தடைந்தது. இருப்பினும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் தமக்குக் கிடைத்த வெளிநாடுகளின் உதவிகொண்டு நிவாரணம் வழங்க முன்வந்தது. ஆனால் வடக்குக் கிழக்கின் பெரும்பகுதி குறிப்பாக ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்கள் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இப் பிரதேசங்களில் சுமார் முப்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் ஆழிப் பேரலையால் விழுங்கப்பட்டிருந்தனர். பிள்ளைகளை இழந்த பெற்றோர் பெற்றோரை இழந்த பிள்ளைகள் கணவன்மாரை மனைவிமாரை இழந்த குடும்பங்களன் என நிர்க்கதிக்கு ஆளாகினர். புலிகள் இயக்கம் கூடப் பெரும் இழப்புக்களை இக்கரையோரப் பிரதேசங்களில் சந்தித்துக் கொண்டது. கடற்புலிகளின் பிரதான தளமாக விளங்கிய முல்லைத்தீவின் சாலை முதல் மட்டக்களப்பு திருகோணமலை யாழ்ப்பாணம் கிளிநொச்சி கரையோரத் தளங்களும் பயிற்சி முகாம்கள் வரை அழிவுகளைச் சந்தித்துக் கொண்டன.

இத்தகைய சூழலில் கடும் பாதிப்பைப் பெற்ற வடக்குக் கிழக்கு மக்களுக்கு நிவாரணமும் மறுவாழ்வும் வழங்குவதை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகினர். இதனை நோர்வேயும் இணைத்தலைமை நாடுகள் எனப்பட்டவையும் வலியுறுத்திக் கொண்டன. எனவே அரசாங்கமும் புலிகள் இயக்கமும் வடக்குக் கிழக்கில் சுனாமி நிவாரணத்தை முறையாக வழங்குவதற்கான இணக்கப்பாட்டிற்கு வந்தனர். அதற்கான ஒரு நிவாரண நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கிக் கொண்டனர். இருதரப்பினர்களுக்கிடையிலும் சமூகங்களுக்கிடையிலும் ஒத்துழைப்பதற்கு வசதியளிப்பதற்கான தேவை இருப்பதால் P-Toms என்ற ஒப்பந்தத்தினைச் செய்து கொள்ள இரு தரப்பினரும் இணங்கிக் கொண்டனர். அதாவது சுனாமிக்குப் பின்னரான தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பு ஒன்றை (P-Toms) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) ஒன்றுக்கு அரசாங்கமும் புலிகள் இயக்கமும் இணங்கிக் கொண்டன.

இப் P-Toms அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமானது அமைப்பு என்ற முதலாவது பிரிவு தொடக்கம் நிறைவேற்றுகை என்ற ஒன்பதாவது பிரிவு வரை பல்வேறு பயன் உள்ள நடைமுறைச் சாத்தியமான பிரதான அம்சங்களையும் உப அம்சங்களையும் உள்ளடக்கியிருந்தது. இது நடைமுறைக்கு வந்திருக்குமானால் ஆழிப்பேரலையால் அழிவுகளுக்கும் பாதிப்புகளுக்கும் ஆளாக்கப்பட்ட வடக்குக் கிழக்கின் ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் பயனும் நிவாரண ஆறுதலும் பெற்றிருப்பர். அதுமட்டுமன்றி இம் மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் சிங்கள மக்கள் மத்தியில் புதிய வகைப் புரிந்துணர்வும் ஏற்பட வாய்ப்புகள் அதிகரித்திருக்கும்.

ஆனால் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்குக் கிடைக்க இருந்த நிவாரணத்தை முடக் குவதற்கு ஜே.வி.பி. பரந்துபட்ட எதிர்ப்பிரசாரத்தில் ஈடுபட்டது. அத்துடன் நின்றுவிடாமல் பேரினவாத சட்ட வல்லுனர்களின் தீவிர ஆலோசனை பெற்று உயர்நீதிமன்றத்தில் P-Toms கட்டமைப்பு ஒப்பந்தத்திற்கு எதிரான வழக்கு ஒன்றை தொடுத்து அதில் வெற்றியும் பெற்றுக் கொண்டது. அதன் மூலம் சுனாமியால் வடக்குக் கிழக்கின் அவலங்கள் இழப்புகளுக்கு உள்ளான மக்களுக்கு ஜே.வி.பி தனது பேரினவாத நிலைப்பாட்டின் ஊடாகப் பெரும் துரோகமிழைத்து கொண்டது. இது ஜே.வி.பி. ஒரு சிகப்பு நிறம் தாங்கிய பேரினவாதிகளின் கட்சி என்ற மாக்சிச லெனினிசவரிகளின் கணிப்பை நூற்றுக்கு நூறு வீதம் நிரூபித்துக் கொண்டது.

ஆழிப் பேரலையின் அழிவை எதிர்கொண்ட வடக்குக் கிழக்கு மக்கள் ஏற்க னவே யுத்த அழிவுகளைப் பெற்றுக் கொண்ட மக்களாகவே இருந்துவந்தனர் என்பது கவனத்திற்குரியதாகும். இன்றுவரை ஆழிப் பேரலை கொண்டு வந்த அழிவுகளில் இருந்து மீள முடியாத மக்களாக இருந்து வருவதைப் பலர் மறந்துள்ளனர். 2009ம் ஆண்டின் இறுதி யுத்தத்தின் போது ஏற்பட்ட பேரழிவும் அவலங்களும் பாரிய இழப்புகளும் அகதி வாழ்வும் மட்டு மன்றி இன்றும் மீள் குடியமர்வில் அனுபவிக்கும் துன்பங்க ளும் மக்களின் மனங்களில் இருந்து ஆழிப் பேரலை அழிவுகளை மறக்கச் செய்துள்ளது போலும். இங்கே முக்கி யமாகக் காணவேண்டிய உண்மையும் யதார்த்தமும் யாதெ னில் ஆழிப் பேரலையாலும் யுத்தத் தாலும் பாதிக்கப்பட்டவர்களில் ஏகப் பெரும்பான்மையினர் சாதாரண உழைக்கும் மக்களாகவே இருத்தனர் என்பது தான். அவர்கள் சிந்திய கண்ணீரும் இரத்தமும் இன்றும் காய்ந்து இறுகியவைகளாகவே இருந்து வருகின்றன. புலிகள் இயக்கம் பிரிவினைக்காகவும் தமிழீழத்திற்காகவும் போராடினார்கள் என்பது மறுப்பதற்குரிய ஒன்றல்ல. ஆனால் அவர்களை அவ்வாறு போரட வைத்த அல்லது நிர்ப்பந்தித்த இன ஒடுக்குமுறையின் வரலாற்று வளர்ச்சியை ஏற்றுக் கொள்வதில் அனைத்துத் தென்னிலங்கையின் பாராளுமன்ற அரசியல் கட்சிகளும் மிகப் பெரும் வரலாற்றுத் தவறினை இழைத்தன. இது தெரியாமல் இடம் பெற்ற தவறு அல்ல. ஆளும் வர்க்க முதலாளித்துவ அரசியலும் பேரின வாத நிலைப்பாடுகளுமே அடிப்படைக் காரணங்களாகும்.

இத்தகைய ஜே.வி.பி. ஆழிப்பேரலை நிவாரணக் கட்டமைப்பை உயர்நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்று அதனைச் செயல்பட விடாது தடுத்துக் கொண்டதுடன் நின்றுவிடவில்லை. அந்த உற்சாகத்தில் பத்தொன்பது வருடங்களாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இருந்து வந்த வடக்குக் கிழக்கு ஒரே மாகாண அலகாக இருந்து வந்ததையும் உயர்நீதிமன்ற வழக்கின் மூலம் பிரித்துக் கொண்ட பேரினவாத கைங்கரியத்தையும் செய்து கொண்டது. இதற்கான முன் ஆலொசனையையும் வழிகாட்டலையும் பேரின வாதச்சட்ட வல்லுனர்கள் மட்டுமன்றி நீதித்துறையின் உச்சத்தில் இருந்தவர்களும் இணைந்தே செயலாக்கினர். நீதித்துறை சுயாதீனமானதும் சுதந்திரமானதும் பக்கசார்பற்றதும் என்று கட்டமைத்துப் பரப்புரை செய்யப்பட்டு வந்தமையானது இதில் வெட்ட வெளிச்சமாகி அம்பலமாகிக் கொண்டது.

அடுத்து ஜனாதிபதியாக மகிந்த ராஜபகஷ தெரிவு செய்யப்பட்ட பின்பு யுத்தம் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்பதை அடுத்த இதழில் காண்போம்.

# இலங்கை சீன உறவு:

## ஆசைகளும் அச்சங்களும்

**தேசபக்தன்**

இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான உறவு வலுப்பது எவ்வளவு தூரம் அமெரிக்க, இந்திய அரசாங்கங்களின் கவலையென்று சொல்லுவது கடினம். ஆனால் இங்கே ஊடகங்களிலும் குறிப்பிட்ட சில அரசியற் கட்சிகளிலும் உள்ளவர்கட்கு அது பெருங் கவலையாக உள்ளது.

சில மாதங்கள் முன்பு சீன இராணுவ உயரதிகாரி ஒருவர் வந்து போனதைப் பற்றிப் பெரிதும் அமர்க்களப்படு த்தினார்கள். அதே அதிகாரி பின்பு இந்தியாவிற்கும் பயணம் மேற்கொண்ட கதை அதிகம் பேசப்படவில்லை. இம்முறை சனாதிபதி ராஜபக்ஷவும் குழுவினரும் சீனப்பயணத்தின் போது பெருந்தொகையான கடனுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். இலங்கை – சீனா பாதுகாப்பு உடன்படிக்கை யும் பல்வேறு பொருளாதார உடன்படிக்கைகளும் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் ஒவ்வொன்றுமே பெரிய பிரச்சினையாக்கப்பட்டுள்ளது.

சில வாரங்கள் முன்பு சீனக் கடற்படைக் கலங்கள் சில இலங்கையில் தரித்துச் சென்றதும் பெரிதும் பேசப்பட்டது.

இவ்வாறான கவலைகள் யாவும் சீனா இந்து சமுத் திரத்தில் தனது கடலாதிக்கத்தை மேம்படுத்த முயல்கிறது, அதற்காக இலங்கையைத் தளமாக்க முயல்கிறது, தனது ஆதிக்கத்தை முழுமைப்படுத்துவதற்காக இலங்கையில் பொருளாதாரத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயல்கிறது என்ற விதமான சிந்தனைகளை அடிப்படை யாகக் கொண்டவை.

இலங்கையின் இறைமை 1978 இல் தொடங்கிய திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் வலுவிழக்கத் தொடங்கியது. இக்கொள்கை இலங்கையின் தேசிய பொருளாதாரம் வளரத் தடையாயிருந்ததுடன் நுகர்வுப் பொருளாதார வளர்ச்சிக்கும் வழி கோலியது. தவறான பொருளாதாரக் கொள்கைகளால் இலங்கை இன்று பெரிய கடனாளி நாடாக மாறியுள்ளது.

1977 முதல் அயற் கொள்கையில் யூ.என்.பி. ஆட்சி மேற்கொண்ட அமெரிக்கச் சார்பு நிலைப்பாடு இந்தியாவுடன் முரண்பாடுகளை ஏற்படுத்தியது. அதன்பின்பு தேசிய இனப்பிரச்சினையைப் போராக்கியதன் மூலம் இலங்கை பல்வேறு நாடுகளினதும் இராணுவ உதவியை நம்பியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இவை மகிழ்ச்சிக்குரிய விடயங்களல்ல. எனினும், இலங்கையின் பேரினவாத அரசாங்கம் விடுதலைப்புலிகளை அழிக்கக் கைகொடுத்த மேற்குலகும் இந்தியாவும் இலங்கை அரசாங்கத்தின் மீது இன்று கடுப்புடன் உள்ளன. எனினும் அவற்றால் இங்கு ஒரு ஆட்சிக் கவிழ்ப்பையோ நேரடிக் குறுக்கீட்டையோ மேற்கொள் இயலாதுள்ளது. மேற்குலகு விரும்பும் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதற்குச் சாதமாக இங்கு அரசியற் சூழ்நிலை இல்லை. இந்தியா விரும்பியவாறு இலங்கை அரசாங்கத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குட் கொண்டுவருவதும் இயலு மாக இல்லை.

ராஜபக்ஷ ஆட்சி அமெரிக்காவி னதும் இந்தியாவினதும் பலவீனங்களை அறிந்து அவற்றைப் பயன்படுத்துகிறது. சீனாவுடனான நெருக்கத்தை இரண்டு நாடுகளும் விரும்பாமைக்குக் காரணம் சீனா அவற்றுக்கு மிரட்டலாக இருப்பதல்ல. மாறாக அமெரிக்கா சீனாவை மிரட்டிப் பணிய வைப்பதற்கு வகுத்து வரும் திட்டங்களைச் சீன ராஜதந்திரமும் பொரு ளாதார உதவிகளும் முறியடித்த வருகி ன்றன. இலங்கையை மிரட்டிப் பணிய வைப்பதற்குச் சீனா ஒரு தடையாக உள்ளது என்பது அமெரிக்காவினது கவலை மட்டுமல்ல அது இந்தியா வின் கவலையுமாகும். இந்தியா விற்கும் சீனாவிற்கும் இலங்கையில் நேரடிப் போட்டி இறக்குமதி வணிகத் துறையில் உள்ளதல்ல. ராணுவத் துறையிலும் சீன- இந்தியப் போட்டியென எதுவுமில்லை. இலங்கையின் 'அபிவிருத்தி' முதலீடுகள் சார்ந்து போட்டிகள் உள்ளன. அவற்றின் பொருளாதாரப் பரிமாணங்கள் ஒருபுறம் இருக்க, இலங்கை அரசின் மீதான செல்வாக்குப் பற்றிய போட்டியுள்ளது.

இலங்கை மீதான செல்வாக்கு எதற்கானது என்பதில் வேறுபாடுண்டு. இந்தியாவிற்குத் தனது தென்னாசிய மேலாதிக்கத்திற்கு இலங்கை மீது செல்வாக்க அவசியம். சீனாவுக்குத் தனது கடல் வணிகம், பாதுகாப்புப் போன்றவற்றுக்கு எதிரான அமெரிக்க மிரட்டலையும் முற்றுகையையும் தவிர்க்க இந்து சமுத்திரப் பிரதேசத்தில் நட்புச் சக்திகள் தேவை. சீனாவுக்கு எதிராக இலங்கையை அமெரிக்கா பாவிக்க இயலாமல் இருப்பது சீனாவுக்குப் போதுமானது. கடந்த 60 ஆண்டுகளாக இலங்கையின் எந்த ஆட்சி மாற்றமும் சீனாவின் எந்தத் திசைமாற்றமும் இலங்கை சீன உறவைக் குலைக்காமற் பாதுகாப்பதில் சீனா கவனமாக இருந்துள்ளது. எனவே சீன நோக்கங்களை இந்திய, அமெரிக்க நோக்கங்களினின்று விலக்கிப் பார்க்க வேண்டியுள்ளது.

சீனா இலங்கையுடன் செய்துள்ள பாதுகாப்பு உடன்படிக்கை அமெரிக்காவும், இந்தியாவும் செய்துள்ளவற்றினும் முக்கியம் குறைந்தது. இலங்கைக்குச் சீன ராணுவ அதிகாரிகளும் கடற்படைக் கலங்களும் வந்து போவதைப் பற்றிக் கவலைப்படுவோருக்கு அதே காலப்பகு தியில் அவுஸ்திரேலிய, யப்பானியக் கடற் படைக்கலங்கள் வந்து போனதோ அமெரி க்கக் கடற்படை தனது பயிற்சிகளை இலங் கைக் கடற்படையுடன் சேர்ந்து இலங் கைக் கடற்பரப்பில நடத்தியதோ கவலை தரவில்லை.

சீன-இலங்கை நெருக்கம் பற்றிய ஊடகக் கவலைகட்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. ஒன்று, இலங்கை மீது மேற்குலகினதும் முக்கியமாக அமெரிக்காவினதும் இந்தியாவினதும் ஆதிக்கத்திற்குச் சீனா ஆப்பு வைக்கிறது என்பது. மற்றது ராஜபக்ஷ ஆட்சியைக் கவிழ்ப்பதற்குத் தடையாகச் சீனா இருக்கிறது என்பது.

சீனாவின் பொருளாதார ஆதிக்கமோ ராணுவச் செல்வாக்கு அரசியற் குறுக்கீடோ இலங்கைக்கு நல்லதல்ல. வேறு வல்லரசு எதுவுமே குறுக்கிடுவதை எதிர்ப்பவர்கள் சீனச் செல்வாக்கை விமர்சிப்பது நேர்மையானது. ஓர் அந்நிய ஆதிக்கத்தை வரவேற்க வேண்டி இன்னொன்றின் ஆதிக்கம் வரக்கூடும் என்று மிரட்டுவது இலங்கையை நேசிக்கும் எவரதும் நிலைப்பாடாகாது.

ராஜபக்ஷ ஆட்சி கவிழாமல் தடுப்பது சீனா வின் தேவையல்ல. மக்கள் கொதித்தெழுந்தால் சீனாவாலும் அந்த ஆட்சியைக் காப்பாற்ற இயலாது. ஆனால் ஆட்சிக் கவிழ்ப்பில் மேற்குலகின் நோக்கங்கள் பற்றி நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். இலங்கையில் மக்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்தால் ஏற்படாத எந்த ஆட்சிமாற்றமும் நாட்டின் நெருக்கடிகளை மேலும் மோசமாக்குமே ஒழிய நாட்டைக் காப்பற்றப் போவதில்லை.

எனவே, சீன நோக்கங்கள் பற்றி விழிப்புடன் இருப்பது வேறெந்த அந்நிய வல்லரசின் நோக்கங்களும் பற்றிய விழிப்பின் அளவுக்கு முக்கியமானது. அதேவேளை சீனப் பூச்சாண்டிக்கு மிரளுவதும் அமெரிக்காவையோ இந்தியாவையோ அண்டி நிற்பதும் விவேகமாகாது. எனவே சீனப் பூச்சாண்டி காட்டுவோரைப் பற்றி நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

# வடமாகாண சபைத் தேர்தல் எனும் மாய மான்

போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் கழியுமுன்பு சனாதிபதித் தேர்தல் நடந்தது. அதையடுத்துப் பாராளுமன்றத் தேர்தல் நடந்தது. பின்பு உள்ளூராட்சிகட்கான தேர்தலும் நடந்தது. எனவே வடமாகாண சபைத் தேர்தலை நடாத்த என்ன நிர்வாகத் தடைகள் உள்ளன என்பது தெளிவீனமாக உள்ளது. அதைவிடவும் கீழ் மாகாண சபைக்கு இரண்டு தேர்தல்கள் நடந்துள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

வடமாகாண சபையைத் தேர்தல் மூலம் அதனைக் கைப்பற்றுவது அரசாங்கத் தரப்பிற்கு இயலாது என்பதை விட்டால் அங்கே தேர்தலை நடத்தவதற்கு அரசாங்கம் தயங்க ஒரு காரணமும் இல்லை. வடக்கும் கிழக்கும் ஒரே மாகாணமாக்கப்பட்ட பின்பு அங்கே போர் முடியும் வரையிலான 22 ஆண்டுகளில், முதலாவது தேர்தலுக்குப் பிறகு தேர்தலே நடக்கவில்லை. 1991க்குப் பின்பு வடக்கு- கிழக்கு மாகாண சபை அதன் ஆளுநராலேயே நிருவகிக்கப்பட்டு வந்தது.

சென்ற ஆண்டு 'திவிநெகும' சட்டவா க்கத்தின் மூலம் மாகாண சபைகளின் பொறுப் பிலிருந்த நிதியை ஒரு குறிப்பிட்ட அமைச் சரின் கைக்குட் கொண்டு வரும் முயற்சிக்கு வட மாகாணசபையின் அங்கீகாரம் தேவை என்ற நிலையில், வட மாகாண ஆளுநர் மாகாண சபையின் சார்பில் வழங்கிய அங் கீகாரம் செல்லாது என்ற உயர்நீமன்றத் தீர்ப்பு நீதியரசரின் பதவி நீக்கம் வரையும் அப்பாலும் ஏற்படுத்திய சலசலப்பின் பின்பு வடமாகாண சபையில் அரசாங்கத்தின் பேரினவாதத் திட்ட ங்கள் உட்பட்ட பல்வேறு சனநாய விரோத, சட்டவிரோத ஒழுங்கீனங்கட்குத் தடையாக இருக்கக் கூடிய ஒரு மாகாண சபை இருப் பதை எவ்வாறாவது தவிர்ப்பது என்பதில் அரசாங்கம் தீவிரமாக உள்ளது என்று நம்பலாம். ஆனால் எவ்விதமான அரசியல் அதிகா ரமுமற்றவையாகவே உள்ள மாகாண சபைக்கு 13வது சட்டத்திருததின்படி பெயர ளவில் எஞ்சியுள்ள பெறுமதியான அதிகாரம் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மட்டுமே. அவற்றை வழங்குவதைப் பற்றிய உடன்பாடின்மை அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு பற்றிப் பேசுவதற்கு தடையாக இருந்து வந்தது.

இந்த நிலையில் ஒரு புறம் 13வது சட்டத்திருத்தத்தின் அடிப்படையில் தீர்வு என்று இந்திய அரசாங்கத்திற்கு வழங்கிய உறுதிமொழி ஒரு புறமும் ஜெனிவா தீர்மானத்தின் பின்னணியில் போருக்குப் பின்பான இணக்கப்பாட்டு நடவடிக்கைகளை 'சர்வதேச சமூகத்திற்குக்' காட்டும் கட்டாயம் இன்னொரு புறமாக நெருக்குகையில் வடமாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற் குள்ளது. ஐ.நா. மனித உரிமைக் கழகத்தின் சார்பில் நவநீதம்பிள்ளையின் வருகைக்கு முன் அதை நடத்துவது உசிதம் என்றாலும் அதை நடத்தி வடக்கில் மக்களிடம் மீண்டும் மூக்குடைபடுவதா அல்ல நடத்தாமல் விட்டு மேலும் சர்வதேச அழுத்தங்கட்கு முகங் கொடுப்பதா என்ற இக்கட்டின் நடுவே வடமாகாண சபைத் தேர்தல் நடக்கக் கூடாது என்றும் பொலிஸ்- காணி அதிகாரங்களை நீக்கினாலே தேர்தல் என்றும் அரசாங்க ஆதரவுக்குழுக்கள் நடுவிலிருந்தே தேர்தல் எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ள ன.

வடமாகாண சபைத் தேர்தல் நடக்கக்கூடாது என்னும் குரல்கள் சிங்கள பேரினவாதம் வலுப்பெற்றுள்ளதன் அடையாளம் மட்டுமல்ல அரசாங்கமே திட்டமிட்டுத் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வை மேலுங் கடினமா கக்குகிறதா என்ற ஐயமும் எழுகிறது. பொலிஸ் - காணி அதிகாரங்களை நீக்க விரும்பினால் அரசாங்கம் அதை எப்போது வேண்டுமானாலும் செய்ய இயலும். அதற்கான பெரும்பான்மை வலிமை அதனிடம் உள்ளது. ஆனால் அதையே வடமாகாண சபைத் தேர்தலை நடத்த முன் நிபந்தனை யாக்குவதும் அதற்கேற்ப அரசாங்கம் 13வது சட்டத்திருத்தத்தை மேலும் பலவீனப்படுத்த முயல்வதும் ஆழமான அரசியல் விஷம நோக்குடையது என்பதில் ஐயமில்லை.

இப் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நடக்கும் குத்து வெட்டுக்களும் பொதுவாகவே தமிழ்த் தேசிய அரசியலிற் காணப்படும் பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலும் அரசியற் சிறுபிள்ளைத்தனங்களும் அரசாங்கத்தின் விசேட நோக்கங் கட்கு உடந்தையானவையே ஒழியத் தமிழ் மக்களை விழிப்பூட்டி தூர நோக்கில் அரசியல் மயப்படுத்தும் நோக்கத்திற்கு உதவுவனவல்ல.

**மோகன்**

# உலக அழகி முதல் போப்பரசர் வரை

உலக அழகியாக ஒரு இந்தியப் பெண் சென்ற நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலேயே வர முடிந்தது. இந்தியப் பெண்கள் அழகிகளாக வர அவ்வளவு காலம் எடுத்ததா அல்லது இந்தியப் பெண்களின் அழகை உலக அழகிப் போட்டி நடத்துவோர் அறிய அவ்வளவு காலம் எடுத்ததா என்று யாரும் ஆராயத்த தேவையில்லை. அழகிப் போட்டிகட்கும் அழகு சாதனச் சந்தைக்கும் நெருக்கமான உறவு உண்டு. இந்தியாவில் மேற்குலக அழகுசாதனங்கட்கு ஒரு சந்தையை அறிந்து அதை விருத்தி செய்யும் தேவை காரணமாகவே ஒரு இந்தியப் பெண் அழகு ராணியாக. ஆக்கப்பட்டார் இப்படியாக உலக அழகு ராணி கண்டத்துக்குக் கண்டம் தாவி சீனாவையும் ஏட்டுவதற்கு வணிக நோக்கங்களும் உள்ளன. அரசியற் காரணங்களும் உள்ளன. நோபல் பரிசுகளின், முக்கியமாக சமாதான, இலக்கியப் பரிசுகளின் அரசியல் நாம் அறிந்த விடயமாகும். கத்தோலிக்கத் திருச்சபைக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இருந்து வந்துள்ள உறவில் நெருக்கமும் உண்டு. விரிசல்களும் உண்டு. என்றாலும் கம்யூனிச எதிர்ப்பில் இரண்டுக்கும் நட்பே மிகுதி. உலக அழகிகள் பொதுவாகவே வெள்ளை அமெரிக்க மேற்கு ஐரோப்பியர்களாகவே இருந்து வந்தது போலப் போப்பரசர்களும் பொதுவாக இத்தாலியர்களாகவே இருந்து வந்துள்ளனர். முதலாவது ஜோன் போல் போப்பரசர் மிக மர்மமான சூழல்களில் இறந்த பின்பு போலந்தைச் சேர்ந்தவர் போப்பரசராகி மக்களால் நேசிக்கப்பட்ட சீர் திருத்தவாதியான ஜோன் போலின் பேரையே தனக்கும் வைத்தார். ஒரு போலந்து நாட்டவர் வரலாற்றில் முதல் முறையாக ஒரு போப்பரசர் ஆனதற்குப் போலந்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சிக்கு எதிரான சொலிடாரிட் இயக்க எழுச்சிக்கும் நெருக்கமான தொடர்பு இருந்ததை விட்டால், ஒரு நல்ல காரணமும் இருக்கவில்லை. போலத்தில் ஆட்சியின் கவிழ்ப்பில் போப்பரசரது பங்கு மிக வலுவானது. அடுத்த போப்பரசர் 16ம் பெனடிக்ற் ஒரு ஜேர்மனியர். அவருக்கும் ஜேர்மன் ஃபாஸிஸத்துக்கும் இருந்த நெருக்கம் பற்றிய கேள்விகள் எழுந்தன. அவருடைய இஸ்லாமிய விரோதக் கூற்றுக்கள் சர்வதேச அரசியலில் அவரை அதிகம் பயனற்றவராக்கியது. அவர் தானாகவே பதவி விலகியதன் மூலம் வத்திக்கானின் வரலாற்றில் நீண்ட காலத்தின் பின்பு பதவி விலகிய முதலாவது போப்பரசரானார். அவரின் இடத்திற்கு வந்துள்ளவர் ஒரு தென்னமெரிக்கர். உலகின் மிகப் பெரிய கத்தோலிக்க பிரதேசமாக லத்தின் அமெரிக்கா இருந்தாலும் அங்கிருந்து இதுவரை எவரும் போப்பரசராகவில்லை. லத்தின் அமெரிக்கா இருந்தாலும் அங்கிருந்து இதுவரை எவரும் போப்பரசராகவில்லை.

லத்தின் அமெரிக்காவின் இவாஞ்சலிந கிறிஸ்தவர்களின் மதமாற்றப் பணிகள் கத்தோலிக்கத் திருச்சபைக்குப் பெருஞ் சவாலாக எழுந்தபோது ஒரு இலத்தின் அமெரிக்கர் ஒருவர் போப்பரசராக்கப்படவில்லை. இப்போது லத்தின் அமெரிக்கர் ஒருவர் போப்பரசராகியதில் காலஞ் சென்ற வெனுசுவேலாவின் சனாதிபதி சாவெஸஷக்கு ஒரு முக்கிய பங்குண்டு. சாவெஸின் வருகையின் பின் லத் தின் அமெரிக்காவில் வலுவான ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு அலை எழுந்துள்ளது. அதன் இடதுசாரிப் பரிமாணம் ஏகாதிபத்தியத்திற்குச் சவாலாக உள்ள அளவுக்குக் கத்தோலிக்க மதநம்பிக்கைக்கு சவாலல்ல. ஆனாலும் அது எங்கே கொண்டு போகும் என்பது வத்திக்கானுக்கும் தெரியும் வாஷிங்டனுக்கும் தெரியும்.

இந்தப் போப்பரசர் ஆர்ஜென்டினா நாட்டவர். அங்கு 1980 களில் ராணுவ ஆட்சியின் அட்டூழியங்கள் நடந்த போது அதைக் கண்டித்து வாய திறக்காத பொறுமை சாலி" இன்றைய பாப்பரசர். எனவே ஒவ்வொரு வெள் ளையரல்லாத ஒவ்வொரு உலக அழகித் தெரிவும் போல இத்தாலியரல்லாத அவரது நியமனமும் மிகவும் பொருத் தமானதே. போப்பரசரும் அவரது தெரிவும் புனிதமானவை என மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதன் பின்னால் முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசியல் இருந்து வருவது பற்றிய மக்கள் அறிந்து கொள்வதில்லை.

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு 40

இமயவரம்பன்



**4வது சர்வதேச தமிழாராச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது இறுதி நாளன்று பொலிஸ் சுட்டதில் மின் கம்பி அறுந்து 9 பேர் பலியாகினர்.**

தேசிய இனப் பிரச்சினையை வெறுமனே மொழிப்பிரச்சினையாகப் பார்த்தவர்கள் எவரும் அதன் அடிப்படை மொழியை விட ஆழமானது என்று விளங்கத் தவறிவிட்டனர். தேசிய இனங்களிடையிலான முரண்பாட்டைப் பகை முரண்பாடாக மாற்றுவதில் அனைத்துத் தேசிய இனங்களின் முதலாளிய பிரபுத்துவ வர்க்கத் தலைமைகட்கு ஒரு பங்கிருந்தது. நடுத்தர வர்க்கத்தினரிடையே வணிகம், தொழில் வாய்ப்பு, உயர் கல்வி வாய்ப்பும் போன்ற துறைகளில் வளர்ந்து, வந்த போட்டிக்கு இன அடையாளப் பரிமாணம் வழங்கியதன் மூலம் தேசிய அரசியலில் இன முரண்பாடு முக்கியமான ஒரு ஆயுதமானது. அரசாங்க உத்தியோகம், பொலிஸ், இராணுவத் துறைகளில் ஆட்சேர்ப்புப் போன்ற விடயங்களில் இன அடிப்படையிலான பாராபட்சம் படிப்படியாக வலுப்படத் தொடங்கிவிட்டது. எனினும், இன முரண்பாடுகளை முடுக்கிவிடுவதிற் தரப்படுத்தலின் பங்கு வேறெந்தப் பாராபட்சத்தினும் பெரிது.சூ

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடத்திற்கு அனுமதிக்கப்பட்ட 150 பேரில் 80% பேர் தமிழ்மொழி மூலம் பரீட்சை எழுதினோர் என்பது விளங்கக் கூடிய விதமாகவே சந்தேகங்களுக்குக் காரணமாயிற்று. வழமையாக முந்திய ஆண்டுகளில் தமிழிற் கற்றவர்களின் தொகை 30- 40 வீதம் அளவிலேயே இருந்து வந்துள்ளது. ஒழுங்கீனங்கள் எதுவும் நடந்துள்ளனவா என்ற முறையான விசாரணையின்றி மொழிவழித் தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. அதன் பயனாகத் தமிழ்-சிங்கள விகிதாசாரம் ஏறத்தாழத் தலைகீழாக்கப்பட்டது. பல்கலைக்கழ அனுமதிகள் தரப்படுத்தலின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்ட பின்பு ஒழுங்கீனங்கள் எதுவும் நிகழவில்லை என்று விசாரணைக்குழுவொன்று உறுதிப்படுத்தியது. இந்த நிகழ்வுக்கு முக்கியமான காரணம் குடாநாட்டில் ட்யூஷன் வகுப்புக்கள் பெருமளவிற் தொடங்கிவிட்டமையென்பது விசாரணைக்குழுவுக்குத் தெரியாது. அதைவிட முக்கியமாகக் குடாநாட்டை விட்டால், நகரங்களில் இருந்தளவு கல்வி வசதிகள் கிராமப் பகுதிகளில் இருக்கவில்லை. இந்த விதமான ஏற்றத்தாழ்வுகளை ஈடுசெய்வதற்கும் கல்வியில் முதலீட்டைப் பெருக்குதற்கும் பதிலாக அரசாங்கம் தரப்படுத்தல், பின்பு மாவட்ட அடிப்படை என்ற விதமான குறுக்கு வழித் தீர்வுகளை நாடியது. தரப்படுத்தல் உண்மையிற் சில நூறு நடுத்தர வர்க்கத் தமிழ் மாணவர்களையே பாதித்த போதும் அது நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் தமிழ் மாணவர்கள் அனைவரிடையிலும் கடும் எதிர்ப்புணர்வை எழுப்பியது. பேரினவாத நோக்கிலான தரப்படுத்தலைப் பாராளுமன்ற இடதுசாரிகள் நியாயப்படுத்தினர். இடது கம்யூனிஸ்ட்டுக்கள் அந்த அநீதியைக் கண்டித்து எதிர்ப்பு நடவடிக்கைகளிற் பங்கு பற்றினர். 1970 தேர்தல் முடிவுகளால் அதிர்ந்து போயிருந்த தமிழரசுக்கட்சி இழைத்த தனது குறுந் தேசியவாத நிகழ்ச்சி நிரலுக்கான கருவியாக்க முனைந்தது. அதன் இளைஞர் அமைப்பினர் கல்வி அமைச்சர் ஒரு முஸ்லிம் என்பதைப் பயன்படுத்தி யாழ்ப்பாண முஸ்லிம்களைப் புண்படுத்தும் விதமான முஸ்லிம் விரோதக் கோஷங்களை எழுப்பினர். இவ்வாறு தரப்படுத்தல் தேசிய இனப்பிரச்சினையை ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளிற் கூர்மைப்படுத்தியது.

பல்கலைக்கழக அனுமதிப் பிரச்சினை ஒரு இனப் பிரச்சினையாக்கியதில் பேரினவாதிகள் கட்சி வேறுபாடின்றிச் செயற்பட்டனர். யூ.என்.பியும் ஜே.வி.பியும் தரப்படுத்தலை அங்கீரித்துக் கள்ள மௌனம் சாதித்தன. எனினும் பின்னர் மாவட்ட அடிப்படை முறையும் சேர்க்கப்பட்டபோது நகர் சார்ந்த பெரிய பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டதும் தரப்படுத்தல் பற்றிய தயக்கங்கள் மேட்டுக்குடிகளிடையே தோன்றின.

1971இல் ஜே.வி.பி. எழுச்சி மூர்க்கத்தனமாக முறியடிக் கப்பட்ட அதேவேளை, ஜே.வி.பி. பயங்கரவாதத்திற்கு எதிரான பொலிஸ் நடவடிக்கையால் வடக்கில் சாதியத்திற் கெதிராகத் தொடர்ந்தும் போராடி வந்த இடது கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் தலைமறவாக வேண்டி ஏற்பட்டது. எந்தவிதமான நியாயமுமின்றி அவர்களது தலைவரான சண்முகதாசனும் கட்சியின் முக்கிய உறுப்பினர்களும் ஒரு வருடத்திற்கும் மேலாகச் சிறையில் வைக்கப்பட்டனர்.

ஜே.வி.பியின் சிறுபிள்ளைத்தனமான கிளர்ச்சியை அடக்கிய போக்கில் இறந்த சிங்கள இளைஞர்களின் எண்ணிக்கை இன்னமும் உறுதிப்படுத்தபடவில்லை. 15000 பேரளவிற் கொல்லப்பட்டிருக்கலாம் என்பது நியாயமான ஒரு மதிப்பீடென நினைக்கிறேன். கைதானவர்களிற் பெரும்பாலானவர்களை நெகிழ்வான முறையில் அரசாங்கம் பின்னர் நடத்திய போதும் அரசாங்கம் சிங்கள இளைஞர்களிடம் மிகையான கடுமையுடன் நடந்து கொண்டது என்ற உணர்வு தென்னிலங்கையிற் பரவலாக இருந்து வந்தது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் தேசிய இனப்பிரச்சினையை மோசமாக்கும் விதமாக எடுத்த அடுத்த முக்கிய நடவடிக்கையாகப் புதிய அரசியல்யாப்பு அமைந்தது. 1972இல் வரையப்பட்ட யாப்பு சிங்களத்தை அரச கரும மொழியாக உறுதிப்படுத்தியதுடன் முன்னைய யாப்பில் சிறுபான்மையினருக்கும் பாதகமான சட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருந்த 29(2) பகுதியையும் நீக்கியது. அதைவிட, பௌத்தத்திற்கு அரசியல் யாப்பில் ஒரு சிறப்பான இடத்தையும் வழங்கியது. தமிழரசுக் கட்சி முன்வைத்த ஆலோசனைகளை அரசியல் யாப்புச் சபை கருத்திற் கொள்ள மறுத்ததைக் காரணமாக்கித் தமிழரசுக் கட்சி யாப்பின் வரைவில் பங்குபற்ற மறுத்து விலகியது. புதிய யாப்பு இலங்கையை ஒரு குடியரசாகப் பிரகடனம் செய்தமையும் நாட்டின் பெயரை சிலோன் என்பதிலிருந்து ஸ்ரீலங்கா என்று மாற்றியதும் வரவேற்கத்தக்கன. எனினும் அவற்றையும் தமிழரசுக் கட்சி விரும்பவில்லை. தமிழரசுக் கட்சி கலந்துரையாடல்களிலிருந்து விலகியமை அரசியல் முதிர்ச்சியற்ற ஒரு செயல். எனினும், தமிழரசுக் கட்சியைப் பங்குபற்றுமாறு ஊக்குவிக்க அரசாங்கம் முயலவில்லை என்பதும் முக்கியமானது. அரசாங்கம் புதிய யாப்பின் மூலம் பாராளுமன்றத்தின் ஆயுளை 6 ஆண்டுகளாக்கியதுடன் அதன் தொடக்கத்தை புதிய யாப்பின் தொடக்க நாளாக்கியதன் மூலம் தனது வருட ஆயுளை

## வெளிப்படையான இன ஒடுக்கல் வடிவம் பெறுகிறது

மேலும் 3 ஆண்டுகளாற் கூட்டியமை சனநாயக விரோதமானது என்பதுடன் பின்னர் ஜே.ஆர். ஜயவர்தன அதையொத்த காரியங்களைச் செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஏலவே தரப்படுத்தலாற் கொதிப்புற்றிருந்த ஒரு தமிழ்ச் சமூகத்தில் புதிய அரசியல் யாப்பு மேலும் கடுமையான அரசாங்க எதிர்ப்புணர்வைத் தூண்டியது. தனது தேர்தல் கணிப்புக்கள் பிழைத்தால் "இலங்கையை ஆளுவது யார் என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக" தமிழரசுக் கட்சி இல்லாமற் போன விரக்தியால் நீண்ட உறக்கத்தின்பின் தமிழ்த் தேசியத்தைத் தீவிரப்படுத்த முற்பட்டது. இதில் 1970 தேர்தலில் தோல்விகண்ட அ.அமிர்தலிங்கத்தின் பங்கு முக்கியமானது. தமிழரசுக் கட்சிக்குள் தனது முக்கியத்தை நிலைநாட்டும் தேவையால் அவர் தீவிர நிலைப்பாடுகளை ஊக்குவித்தார்.

1972ம் ஆண்டு தமிழரசுக் கட்சியினர் அரசியல் யாப்பை எரித்ததையடுத்து துண்டுப் பிரசுர இயக்கத்தை நடத்திய மாணவப் பேரவை உறுப்பினர்கள் கைதாயினர். அதற்குச் சில காலம் முன்பிருந்தே அமிர்தலிங்கத்தின் செல்வாக்குக்குட்பட்ட இளைஞர்கள் வன்செயல்களிற் தூண்டப்பட்டு வந்தனர். அவர்களுடைய முக்கிய இலக்காக யாழ்ப்பாண முன்னாள் மேயர் துரையப்பா இருந்தார்.

புதிய அரசியல் யாப்பை அடுத்து தமிழர் ஐக்கிய முன்னணி என்ற அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. அதில் யூ.என்.பிக்கு நெருக்கமாகிவிட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் மட்டுமன்றி யூ.என்.பி பிரமுகரான தேவநாயகமும் இணைந்திருந்தமை இந்த ஐக்கிய முன்னணியின் தேவையும் நோக்கமும் பற்றிய ஐயங்களை எழுப்பியது. (எவ்வாறாயினும் பின்னர் 1976இல் த.ஐ.விடுதலை முன்னணி உருவாகித் தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது இ.தொ.காவும் தேவநாயகமும் விலகினர் என்பதை இங்கு குறிப்பிடலாம்).

த.ஐ.மு. ஒரு வலிய அரசியற் சாத்தியமாக இருக்கவில்லை. 1972 அரசியல் யாப்பின் பின்னணயில் மாணவர் பேரவையும் பிற இளைஞர் குழுக்களும் வன்செயல்களில் ஈடுபட்டாலும் அவை மக்களிடையே பெரிய மனவெழுச்சி ஏற்பட்டதாகக் கூற இயலாது.

அரசியல் யாப்பை எதிர்த்துச் செல்வநாயகம் தனது பாராளுமன்றப் பதவியிலிருந்து விலகினார். தனது விலகலை அடுத்து நடக்கக்கூடிய இடைத் தேர்தலை த.ஐ.மு. அரசியலுக்கு சாதகமாகப் பயன்படுத்தலாம் என்ற அவரது கணிப்பைப் பொய்ப்பிக்கும் விதமாக அரசாங்கம் அந்த இடைத் தேர்தலை 1975 வரை தொடர்ந்தும் பிற்போட்டு வந்தது. அதை ஒரு அரசியற் பிரச்சினையாக்கி ஒரு மக்கள் விழிப்புணர்வு இயக்கத்தை நடத்துவதற்குத் தமிழ்ப் பாராளுமன்றத் தலைமைகட்கு இயலாதிருந்தது. இந்த நிர்க்கதியான நிலைமைகளிலேயே. 1974இல் நடக்கவிருந்த 4வது சர்வதேச தமிழாராய்ச்சி மாநாட்டுப் பிரச்சினை ஒரு அரசியற் பிரச்சினையாக்கப்பட்டது.

இம் மாநாட்டுக்குப் பொறுப்பான இலங்கைத் தமிழாராய்ச்சி நிறுவனம் அதைக் கொழும்பில் நடத்துவதாகவே முதலிற் திட்டமிட்டிருந்தது. தமிழரசுக்கட் சிக்கு நெருக்கமான சிலரின் குறுக்கீட்டால் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதாகவே முடிவு மாற்றப்பட்டது. கொழும்பில் மாநாட்டை நடத்துவதன் மூலம் அரசாங்கமும் அதன் தமிழமைச்சர் குமார சூரியரும் தமக்கு அரசியல் லாபம் கிட்டுமென எதிர்பார்த்தனர். தமிழரசுக் கட்சிக் கணிப்புக்கள் அதற்கு எதிராக இருந்தன. இந்த இழுபறியின் போக்கில் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்து வதற்கு அரசாங்கம் பகையான நிலைப்பாட்டை மேற்கொண்டது. தமிழறிஞர்கள் தவிர்ந்து அரசியற் பிரமுகர்களுக்கு விசாவழங்க அரசாங்கம் மறுத்தது. அதைவிட பலருடைய விசா வழங்கலிலும் நீண்ட தாமதங்கள் இருந்தன.

வெறுமனே அறிஞர்களின் சந்திப்பாக இருந்த இந்த நிகழ்வை பொது மக்களுக்கான ஒரு நிகழ்வாக்கும் நோக்கில் இறுதிநாள் நிகழ்வை யாழ்ப்பாண முற்றவெளியில் நடத்தும் முடிவிற்குப் பொலிஸ் கெடுபிடிகள் குறுக்கிட்டன. ஈற்றில் பொதுக்கூட்டமாக நடக்க இருந்த நிகழ்வில் இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு தமிழ்த் தேசியவாதியான ஜனார்த்தனத்தை மேடையேற்ற அமிர்தலிங்கம் உட்பட்ட தமிழரசுக்கட்சித் தலைவர்கள் சிலரும் இளைஞர்களும் திட்டமிட்டிருந்ததைப் பொலிசார் அறிந்திருந்தனர். ஜனார்த்தனத்தை மேடையேற்றுவது அரசாங்கத்தின் முகத்தில் அறைகிற செயல் என்பதில் இரு தரப்பினருக்கும் கருத்து வேறுபாடு இருக்கவில்லை. எனவே ஜனார்த்தனம் மேடையில் ஏறாமற் தடுக்கவும் தேவையானாற் கைது செய்யவும் பொலிசார் திட்டமிட்டிருந்தனர். அந்த முயற்சியை இளைஞர்கள் தடுக்க முற்பட்டபோது நிகழ்ந்த கைகலப்பின் விளைவாகவே பொலிசார் வானை நோக்கிச் சுட்டபோது மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்ததால் ஒன்பது பேர் மின் அதிர்ச்சியால் அவச்சாவை சந்தித்தனர்.

இந்த அசம்பாவிதத்திற்குத் தமிழரசுக் கட்சியும் பொறுப்பு என்பதை யாரும் மறுக்க இயலாது. எனினும் மாநாட்டின் தொடக்கத்திலிருந்தே அரசாங்கம் காட்டி வந்த பகை மனப்பான்மை முக்கியமானது. அதை விடவும் பொலிஸ் தரப்பு மக்கள் நெருக்குகின்ற ஒரு கூட்டத்தினிடையே பாதுகாப்பைப் பேணத் தவறியமை ஏற்கத்தக்கதல்ல. ஒன்பது பேரின் சாவுகள் பற்றி உரிய முறையில் விசாரணைகள் நடவாமையும் மக்கள் மனதில் வெறுப்பை வளர்த்தது.

ஒன்பது பேரினதும் சாவு சோர்ந்து கிடந்த தமிழரசுக் கட்சியின் அரசியலுக்குத் தெம்பூட்டியது. அதை மையப்படுத்தித் தமிழ்த் தேசியவாத அரசியலும் அரசியல் வன்முறையும் வளர்க்கப்பட்டன. 1975ல் முன்னாள் மேயர் துரையப்பாவின் கொலையை 1974 அசம்பாவிதத்துடன் தொடர்புபடுத்துவோர் உள்ளனர். எனினும் 1971 இலிருந்தே துரையப்பாவைக் கொல்லும் திட்டமும் முயற்சிகளும் இருந்து வந்துள்ளமை நாம் புறக்கணிக்க இயலாது.

வன்முறையின் தோற்றத்தையடுத்து வடக்கில் பொலிஸ் அடக்குமுறைகள் வளர்ந்து வந்ததுடன் அவையே இளைஞர்களை மேலும் வன்முறையில் தூண்டுவனவாக இருந்தன என்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு குடாநாட்டில் தமிழ்த் தேசியம் உத்வேகம் பெற்ற அதே காலத்தில் மலையகத்திலிருந்து தொழிலாளர்கள் வன்னிக்குப் புலம்பெயர்ந்தனர். அது எவ்வாறு கையாளப்பட்டது என்பதும் நம் கவனத்திற்குரியதாகும்.

# முன் நகர்த்தப்படும் முஸ்லீம் விரோதம்

மாட்டிறைச்சி விற்பனையை எதிர்த்து வெசாக் நாளில் போவத இந்திரரத்ன எனும் புத்த பிக்கு தீக்குளித்துத் தற்கொலை செய்த கதை எல்லாச் செய்தி எடுகளிலும் பரபரப்பூட்டியது. இந்தப் புத்த பிக்குவின் முஸ்லிம் விரோத வன்முறைப் பின்னணி வெளியான பின்பு அவரது தற்கொலைக்குப் பின்னால் விஷம நோக்கங்கள் இருப்பது மேலும் உறுதியாயிற்று.

இந்த எதிர்ப்பு மிருக வதைக்கு எதிரானது மட்டுமே என்று கூறப்பட்டாலும், மாட்டிறைச்சியை மட்டும் பிரச்சனையாக்குவதன் நோக்கம் என்ன? பல நகர்வாழ் பவுத்தர்களும் சைவர்களும் மாட்டிறைச்சி உண்கின்றனர். முஸ்லிம்கட்கும் கிறிஸ்தவர்கட்கும் மாட்டிறைச்சி உண்ண மனத்தடை இல்லை. எதிர்ப்பின் நோக்கம் மிருக வதைத் தடுப்பு என்றால், அது மாமிசம் உண்பதைப் பற்றியதா, மிருகங்களைக் கொல்லும் முறை பற்றியதா என்ற கேள்வி எழுகிறது. மிருகங்கள் துடிதுடித்துத் துன்புறாமல் இறைச்சிக்காக அவற்றை வெட்டுவது முஸ்லிம்களின் ஹலாலான முறையாகும். மிருகங்களை உணர்வறச் செய்து வெட்டும் மேல்நாட்டு நவீன முறைகள் எவ்வளவு குறைந்த வேதனை தருவன என்பது விசாரிக்க வேண்டிய விடயம்.

எவ்வாறாயினும் மையப் பிரச்சனை மாமிசம் உண்பதா கும். எனின், சிங்கள பவுத்தப் பிரசாரம் ஏன் மாட்டிறைச்சியைப் பற்றியதாக மட்டும் உள்ளது? சிங்கள பவுத்தர்கள் மாமிசம் உண்ணக்கூடாது என்ற பிரசாரம் தேவையில்லையா? தானமாக மாமிச உணவு கேட்கும் புத்தபிக்குமாருக்கு, குறிப்பாகப் பெரிய பிக்குமாருக்கு, அது கவலை தரலாம். எனினும், எவரும் எதைத் தின்னலாம் எதைத் தின்னலாகாது என்ற வரையறைகள் பல்லினச் சமூகம் ஒன்றுக்குப் பொருந்தா.

பவுத்தம் உயிர்க்கொலையையும் வன்முறையையும் கண்டிக்கும் மதம். சிங்கள பவுத்தம் இன ஒழிப்புப் போர்களை வேண்டுகிறது, இனக் கலவரங்களைத் தூண்டுகிறது. எனவே பவுத்த மதவாத அக்கறைகள் மதத்துக்கு அப்பாலானவை. மாட்டிறைச்சியைப் பிரச்சனையாக்குவோரின் கவலை யாரும் மாமிசம் உண்பதல்ல. மாட்டிறைச்சி விற்பனை எதிர்ப்பு முஸ்லிம்களை அரசியலிலிலிருந்து ஓரங்கட்டும் ஒரு சிங்கள பவுத்தப் பேரினவாத முயற்சி மட்டுமே.

அண்மைக் காலங்களில் முஸ்லிம்களைப் பணியவைக்க வன்முறையும் மிரட்டலும் மிகப் பயன்பட்டுள்ளன. முஸ்லிம்விரோத வன்முறையின் வரலாறு 1915இல் தொடங்குகிறது. அன்று நாடாளாவி நடந்த சிங்கள-முஸ்லிம் மோதலே இலங்கையின் முதலாவது முக்கிய இன மோதல். அக் கலவரம் முஸ்லிம்களையே கடுமையாகப் பாதித்தது. அதன் நேரடிக் காரணம் முஸ்லிம்கட்கும் பௌத்தர்கட்குமிடையிலான ஒரு சிறு கைகலப்பென்று வரலாற்றாசிரியர்கள் சிலர் கூறுவார்கள். அதன் உண்மைக் காரணம் சிங்கள, முஸ்லிம் வணிகர்கட்கிடையிலான போட்டியாகும். கலவரத்தைத் தூண்டிய சில சிங்கள பௌத்த தலைவர்கள் சிறைத் தண்டனை பெற்றனர். துப்பாக்கியைப் பாவித்த ஒரு சிங்கள இராணுவ அதிகாரியின் மரண தண்டனை நிறைவேறியது. பிற்காலத்தில் யூ.என்.பி. தலைவர்களாகிய சிலர் உட்படச், சிங்களத் தேசியத் தலைவர்கள் எனப்பட்ட பலர் அவ்வாறு தண்டிக்கப்பட்டுப் பொன்னம்பலம் ராமநாதன் எனும் சைவவேளாள மேட்டுக்குடித் தலைவரின் குறுக்கீட்டால் விடுவிக்கப் பட்டனர். 1915க்குப் பின்பு பலகாலமாக முஸ்லிம்கள் பேரினவாதத்தின் நேரடி இலக்காகாத போதும், 1970க்குப் பின்பு மத்திய கிழக்கின் எண்ணெய்ப் பொருளாதார எழுச்சியின் பயனாக முஸ்லிம் வணிகர்களது மேம்பாடும் மத்திய கிழக்கு வேலை வாய்ப்புக்களால் முஸ்லிம்கள் ஒப்பீட்டளவில் கண்ட அதிக முன்னேற்றமும் 1970கள் தொட்டு முஸ்லிம்களை இலக்குவைக்கத் தூண்டின.

சிங்கள பௌத்த பேரினவாதம், சிங்களப் பிரபுத்துவ-முதலாளிய வர்க்க நலன் சார்ந்த சிந்தனையாகும். சுதந்திரத்தின் பின்பு மலையகத் தமிழர் முதலில் குறிவைக்கப்பட்டுக் குடியுரிமை இழந்தனர். சிங்களம் மட்டுமே சட்டமும் சிங்கள பௌத்த எழுச்சியும் பறங்கியரில் பெரும்பாலோரை 1950களிலும் 60களிலும் புலம்பெயர்த்தன. தொடரான இனப் பாகுபாட்டின் போக்கில் தமிழர் ஒரு போருக்குள் இழுத்துவரப்பட்டனர். அப் போர் தொடர்கையிலேயே 2001ம் ஆண்டு முதல் சிஹல உறுமயவும் பேரினவாதக் குண்டர் படைகளும் முஸ்லிம்களைத் தீவிரமாக இலக்கு வைத்தன. இன்று, ஜாதிக ஹெல உறுமயவினதும் அதன் நேச அணிகளான பொது பல சேன உட்பட்ட சிங்கள பௌத்த வன்முறைக் குழுக்களதும் பிரதான இலக்காக முஸ்லிம்கள் உள்ளனர். ஜாதிக ஹெல உறுமய பிரமுகர் ஒருவர் 1915 கலவரம் போல இன்னொன்று நிகழும் என்று அண்மையில் மிரட்டியிருந்தார். 1915இன் வன்முறையின் நூற்றாண்டு வர இரண்டு ஆண்டுகள் உள்ளன. அது ஒரு சிங்கள பௌத்த வெறியாட்டமாகும் வாய்ப்பையிட்டு முஸ்லிம்கள் மட்டுமன்றி ஜனநாயகச் சக்திகள் அனைத்தும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இத்தகைய சூழலிலேயே ஹலால் சான்றிதழ் பிரச்சனை உருவானது. ஹலால் உணவு பற்றியது மட்டுமல்ல. ஹலால் கொள்ளத்தக்கதைக் குறிக்கும். ஹராம் தள்ளத்தக்கதைக் குறிக்கும். அன்றாட வாழ்வில் ஒவ்வொரு விடயத்திலும் முஸ்லிம்கட்கு ஹலால்-ஹராம் வேறுபாடு உண்டு. களவெடுத்த பொருளும் வட்டிப் பணமும் ஏமாற்றிச் சம்பாதித்த பொருளும் உட்பட்ட பல ஹராமானவை. அண்மைவரை, மாமிசம் உட்பட ஹலாலான உணவையும் பிற நுகர்பொருட்களையும் குர்-ஆனில் விதிக்கப்பட்டவாறு பெற முஸ்லிம்கட்கு எந்த மத நிறுவனச் சான்றிதழும் தேவைப்படவில்லை.

உலகின் 120 கோடி முஸ்லிம்களைப் பன்னாட்டு உணவுக் கம்பனிகள் ஒரு முக்கியமான சந்தையாகக் கண்டுள்ளன. ஹலால் அங்கீகாரம் அவர்களைக் கவரும் ஒரு வணிக வசதியாகியது. இலங்கை உலமாக்கள் சபை மாமிசத்துக்கு ஹலால் அங்கீகாரம் வழங்குவது இங்குள்ள முஸ்லிம்களின் தேவை கருதியல்ல. அது, பன்னாட்டுக் கம்பனிகள், பேரங்காடிகள் (சுப்பர் மார்க்கட்), மத்திய கிழக்கிற்கு உணவு ஏற்றுமதிசெய்வோர் போன்றோரின் சந்தையை வளர்ப்பதற்கே பயன்படுவது. பேரங்காடிகளின் மாமிச வணிகத்திற்கு 'ஹலால்' அங்கீகாரம் வழங்கியதால் எத்தனை முஸ்லிம் இறைச்சிக் கடைகள் மூடப்பட்டன என்பது உலமாக்கள் சபையின் கவலையில்லை.

முஸ்லிம்கள் மிகவும் வெறுப்பதும் அதி மோசமானது என்று கருதுவதுமான பன்றி இறைச்சி பல வடிவங்களில் பேரங்காடிகளில் பிற இறைச்சிகட்கு அருகே வைத்து விற்கப்படுகிறது. அப்படிப்பட்ட எந்தப் பேரங்காடி உணவும் முஸ்லிம்கட்கு ஹராமானது. அது உலமாக்கள் சபையின் கவலையில்லை. ஹலால் எது ஹராம் எது என்று முஸ்லிகட்கு வழிகாட்டவேண்டிய உலாமாக்கள் சபை ஹலால் என்ற பேரை வணிகமாக்க உதவியமை வருந்தத்தக்கது.

ஹலால் என்று விற்கப்படுகின்ற மாமிசம் யாவும் ஹலால் என்று உறுதிப்படுத்த எந்த மத நிறுவனத்துக்கும் இயலாது. ஒவ்வொரு மிருகமும் முறையாக ஓதி வெட்டப்பட்டது என்றோ அது இறந்த மிருகமோ களவாடப்பட்ட மிருகமோ அல்ல என்றோ உறுதிசெய்வது நடைமுறை யில் இயலாதது. உலமாக்கள் சபை பெரிய கம்பனிகள் முஸ்லிம்களை ஏய்த்துப் பணம் சம்பாதிக்க உதவுவதுடன் அதன்மூலம் தாமும் பணம் பெறுகின்றனர் என்று முஸ்லிம்கள் பலர் குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே, இஸ்லாத்திற்கு ஹலால் எது ஹராம் எது என்பதைக் குர்-ஆனின் அடிப்படையில் தெளிவாகவும் பகிரங்கமாகவும் விவாதித்து நல்ல முடிவுகளைக் காண்பதை உலமாக்கள் சபை தனது தலையாய கடமையாக்கி வணிக நிறுவனத் தொடர்புகளைத் துண்டிப்பது பொருத்தமானது. மறுபுறம், ஹலால் என்பது முஸ்லிம்கள் தமது உணவுப் பழக்கங்களைப் பிறர் மீது திணிக்கிற காரியம் என்று கூறி முஸ்லிம்கள்மீது வெறுப்பை வளர்க்கச் சிங்கள பௌத்தப் பேரினவாதிகள் முயல்கின்றனர். அதற்கு உலமாக்கள் சபையின் நடவடிக்கைகள் உதவியுள்ளன.

பிற மதத்தவரின் நம்பிக்கைகளில் குறுக்கிடுவதை இஸ்லாம் ஏற்காது. எனவே முஸ்லிமல்லாத எவரும் ஹலாலான உணவையே உண்ணுமாறு கட்டுப்பாடு இல்லை. ஹலால் பிரச்சினையை முஸ்லிம்-பௌத்தப் பிரச்சனையாக்கும் நோக்கம் விஷமமானது. அதை அண்மைக் காலங்களில் முஸ்லிம்கட்கு எதிராக மேற்கொள்ளப்படுகிற அடக்குமுறைகளுடன் சேர்த்துப் பார்க்கவேண்டும். 1999இல் அம்பாறை மாவட்ட தீகவாபி காணித் தகராறும் அதன் பின்பு 2001இல் மாவனல்லையிலும் 2002இல் பேருவளையிலும் நடந்த முஸ்லிம் விரோத வன்முறையும் பள்ளிவாசல் தாக்குதல்களும் முக்கியமானவை. அண்மையிற் பள்ளிவாசல்கள் பல தாக்கப்பட்டுள்ளன. பள்ளி வாசல்களை மூடும் கட்டாயங்கள் ஏற்பட்டுள்ளன. அதே வேளை, ஒரு சூ.்.பி வழிபாட்டிடத்தை மூடும் பேரினவாத முயற்சிக்குச் முஸ்லிம் மதத் தலைவர்கள் சிலர் ஆதரவு தெரிவித்துள்ளமை வருந்தத்தக்கது.

பவுத்த மதவெறியின் முன்னோடி வாகனமான பொது பல சேன, ஹலால் விடயத்தில் ருசி கண்டபின்பு, முஸ்லிம் வணிக நிறுவனங்களைத் தாக்கியுள்ளது. தாக்கியவர்கட்கெதிராக நடவடிக்கை எடுக்கப் பொலிஸ் விரும்பவில்லை. பாதிக்கப்பட்ட முஸ்லிம் வணிகர்கள் அரசியல் அழுத்தங்களால் சட்ட நடவடிக்கையைத் தவிர்த்துள்ளனர். பொது பல சேனவுக்கு அரச அலுவலர்களுடன் நெருக்கமுள்ளதுடன் பாதுகாப்புச் செயலாளரின் பகிரங்க ஆதரவும் உண்டு. இந் நிலையில், முஸ்லிம் கட்காகத் தைரியமாகக் குரல்கொடுத்து வந்தவரும் தமிழ்-முஸ்லிம் அரசியற் கலந்துரையாடலை வலியுறுத்தும் முஸ்லிம் தலைவருமான அசாத் சாலியின் கைதும் விடுத லையும் முஸ்லிம் அரசியல்வாதிகட்கு சிங்கள பவுத்த அரசியல் விடுத்துள்ள கடும் எச்சரிக்கையாகும்.

முஸ்லிம் சமூகம் இவற்றிலிருந்து பாடங்களைக் கற்க வேண்டும். அடக்குமுறை ஆட்சியுள்ள சவூதி அராபியா போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் வேலைக்குப் போகும் பணிப்பெண்கள் மீதான கொடுமைகளை மற்றவர்கள் பேச முதலே முஸ்லிம்கள் பேசத் துணிய வேண்டும். அது நல்ல முஸ்லிம்களின் மார்க்கத்தின் வழியானது. இன, மத அடிப்படையிலான ஒடுக்குமுறை முஸ்லிம்களையும் பிற சிறுபான்மையினரையும் ஒப்பிடத்தக்களவிற் பாதிப்பது. எனவே ஹலால் சான்றிதழ் முதல் பள்ளிவாசல்கள், கடைகள் மீதான தாக்குதலகள் வரையானவை தனியே முஸ்லிம்களைப் பற்றியனவல்ல. அவை அனைத்துச் சிறுபா ன்மையினரையும் பற்றியன.

எனவே, முஸ்லிம்கட்கு எதிராகத் திட்டமிட்டு வளர்க்கப்படும் இந்தத் துவேஷத்திற்கு எதிராக அனைத்துச் சிறுபான்மையினரும் பெரும்பான்மையினர் நடுவே உள்ள நல்ல சக்திகளும் அணிதிரண்டு குரல் கொடாவிடின், அவர்கள், பௌத்தத்தின் பேரால் ஒரு ∴பாசிச ஆட்சி வர உதவுவோராவர்.

**சலீம்**

# Rio + 20 சுற்றுச்சூழல் மாநாடு தந்த பயன் என்ன?

**Rio – de Janerio** என்பது பிறேசில் நாட்டில் ஒரு தலைநகரமாகும். இங்கு ஜூன் 22 2012 இல் நிலைத்திடக்கூடிய அபிவிருத்தி பற்றிய ஒரு சர்வதேச மகாநாடு முடிவுக்கு வந்தது. அங்கு பல நாட்டுத் தலைவர்கள் பங்குபற்றினர். அதைவிட உலகப் புகழ்பெற்ற அரசு சாரா நிறுவனங்கள் (NGO)க்கள் பங்குபற்றின. அந்த மகாநாட்டின் இறுதியில் 49 பக்கத்தில் ஒரு பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் ஏற்றுக்கொண்ட ஒரு திட்டமாகவே அமையப்பெற்றது. உலகத்தில் வேகமாக நடந்துவரும் அபிவிருத்தியால் $CO_2$ அதைப்போன்ற இன்னும்பல வாயுக்கள் ஓசோன் படலத்தைப் பாதிக்கின்றன. அதனால் உலகத்தில் வெப்பம் அதிகரித்து வருகின்றது. உலக அமைப்பிலுள்ள துருவங்களில் உள்ள பனிப்பாறைகள் அதைவிட இமயமலைகளில் உள்ள பனிப்பாறைகள் உருகிக் கடல்மட்டத்தை உயர்த்துகின்றன. இதனால் உலகத்தின் நிலப்பரப்பு குறைகின்ற அபாயம் தோன்றியுள்ளது. இந்த வெப்பமடைதலின் ஒரு பலனாக அதிகூடிய மழைவீழ்ச்சி, அதிகூடிய வேகத்துடனான காற்று, ஒரு குறுகிய காலத்தில் நிகழ்கின்றன. இதனால் மனிதவாழ்வுக்குப் பல இன்னல்கள் உண்டாகின்றன. உலகத்திலேயே 44% ஆயுதத் தளபாடங்களை அமெரிக்கா உற்பத்தி செய்கின்றது. உலகத்தில் ஒரு மனிதனுக்குச் சராசரியாகக் கூடிய $CO_2$ போன்ற வாயுக்களை வெளியிடும் நாடாக அமெரிக்கா திகழ்கின்றது. இதனால் அமெரிக்க அதிபர் ஒபாமா பிரிட்டிஷ் பிரதமர் போன்ற பல முதலாளித்துவ நாடுகளின் தலைவர்கள் இதில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் அந்தநாடுகளின் NGO க்கள் சார்பில் பல பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்த மகாநாட்டின் முடிவு மனித குலத்திற்குக் கிடைத்த ஒரு வெற்றியாகவே கருதப்பட்டது. இதில் பங்குபற்றிய நாட்டுத் தலைவர்களின் எண்ணிக்கை 130 ஆகும். அந்தநாடுகள் இந்தத் திட்டத்திற்கு 206 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்க முன்வந்துள்ளன. இந்த மகாநாட்டின் தீர்மானங்கள் மிகக் கடுமையாக 3 சுற்றுக்களில் விவாதிக்கப்பட்டது. கடைசியாக 19.06.2012 இல் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் பிறேசில் ஜனாதிபதி பல ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்தார். அவருடைய பெயர் திருமதி Dilma Rousseff. இவர் சமீபத்தில் நடந்த ஐ.நா சபைக்கூட்டத்தில் முதலாவது ஆரம்ப உரையை நிகழ்த்தினார். புற்றுநேயால் பீடிக்கப்பட்ட இவரது ஒரு மார்பகம் அகற்றப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக உலக மனித குலத்திற்காக தனது ஆக்க முயற்சியை முன்னெடுத்து வருகின்றார். இந்த நடவடிக்கைகளில் Group of 77 வளரும் நாடுகள் முக்கியமான பங்கை ஆற்றின. 1992ல் இது சம்பந்தமாக நடந்த ஐ.நா. மகாநாடு Rio Earth மகாநாடு என்று பிரபல்யம் பெற்றது. அந்த மகாநாட்டில் எல்லா நாடுகளும் உலக சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டும் என்ற பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இந்தப் பிரகடனம் அப்பொழுது வளர்ந்த நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 1992இல் நடந்த மகாநாடு உலகப்புகழ்பெற்ற முதலாவது பெரிய சுற்றுச்சூழல் மகாநாடாகக் கருதப்படுகின்றது. இந்த மகாநாட்டில் உலகத்தில் உள்ள அடர்ந்த காட்டுப்பகுதிகள் அழிக்கப்படுவது பற்றிக் கவனம் செலுத்தப்பட்டது. உலகம் தோன்றியதன் பின் ஒரு மில்லியன் தாவர, விலங்கு இனங்கள் அழிந்துவிட்டதாகக் கூறப்பட்டது. இந்த மகாநாட்டில் 17000 உலகப்புகழ்பெற்ற சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் பங்குபற்றினார்கள். 1980களில் உலகத்தில் நடைமுறைக்கு வந்த உலகமயமாதல் கொள்கையும் பல்தேசியக் கொம்பனிகளும் இந்தச் சூழல் சுற்றாடல் அழிவுக்கு முக்கிய காரணிகளாக அமைகின்றன. இவர்கள் எந்த ஒரு நாட்டிலும் விலைகொடுத்து தாங்கள் விரும்பியவாறு தொழிற்சாலைகளை ஏற்படுத்தி வருகின்றனர். இந்த $CO_2$ வாயுவுடன் $CH_4$, $N_2O$ ஆகிய வாயுக்களும் உருவாகி இந்த அழிவுக்குக் காரணமாக இருக்கின்றன. ஒரு காலத்தில் இந்த உலகம் - 11 oC வெப்பத்தில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அதன்பின் உருவாகிய வணிமண்டல மாற்றத்தினால் குளிர்நிலை குறைந்து உயிரினங்கள் உருவாகக்கூடிய சூழல் தோன்றியது. சூரியன் உதிக்கும் பொழுது அதன் விளைவாக பச்சைத் தாவரங்களில் உணவுப் பதார்த்தங்கள் உண்டாகின்றன. அப்பொழுது நாங்கள் மூச்சுவிடும் $CO_2$ வை இந்தத் தாவரங்கள் சுத்தம் செய்து ஒட்சிசன் வெளியிடுகின்றன. இந்த சூழல் மாசடைதலால் வான்பயிர் நிலத்தில் உற்பத்தி குறையும். பாசன நெல் உற்பத்தி கூடும். மேற்குக் கடற்கரைப் பகுதியில் தென்னை விளைச்சல் கூடும். கிழக்குக் கடற்கரைப் பகுதியில் தென்னை விளைச்சல் குறையும். கால்நடை வள உற்பத்தி குறையும். மீன் உற்பத்தி சில இட்களில் கூடியும் சில இடங்களில் குறைந்தும் காணப்படும். கடந்த 100 ஆண்டுகளில் உலக நிலப்பரப்பின் வெப்பம் . 74oC உயர்ந்துவிட்டது என மதிப்பிடப்பட்டுள்ளது. 21ஆம் நூற்றாண்டில் உலகின் சராசரி வெப்பம் 1.1 முதல் 6.4 வரை உயர்கின்றது. 1979 ஆம் ஆண்டு தொடக்கம் நிலப்பரப்பின் வெப்பம் .25o C யினால் கூடியது. பெரிய கடல் உள்ள பகுதிகளில் . 13o C கூடுகின்றது. கடல் மட்டம் 2100 ஆம் ஆண்டளவில் .88m உயரும் எனக் கூறப்பட்டுள்ளது. மேற்கத்திய நாடுகள் உலகிலுள்ள வளங்களில் 70%த்தை கடந்த 200 ஆண்டுகளாகப் பயன்படுத்தி செல்வத்தைப் பெருக்கி உலகத்தில் மிகவும் பணக்காரர்களாக வாழ்கின்றனர். உலகத்திலுள்ள 500 பெரிய பணக்காரர்களில் முக்கால்வாசிப் பேர் அமெரிக்காவில் வாழ்கின்றனர். உலகின் உழைப்பைச் சுரண்டி வளங்களைக் கொள்கையிட்டு அழிவாயுதங்களை உற்பத்தி செய்து யுத்தங்களை மூட்டி அவற்றின் ஊடே பெருலாபம் பெற்று உயிர் வாழ்வதே முதலாளித்துவ ஏகாதிபத்தியமாகும். அவர்களே மனிதகுல இருப்புக்குச் சவலாகி வரும் சுற்றுச் சூழல் அழிவுகளுக்கு காரணமானவர்கள். இவர்களே உலக மக்களின் முதல் எதிரிகளாவர்.

**சி.குமாரலிங்கம்**

# தோழர்களின் மறைவும் தோழமை நிறைந்த நினைவுகளும்

## தோழர் இ.கா.சூடாமணி

ஒருவர் தன்னைப் பொதுவுடைமைவாதி அல்லது மாக்சிச வாதி என்று கூறிக்கொள்ளலாம். அவற்றுக்கான நூல்களை எல்லாம் படித்துக் கொண்டதாகவும் பேசிக்கொள்ளலாம். அல்லது மாக்சிச தத்துவார்த்த அடிப்படையில் எல்லாவற்றுக்கும் வியாக்கியானங்களும் விளக்கங்களும் அளித்து வரலாம். ஆனால் மாக்ஸ் அவர்கள் இரத்தினச் சுருக்கமாகக் கூறியது போன்று "தத்துவவாதிகள் உலகத்தை வியாக்கியானம் செய்து வந்திருக்கிறார்கள். நமது பணியானது உலகை மாற்றியமைப்பதேயாகும்" என்றார். அவ்வாறு உலகை மாற்றியமைக்க வேண்டுமாயின் மாக்சிசத் தத்துவத்தின் அடிப்படையில் பாட்டாளி வர்க்க அரசியலை ஒவ்வொரு நாட்டிலும் முன்னெடுக்க வேண்டும். அதற்குப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய நபர்களைக் கொண்ட பொதுவுடைமைக் கட்சி வேண்டும். அத்தகைய கட்சியை முன்னெடுப்பதற்கு தத்துவத்தாலும் நடைமுறையாலும் வாழ்வு முறையாலும் தங்களை ஆயுதபாணியாக்கிக் கொண்ட கட்சி உறுப்பினர்கள் அமைப்பு வாயிலாக அணிதிரளல் வேண்டும். அத்தகையோர் சகல தடைகளையும் தாண்டி இறுதிவரை மாக்சிச மனச் சாட்சிக்குப் பதில் கூறும் நேர்மையான மாக்சிச லெனினிசவாதிகளாகவும் மாஓசேதுங் சிந்தனையை முன்னெடுப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறே ஒவ்வொரு நாட்டிலும் மாக்சிசத்தை முழுமையாக ஏற்றுக்கொண்ட பொதுவுடைமைவாதிகளின் புரட்சிகரப் பாரம்பரியம் தொடர்ந்து வந்துள்ளது. அதன் வழியாக வாழையடி வாழையென வந்த வரலாற்றில் எமது கட்சியைச் சேர்ந்த மூன்று தோழர்கள் அண்மைய மாதங்களில் இயற்கை எய்தியமையானது கட்சித் தோழர்களுக்கு கடும் துயரமாகியது. அத்தகைய துயரத்தைப் பலமாக மாற்றிக் கொண்டு கட்சியைப் பலப்படுத்தி தோழர்கள் லிங்கம் (58), பசுபதி (84), இ.கா.சூடாமணி (76) ஆகியோர் விட்டுச் சென்ற புரட்சிகரப் பணியினைத் தொடர வேண்டும்.

**தோழர் இ.கா.சூடாமணி** காங்கேசன்துறை தையிட்டிக் கிராமத்தில் ஒரு உழைப்பாளி குடும்பத்தில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை மட்டும் கற்ற இத்தோழர் இளமைக் காலத்திலேயே சமூக நடைமுறைகளின் மீது கேள்விகள் எழுப்பிய ஒருவராகினார். அதன் வழியே அவரது அயலில் வாழ்ந்து வந்த முதுபெரும் கம்யூனிஸ்டான தோழர் டாக்டர் சு.வே சீனிவாசகத்தின் தொடர்பும் வழிகாட்டலும் கிடைத்தது. அத்துடன் இளம் கம்யூனிஸ்டான மற்றொரு அயலவரான குமாரலிங்கத்தின் நட்பானது தோழமையாக மாறியது. தோழர் ,சூடாமணி 1958ல் கம்யூனிஸ்ட் கட்சி வாலிபர் இயக்கத்திலும் அதே ஆண்டில் கட்சி உறுப்புரிமையும் கிடைக்கப்பெற்றார். அன்றைய நாட்களில் ஆரம்பித்த தோழர் சூடாமணியின் பொதுவுடைமைப் பயணம் பல்வேறு கட்டங்களில் பல்வேறு விதம் எதிர்ப்புக்கள் சவால்கள் போராட்டங்கள் தாக்குதல்கள் மத்தியில் தொடர்ந்தது. இது பொதுவுடைமைப் பயணம் மேற்கொண்ட ஒவ்வொரு நாடுகளிலும் கம்யூனிஸ்டுக்கள் எதிர்கொண்டவைகள் தான். சமூக ஒடுக்குமுறைகளை எதிர்த்தப் போராடி வந்த பொதுவுடைமைவாதிகள் சொந்த வாழ்வில் இல்லாமை போதாமை வறுமை நோய்கள் போன்றவற்றுடனும் போராடியவாறே தமது புரட்சிகர வாழ்வைத் தொடர்ந்தனர். இவ்விடயத்தில் மாமேதை மாக்சிடமிருந்தும் பொவுடைமைவாதிகள் கற்றுக்கொண்டனர். மாக்ஸ் மாக்சிச தத்துவத்தையும் அதற்கான நடைமுறையையும் மட்டும் தந்து செல்லவில்லை. கடுமையான வறுமையிலும் தான் வகுத்த தத்துவத்தையும் கொள்கையையும் கையிழக்கத் தயாராக இல்லாத லட்சியவாதியாகவே மாக்ஸ் முன்னுதாரண வாழ்வு வாழ்ந்து காட்டிச் சென்றார்.

தோழர் சூடாமணி ஓர் உழைப்பாளியாக வாழ்ந்த அதே வேளை ஒரு நேர்மையான பொதுவுடைமைவாதிக்குரிய மாக்சிச வாழ்வியலை வாழ்வாகக் கொண்டவர். உழைக்கும் மக்களுக்கான பொதுவுடைமைக் கட்சியைக் கட்டியெழுப்பி வளர்ப்பதில் ஏனைய தோழர்களுடன் இணைந்து கூட்டுப் பங்களிப்பை வழங்கியவர். அதேபோன்று உழைக்கும் மக்களிடையே காணப்பட்ட பிரச்சினைகள் ஒடுக்குமுறைகள் நெருக்கடிகளுக்கு எதிராக மாக்சிச லெனினிச நிலைநின்று தன்னால சேவை புரிந்து வந்தவர். அதனால் வாலிபர் அணியில் ஆரம்பித்த அவரது வேலை முறை கட்சி, தொழிற்சங்கம், வெகுஜன இயக்கங்கள், இலக்கிய அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புகள் ஊடே முன்சென்றது. எளிமையான வாழ்வு கடுமையான கட்சிப் பணி என்ற வரையறையைக் கொண்டு தனது இறுதி மூச்சுவரை வாழ்ந்த தோழர் சூடாமணி மூத்த பொதுவுடைமைவாதி என்ற பெயருக்குரிய தகுதியைப் பெற்றும்கொண்டார்.

தோழர் சூடாமணி பழைய பொதுவுடைமைக் கட்சியில் இணைந்து தோழர்கள் மு.கார்த்திகேசன், அ.வைத்திலிங்கம், ஐ.ஆர்.அரியரத்தினம், சு.வே. சீனிவாசகம் போன்ற ஆரம்பகாலத் தோழர்களின் கீழ் அரசியல் வேலைக்குப் பயிற்சி பெற்றவர். அக்காலத்திலேயே தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்துடனான நெருக்கமான தோழமை உறவும் வேலை முறையும் இவருக்குக் கிடைத்தது. 1964ல் தோழர் நா.சண்முகதாசன் - பிரேமலால் குமாரசிறி தலைமையில் புரட்சிகரப் பொதுவுடைமைக் கட்சி பழைய கட்சியில் இருந்து பிரிந்து ஆரம்பித்த போது வடபுலத்தில் புரட்சிகரப் பாதையில் அணி திரண்ட அணியில் சூடாமணியும் ஒருவராகி முன்னணியில் நின்று அரசியல் வேலை முறையினை முன்னெடுத்தார். 1964ல் வடபுலத்து வாலிபர் இயக்கத்திற்கு தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் பிரதேச செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டபோது தோழர் சூடாமணி அதன் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். வாலிபர் இயக்கத்திற்கு நிதி திரட்டுவதிலும் அதனைப் பேணிப் பாதுகாப்பதிலும் அவர் கடுமையாக உழைத்தது மட்டுமன்றி அடுத்த மாநாட்டின் போது சமர்ப்பித்த கணக்கறிக்கையில் மேலதிக இருப்பாக இருந்த தொகையைக் காட்டி மாநாட்டின் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டமை இப்போதும் நினைவிருக்கிறது. 1968-78க் காலப்பகுதியில் கட்சியின் வடபிரேதசக் கமிட்டியில் ஒரு உறுப்பினராக இருந்து வேலைகளை முன்னெடுத்தாரெனில் அவரது அரசியல் வேலையின் கனதியை நாம் காணமுடியும். அவ்வாறே தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தைப் பொதுச்செயலாளராகக் கொண்ட இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) 1978ல் தோற்றம் பெற்றபோது அதன் மத்தியகுழுவிற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். அக்கட்சியின் பெயர் புதிய ஜனநாயக கட்சி எனப் பெயர் மாற்றம் பெற்று தோழர்.சி.கா.செந்திவேல் பொதுச்செயலாளராகிய பின்பும் தோழர் சூடாமணி நான்காவது மாநாடுவரை மத்திய குழுவிற்கு தெரிவாகி வந்தார். 2010ல் ஐந்தாவது அனைத்திலங்கை மாநாட்டிற்கு முதுமையடைந்த நிலையில் வந்திருந்த போது கட்சி மத்திய குழுவில்தனது வயது சுகவீனம் காரணமாகத் தொடரமுடியவில்லை என ஓய்வுக் கடிதம் சமர்ப்பித்து மத்திய குழுப் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். அம்மாநாடு அவரைப் பாராட்டிக் கௌரவித்தது.

தோழர் சூடாமணி ஐம்பத்தைந்து ஆண்டுகள் மாக்சிச லெனினிச வழி நின்று அரசியல் பணி யாற்றிய தோழர் 'அவரிடம் நிறைந்திருந்த வர்க்க நிலைப்பாடும் போராட்டக் குணாம்சமும் இறுதிக் காலம் வரை மங்காது ஒளிர்ந்தவாறே இருந்து வந்தது.



அவரது கடுமையான கட்சிப் பணியால் தனது உடல் உழைப்பின் மூலம் ஒரு மகள் நான்கு பிள்ளைகள் மனைவி ஆகியோரைக் கொண்ட குடும்பத்தை மிகக் குறைந்த வாழ்க்கைத் தரத்துடனேயே பேண முடிந்தது. உணவு உடை இருப்பிடம் என்ற அடிப்படைத் தேவைகளைக் கூட குறைந்தளவாவது வழங்குவதற்கு தோழர் சூடாமணி கஷ்டப்பட்டார். அவ்வாறான சூழலிலும் அவர் தனது கட்சிப் பணியை ஒருநாள் தானும் கைவிட்டது கிடையாது. தன்னால் கொடுக்கக் கூடியதாக இருந்த கல்வியைத் தனது பிள்ளைகளுக்கு கஷ்டங்கள் மத்தியிலும் கொடுக்கத் தவறியதில்லை. குடும்ப நிலை அறிந்து பிள்ளைகளும் கல்விக்கு முதலிடம் கொடுத்து வந்ததோடு கட்சியோடும் கட்சித் தோழர்களுடனும் கட்சி நண்பர்களுடனும் ஆதரவுடனும், நெருக்கமாகவும் இருந்து வந்தனர். அவை குடும்ப உறவுக்கும் மேலான தோழமை நட்புக் கொண்ட உறவாகியது.

தோழர் சூடாமணியின் அரசியல் வாழ்வும் குடும்ப வாழ்வும் நமது இளம் தோழர்கள் படிப்படிதற்குரிய பல பாடங்களைக் கொண்டிருக்கிறது. இன்றைய உலகமயமாதல் சூழலில் இளம் தலைமுறையினர் சமூக அக்கறைகளோ அல்லது உழைக்கும் வர்க்க அக்கறைகளோ அற்றவர்களாக சமூகச் சீரழிவுகளுக்குள் சிக்குண்டு வருவதைக் காண முடிகிறது. வேறும் சிலர் மாக்சிச லெனினிசக் கட்சியில் இருந்து இயக்கமற்று ஒதுங்கிக் கொள்வதைக் காண முடிகிறது. அத்தகையவர்கள் சிலருடன் தோழர் சூடாமணி, பசுபதி, லிங்கம் போன்றவர்களின் அறுபது, ஐம்பத்தைந்து, நாற்பது வருட தொடர்ச்சியான அரசியல் வாழ்வை ஒப்பிட்டுப் பார்த்தால் முற்றிய நெல்மணிகளுக்கும் பதர்களுக்கும் உள்ளவாறான வித்தியாசத்தையே காண இயலும். இன்றைய முதலாளித்துவ நவகொலனித்துவ உலகமயமாதல் வேகமடைந்துள்ள சமூகச் சூழலில் பழைமைவாதச் சிந்தனைகள் வலுவாக நிலைத்து நின்று ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில் அவை யாவற்றுக்கும் முகம் கொடுத்து ஒரு உறுதிமிக்கப் பொதுவுடைமைவாதியாக இருந்துவருவது இலகுவான விடயம் அல்ல. தோழர் மாஓ கூறியது போன்று "ஒரு கம்யூனிஸ்ட் என்பர் ஒரு சோதனையில் மட்டும் சித்தியடைந்து விட்டேன் என்ற தன்திருப்தியில் இருந்துவிட முடியாது. மீண்டும் மீண்டும் வரும் ஒவ்வொரு சோதனையிலும் சித்தி பெற்றுக் கொண்டே இருத்தல் வேண்டும்." தோழர் சூடாமணியின் வாழ்விலும் அரசியல் பணியிலும் இருந்து இளம் தலைமுறையினர் நிறைவே கற்றுக் கொள்வதற்கு இருக்கிறது.

## தோழர் வ. மகாதேவன் (லிங்கம்)



**தோழர் வ.மகாதேவன்** (லிங்கம்) சங்கானை நிச்சாமம் கிராமத்தைச் சேர்ந்தவர். 1955ல் பிறந்த அவர் தனது 58வது வயதில் கடும் நோய் காரணமாகக் கடந்த 12-03-2013 அன்று இயற்கை எய்தினார். அவர் இறக்கும் போது புதிய – ஜனநாயக மாக்சிச – லெனினிசக் கட்சியின் உறுப்பினராகவும் வடபிராந்தியாக் குழுவில் ஒருவராகவும் இருந்து வந்தார். அவர் கடந்த மூன்று வருடங்களாக நோய்களுடன் போராடியவாறே வாழ வேண்டி இருந்தது. அதனால் அவரது தொழிலில் நஷ்டமும் மோசமான குடும்பக் கஷ்டமும் அவரைப் பிடித்தாட்டியது. இருப்பினும் தோழர் லிங்கம் மனம் தளராத ஒரு மாக்சிஸ்ட் லெனினிஸ்டுக்குரிய வர்க்க நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து வந்தார். கட்சிக்கும் மக்களுக்கும் நேர்மையாக வாழ்வதில் உறுதி மிக்க ஒரு தோழராகவே செயற்பட்டு வந்தார்.

தோழர் லிங்கம் மிக இளவயதிலேயே மாக்சிச லெனினிச அரசியலாலும் கட்சியாலம் ஈர்க்கப்பட்டிருந்தார். அதற்குப் புரட்சிகரப் போராட்டங்களை முன்னெடுத்த நிச்சாமம் கிராமமும் அவரது குடும்பச் சூழலும் காரணமாயிற்று. 1972ல் தோழர் லிங்கம் வாலிபர் அணியிலும் அதன் பின் புரட்சிகர மாக்சிச லெனினிசக் கட்சியிலும் சங்கானையில் அணிவகுத்த இளம் உறுப்பினர்களிடையே துடிப்புடன் செயல்படும் ஒருவராகி நின்றார். சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில் குறிப்பிடத்தக்க வெற்றிகளும் சமூக நிலைமைகளில் ஒரு திருப்பு முனையும் ஏற்பட்ட சூழலில் அதற்குப் பின்னான காலப்பகுதியில் கட்சியையும் அதன் வெகுஜன அமைப்புகளையும் விரிவடையச் செய்வதில் பங்களித்த தோழர்களில் தோழர் லிங்கமும் ஒருவராக நின்றார்.

மக்களுக்கும் கட்சிக்கும் பிரச்சினைகள் நெருக்கடிகள் வந்த வேளைகளில் தோழர் லிங்கம் ஒரு புரட்சிகரப் போராளிக்குரிய நிலைநின்று செயல்பட்டு வந்தமை வரலாற்று நினைவுகளாகவும் பதிவுகளாகவும் தொடரும். அவர் கட்சியையும் அதன் இளைஞர் அணியையும் சங்கானை நிச்சாமத்தில் முன்னெடுத்துச் செல்ல முன்னிலை வகித்து வந்தவர். தோழர்கள் தருமு. இராஜதுரை, துரைசிங்கம் சின்னராசா, பழனி, ராதா போன்ற தோழர்களுடன் இணைந்து தோழர் லிங்கம் செயல்படுவதில் முன்னணியில் இருந்து வந்தார். 1980 பதுகளுக்குப் பின்பு தமிழ்த் தேசியத்தின் பேரால் பல்வேறு ஆயுத இயக்கங்கள் தோன்றி தமிழ் மக்களுக்கு 'விடுதலை' பெற்றுத் தருவதாகக் கூறிச் செயற்பட்ட வேளையில் எமது மாக்சிச லெனினிசக் கட்சி பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று. பல தோழர்கள் கண்காணிப்பு, விசாரணை, தடுத்து வைப்பு, சித்திரவதைகளுக்கும், மிரட்டல்களுக்கும் உள்ளாகினர். அவ்வேளையில் நமது கட்சி உறுப்பினரான தோழர் சி. துரைசிங்கமும் ஆதரவாளரான நடேசுவும் புலிகளால் கூட்டிச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். சில மாதங்களின் பின் அவர்கள் கொல்லப்பட்டதாக அறிவித்தனர். அக்காலப் பகுதியில் மேலும் பல தோழர்கள் கூட்டிச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அவர்களில் தோழர் லிங்கமும்

13>>

## தோழர் பாலன் பசுபதி



சங்கானைத் தோழர் பாலன் பசுபதி கடந்த 12-04-2013 அன்று தனது எண்பத்தி நான்காவது வயதில் இயற்கை எய்தினார். அவர் இறுதிவரை பொதுவுடைமைக் கொள்கை வழி நின்று மாக்சிசம் லெனினிசம் மாஓசே சிந்தனையை முன்னெடுக்கும் ஒரு தோழராகச் செயற்பட்டு வந்தவர். தோழர் பசுபதி தனது இருபதாவது வயதில் அன்றைய பொதுவுடைமைக் கட்சியின் வாலிபர் இயக்கத்திலும் அதன் பின் கட்சியிலும் உறுப்புரிமை பெற்று அதன் கொள்கைகள் நோக்கங்களுக்காக செயல்பட்டும் வந்த சங்கனைப் பகுதித் தோழர்களில் முன்நிலைப் போராளியாக இருந்து வந்தார். ஓர் பொதுவுடைமைவாதி தான் வாழுகின்ற சமூகச் சூழலில் காணப்படும் சமூக ஏற்றத்தாழ்வுகள், சமூக அநீதிகள், சமத்துவ மறுப்புக்கள், சுரண்டல், மனிதரைப் பிரித்து வைத்து ஒடுக்கி வரும் சாதிய தீண்டாமைக் கொடுமைகள் போன்றவற்றை எதிர்த்துப் போராடுவதில் முன்நிலையாளராகவே இருந்து கொள்வர். அந்த வகையில் தோழர் பசுபதியும் மேற்கூறிய சமூக அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்துப் போராடுவதில் பொதுவுடைமைப் போராளியாகவே வாழ்ந்து வந்தார்.

தோழர் பசுபதி தனது இளமைக் காலத்திலேயே சாதிய தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற எண்ணப் பதிவுக்கு உள்ளானார். அதற்கு தனிமனிதனாக நின்று எதையும் சாதிக்க முடியாது. எனவே பொதுவுடைமைக் கட்சியே அதற்குரிய உழைக்கும் வர்க்கக் கட்சி எனக் கண்டு ஏனைய சங்கானைப் பகுதி இளைஞர்களையும் அணி சேர்த்து செயல்பட்டார். அவர் சிறந்த உடல் உழைப்பாளியாகவும் உடற்பலம் மட்டுமன்றி உளப்பலமும் கொண்டவராகத் திகழ்ந்தார். வர்க்கப் போர்க்குணம் அவரிடம் வளர்ந்து வந்தது. மாக்சிசம் அதற்கு வழிகாட்டியது. தனது உடல் உழைப்பைக் கொண்டு குடும்ப வாழ்வை அமைத்ததுடன்' எளிமையான வாழ்வும் கடுமையான போராட்டமும் 'என்பதற்கிணங்க வாழ்ந்தவர். 1970ம் ஆண்டுவரை வடபுலத்தில் நிலவிய சாதிய- தீண்டாமைக் கொடுமைகள் பற்றி இன்றைய தலைமுறையினர் அறியமாட்டார்கள். இன்னும் சிலர் அந்தக் கொடுமைகள் யாவும் ஆயுதம், ஏந்திய தமிழ் இயக்கங்களாலும் குறிப்பாகப் புலிகளாலும் ஒழிக்கப்பட்டது என்ற வரலாற்றுத் திரிப்புக் கதைகளையே கேட்டிருப்பர். ஆனால் புரட்சிகர மாக்சிச லெனினிசவாதிகள் முன்னெடுத்த போராட்டங்களினால்தான் சாதியத் தீண்டாமை அடித்து வீழ்த்தப்பட்டு பலமிழக்கச் செய்யப்பட்டது பற்றி அதிகம் பேசப்படுவதில்லை. தமிழ்த் தேசியம் பேசுவோர் அதனை மறைத்துக் கொள்வர்.

தோழர் பசுபதி 1960ம் ஆண்டில் சங்கானைக் கிராமத்திற்கு அருகில் இருந்த

13>>

# ஐ.தே.க. ஆட்சியின் புதிய அரசியல் யாப்பு

# ஆட்சி அதிகாரப் பசி தீர்ப்பதற்கே !

யூ.என்.பி. தலைவர் புதிய அரசியல் யாப்பு ஆலோசனையில் முன்வைத்துள்ள இரண்டு முக்கிய விடயங்கள் 1978 இல் அறிமுகமான யாப்பினின்று அடிப்படையில் வேறுபடுகின்றன. ஒன்று நிறைவேற்றதிகார சனாதிபதி முறையின் நீக்கம். மற்றது விகிதாசார அடிப்படையில் மாவட்ட ரீதியான பாராளுமன்றத் தேர்தல் முறைக்குப் பதிலாகப் பழைய தொகுதிவாரி முறைக்கு மீளல். நிறைவேற்றதிகார சனாதிபதி முறையில் தவறில்லை அதைப் பின்னர் பொறுப்பேற்றோரே அதைப் பிழையாகப் பயன்படுத்தினர் என்றவாறு 1978 யாப்பின் கர்த்தாவான தனது நெருங்கிய உறவினரான ஜயவர்த்தனவை நியாயப்படுத்துகிறார். 1978 யாப்பு அடிப்படையிலேயே தவறானது என்பதை ஏற்றால் அது யூ.என்.பியின் சனநாயக நம்பகத்தன்மையைக் குலைத்துவிடும் என அவர் அறிவார். ஆனால் இவ்வளவு எளிதாகக் துஷ்பிரயோகிக்கப்படக் கூடிய அதிகாரத்தை ஒரு தனிமனிதருக்கு வழங்கும் யாப்பின் நோக்கம் தவறானது, அதன் தூரநோக்கின்மை கண்டிக்கத்தக்கது. ஜயவர்த்தன அந்த யாப்பைப் பயன்படுத்தித் தன் அரசியலில் எதிரிகளைப் பழிவாங்கியதும் தனது அதிகாரத்தைப் பாவித்து முறைகேடான முறையில் தானே நியமித்த பிரதம நீதியரசரைத் தன்னை மீறித் தீர்ப்பு வழங்கியதற்காகப் பதவி நீக்க முயன்றதும் அவரது ஜனநாயக விரோதத்தின் இரண்டு வலிய உதாரணங்கள். அதைவிடத் திகதியிடாத பதவி விலகற் கடிதங்களை வாங்கிக்கொண்டே தேர்தலில் நிற்க நியமனம் வழங்கிய முறைகேடு மட்டுமே அவருடைய சட்டவிரோத சனநாயக விரோத மனப்பாங்கின் சான்றாகும். 1983ம் ஆண்டு ஒரு சர்வசன வாக்கெடுப்பின் மூலம் பொதுத் தேர்தலைத் தவிர்த்தமையை நாம் மறந்திருக்கமாட்டோம். தேசிய இனப்பிரச்சினையை ஒரு போராக்கி நாட்டைப் பொருளாதாரப் படுகுழிக்குள் இழுத்துச் சென்ற ஒரு சனநாயக விரோதியை விமர்சிக்க ஆயத்தமில்லாத யூ.என்.பி தலைமையின் சனநாயக அக்கறையை நாம் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன்தான் கணிப்பில் எடுக்க இயலும்.

இந்த யாப்பு ஆலோசனை இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை பற்றிய அடிப்படையிலான புரிதலைக் கூடக் காட்டுவதாகக் கூற இயலாது. இலங்கையின் தேசிய இனங்களையும் அவற்றின் பிரதேச உரிமைகளையும் ஏற்க மறுக்கிற ஒரு அரசியல் யாப்பு அதிகாரப் பரவலாக்கம் பற்றிப் பேசுகிறது. ஆனால் திட்டவட்டமாக எதையும் கூறுவதைத் தவிர்க்கிறது. முன்னுக்குப் பின் முரணான பல வேறு 'தீர்வு ஆலோசனைகளின்' அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கத்தைப் பற்றிப் பேசுகிற ஒரு கட்சி முடிவில் எதை வழங்கும் என்பதைப் பற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும். இந்த மாற்று யாப்பு ஆலோசனையை விடத் தெளிவான தீர்வுப் பிரேரணைகளை முன்வைத்த பண்டாரநாயக்கா செல்வநாயகம் உடன்படிக்கை, டட்லி சேனநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை, சந்திரிகா குமாரதுங்கவின் புதிய யாப்புப் பிரேரணை போன்ற ஒவ்வொன்றையும் செயற்படுத்த இயலாமற் செய்ததில் யூ.என்.பியின் பங்கு பெரியது. தேசிய இனப் பிரச்சினையில் யூ.என்.பி யின் நேர்மையான அக்கறைக்கு அவை ஒவ்வொன்றும் உரைக்கல்லாக அமையும். விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் யூ.என்.பி. எவ்வளவு நேர்மையுடன் நடந்தது என்பதை விடுதலைப் புலிகளைப் பிளவுப்படுத்த அமெரிக்கவைப் பாவித்த கதை 2005 இல் வெளிவந்த போதே அறிவோம்.

எனவே யூ.என்.பியின் இந்த மாற்று யாப்பு என்பது சிங்கள மக்களிடையே நிறைவேற்றதிகார சனாதிபதி முறையின் அதிகார அத்துமீறல்கள், தெரிவு வாக்குமுறையின் விளைவான சீர்கேடுகள் போன்ற அதிருப்திகளை மனதிற்கொண்டு ஆக்கப்பட்ட ஒரு தேர்தல் விஞ்ஞாபனமாக மட்டுமே நோக்க இயலும். எந்தத் தேர்தல் வாக்குறுதியும் நிறைவேற்றப்படுமென உத்தரவாதம் இல்லை. யூ.என்.பி. யின் வரலாற்றை நோக்கும் எவருக்கும் இந்த மாற்று யாப்பு ஆலோசனையை நம்பி மக்கள் ஏமாறும் வாய்ப்பு அதிகம் இல்லை என விளங்கும்.

## 12>> பசுபதி

வட்டுக் கிழக்கு சுரட்டிப்பனை அம்மன் கோவிலில் இடம்பெற்ற ஆலயப் பிரவேசத்திற்கு தலைமை தாங்கினார். அக் கோவிலில் தாழ் த்தப்பட்ட மக்களுக்கென ஒரு திருவிழா இருந்த போதிலும் அவர்கள் அதற்கான பணத்தைச் செலுத்தி விட்டு வெளியே வெறும் பார்வையாளர்களாக மட்டுமே இருந்து வந்தனர். இந்நிலையிலேயே அங்கு ஆலயப் பிரவேசப் போராட்டம் தோழர் பசுபதியின் தலைமையில் இடம் பெற்றது. நீதிமன்றம் வரை சென்ற அவ்விடயம் இறுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் உட்செல்லலாம் என்ற தீர்ப்புடன் மக்கள் போராட்டம் வெற்றி பெற்றது.

அதன் பின்பே 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியும் அதன் தாக்கத்தால் எழுந்த போராட்டங்களும் வடபுலத்தை உலுக்கியதுடன் முழு இலங்கையில் அதிர்வுகளைக் கொண்டு வந்தது. தேனீர் கடைப் போராட்டங்களுக்கு சங்கானைப் போராட்டமும், ஆலயப் பிரவேசத்திற்கு மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் போராட்டமும் மக்கள் சக்தி மூலமான வெகுஜனப் போராட்டத்திற்கு வலுமிக்க அடையாளத் தடங்களாகியது. தோழர் பசுபதி போன்ற போராளிகள் சட்ட மறுப்பு சட்டபூர்வம் ஆகிய இரண்டு தடங்களிலும் கால் பதித்து நின்று போராடினர்.

தோழர் பசுபதி ஆயுத நடவடிக்கை தந்த போராட்டங்களினால் சந்தேகத்தின் பேரில் 1967-69 கால கட்டத்தில் சுமார் இரண்டரை ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டிருந்தர். 1965ல் சங்கானை சந்தயடி வட்டார மக்கள் தோழர் பசுபதியை பட்டினசபைக்கு ஒரு உறுப்பினராகத் தெரிவு செய்திருந்தனர். அப் பதவி அவரது சிறைவாசத்தால் இல்லாது போய்விட்டது. நீதிமன்றம் தோழர் பசுபதியையும் ஏனைய இரண்டு தோழர்களையும் நிரபராதி எனக் கண்டு விடுதலை செய்து கொண்டது. அதேவேளை சங்கானைத் தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டம் வெற்றி பெற்றதுடன் ஏனைய பிரதேசங்களில் இடம்பெற்ற ஆலய தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்களுக்கும் உந்துதல் அளித்தது. அவ் வேளைகளில் தோழர் பசுபதியும் ஏனைய சங்கானைத் தோழர்களும் தமது ஆற்றல்கள் முழுவதையும் பயன்படுத்தினர். அதே போன்றே ஏனைய பிரதேசங்களிலும் போராளிகளும் சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில் பங்கு கொண்டு உயிர்த்தியாகங்களின் ஊடே தீண்டாமைக் கொடுமைகளை முறியடித்தனர்.

தோழர் பசுபதி புரட்சிகரப் பொதுவுடைமைக் கட்சியினதும் மக்கள் போராளியாக இறுதிவரை திகழ்ந்தவர். அவரிடம் காணப்பட்ட வர்க்கப் போர்க் குணமானது ஒடுக்குமுறைகளுக்கும் அநீதிகளுக்கும் எதிரான போராட்டங்களில் எல்லாம் முன் நிற்க வைத்தது. இதனால் மக்களால் போற்றப்பட்டார், பாதுகாக்கப்பட்டார். அதேவேளை பழைமைவாதப் பிற்போக்குவாதிகள், சாதிவெறியர்கள், தோழர் பசுபதியைச் 'சண்டியன் பசுபதி' என்றே அழைத்தனர். ஆனால் தோழர் பசுபதி தனது வாழ்நாளில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனது போர்க்குணத்தை தனக்காகவோ தனிப்பட்ட தகராறுகளிலோ வெளிக்காட்டியது கிடையாது. அதே போன்று தனது உடல் உழைப்பாலேயே குடும்பத்தை பாதுகாத்தும் வந்தார். அவரது மனைவி மாரிமுத்து ஒரு பொதுவுடைமைக் கட்சியின் மக்கள் போராளியின் துணைவிக்குரிய நிலைநின்று வந்தவர். பொலீஸ் கெடுபிடிகள், தேடுதல்கள், சிறை, தலைமறைவு அத்தனையையும் அனுபவித்த சூழல்களிலும் மனைவியானவர் கணவனைப் பாதுகாத்து கட்சித் தோழர்களுக்கு ஆதரவு கொடுத்து குடும்பத்தையும் பிள்ளைகளையும் வளர்த்தவர். புதிய-ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 25வது ஆண்டு விழாவின் (2013) போது மூத்த தோழர்கள் ஆறு பேரைப் பாராட்டி செஞ்சால்வை அணிவித்து கட்சியின் சின்னம் பொறித்த விருது வழங்கி கௌரவித்தது. அவர்களில் தோழர் பசுபதியும் ஒருவராவார். அவ்வேளை அவரது துணைவியாரும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். இறுதிவரை தோழர் பசுபதி பு.ஜ.மா.லெ கட்சியோடும் தோழர்களோடும் இணைந்து இருந்து வந்தவர். அவருக்கு மூன்று ஆண்களும் ஒரு மகளும் உள்ளனர். அவர்களும் தமது தந்தையின் போராட்ட வாழ்வுடனும் கட்சியின் நடவடிக்கைகளிலும் இளமைக் காலத்தில் ஈடுபாடு கொண்டிருந்தனர். இப்போதும் கட்சிக்கு ஆதரவு தெரிவித்து நிற்பவர்கள்.

தோழர் பசுபதியின் வாழ்வும் போராட்டங்களில் அவர் வழங்கிய பங்களிப்புகளும் அர்த்தமுடையவையும் என்றும் நினைவுக்குரிய புரட்சிகர செயற்பாடுகளுமாகும். அவரது அனுபவங்கள் இளம் தலைமுறையினரான கட்சியின் தோழர்களுக்கு பயன் உடையவையாகும். தோழர் பசுபதிக்கு புதிய- ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மத்தியக் குழுவும் அனைத்து உறுப்பினர்களினதும் புரட்சிகர செவ்வஞ்சலி உரியதாகும்.

## 12>> லிங்கம்

ஒருவராவார். அதன் மூலமே ஏனைய சில தோழர்கள் கடும் நோய்களுக்கு உள்ளாகியது போன்று தோழர் லிங்கமும் உள் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டு நோயாளியாகினார். புலிகளின் விசாரணையின் போது நாங்கள் கம்யூனிஸ்டுக்கள் மாக்சிச லெனினிசவாதிகள் என்பதை அச்சமின்றி எடுத்துரைத்து மக்கள் சார்பு நிலையை தெளிவோடும் துணிவோடும் எடுத்துரைத்த தோழர்களில் தோழர் லிங்கம் ஒருவராக இருந்தார்.

தோழர் லிங்கம் வர்க்க உணர்வும் கட்சியை வளர்த்து முன்னெடுக்க வேண்டும் என்ற உந்துதலும் கொண்ட தோழராகவே வாழ்ந்து வந்தார். பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் பின்வாங்காத சோர்வோ விரக்தியோ அடையாத தோழராக இருந்து வந்தார் என்பது அவருக்குரிய புரட்சிகர நிலைப்பாடாகும். உலகமயமாதலும் புலப்பெயர்வும் சில குறிப்பிட்டவர்களின் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டது. சிலர் மேனிலையாக்கம் பெற்று பழைய புரட்சிகரப் போராட்டப் பாரம்பரிய நிலைப்பாட்டைக் கடந்தவர்களாகிக் கொண்ட சூழலிலும் நிச்சாமத்தின் புரட்சிகரப் போர்க்குணத்தினதும் மாக்சிச லெனினிச அரசியல் நிலைப்பாட்டினதும் தெளிவான அடையாளமாகத் தன்னை வெளிப்படுத்தி நின்றவர் தோழர் லிங்கம்.

ஒடுக்கப்படும் உழைக்கும் மக்களது விடுதலைக்கு மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை காட்டும் வெகுஜனப் போராட்ட மார்க்கமும் புரட்சிகர நிலைப்பாடுமே சமூக மாற்றத்தைக் கொண்டுவரக் கூடியது என்பதை சொல்லாலும் செயலாலும் முன்னெடுப்பதில் தோழர் லிங்கம் முன் நின்றார். அதன் அடிப்படையிலேயே எமது புதிய- ஜனநாயக மாக்சிச – லெனினிசக் கட்சியைக் கட்டிக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார். உள்ளிருந்தும் வெளியில் இருந்தும் கட்சியை நோக்கி நெருக்கடிகள் வந்த வேளைகளில் அவர் கட்சியையும் அதன் வெகுஜன அமைப்புக்களையும் பாதுகாப்பதில் ஏனைய தோழர்களோடு இணைந்து நின்று ஊக்கமுடன் செயல்பட்டும் வந்தார். ஒரு நேர்மையான பொதுவுடைமைவாதி தான் வாழும் வரையில் மட்டுமன்றி தனக்குப் பின்பும் கட்சியானது நிலைத்து நின்று போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டி நிற்பார். அத்தகைய ஒரு நிலைப்பாட்டை தோழர் லிங்கம் தனது வாழ்வின் இறுதி நேரத்திலும் கொண்டிருந்தார். இறப்பதற்கு மூன்று நாட்கள் முன்னதாக கட்சியின் தலைமைத் தோழர்கள் அவரை அவரது வீட்டில் சென்று சந்தித்து சுகம் விசாரித்தப் பேசிக் கொண்டிருந்த போது 'கட்சி சரியான பாதையிலேயே சென்று கொண்டிருக்கிறது. இன்றைய சூழலும் எதிர்காலமும் கட்சியை மேலும் முன்னெடுக்க வாய்ப்புகளையே வழங்கும். எனக்குப் பின் எனது மகன் கட்சிப் பணியில் தொடர்வான்' எனக் கூறி அருகில் இருந்த மகனை நோக்கித் 'தம்பி எங்களது கட்சியின் பெயர் என்ன என்று கேட்கிறார். அந்தப் பத்து வயதுச் சிறுவன் கட்சி நூல்களை கைகளில் எடுத்தவாறு கட்சியின் பெயரைத் தெளிவாக அறுத்துறுத்துக் கூறுகிறான்.' அதனை மிகுந்த ஆர்வத்தோடு கண்களில் நீர் மல்க தோழர் லிங்கம் அவதானித்த காட்சி மறக்க முடியாத ஒன்றாக அமைந்திருந்தது.

தோழர் லிங்கம் சங்கானை நிச்சாமம் பிரதேசத்தில் சுமார் நாற்பது வருடகால மாக்சிச லெனினிச அரசியிலும் கட்சியை முன்னெடுப்பதிலும் வழங்கிய பங்களிப்பு காலத்தால் அழிய முடியாத தடங்களையே கொண்டுள்ளது. அவரது நினைவுகள் மக்கள் மத்தியிலும் கட்சி வாழ்விலும் என்றும் நிலைத்த நிற்கும். தோழர் லிங்கத்திற்கு கட்சி மத்திய குழுவினதும் முழு உறுப்பினர்களினதும் புரட்சிகர செவ் அஞ்சலி உரித்தாகுக!

## 5>> 13வது திருத்தம் வடக்கிலும்

என்னவெனில் உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் உபதலை வர்களுக்கும் மாகாணசபை உறுப்பினர்களுக்கும் வரிச் சலுகையின் கீழான இலகு கொடுப்பனவில் சொகுசு வாகனங்கள் வழங்கப்படவு ள்ளன. எனவே வேட்பாளர்கள் தெரிவில் கடும் போட்டி நிலவவே செய்யும். ஏனெனில் தமிழ்த் தேசியம் பற்றி உரத்துக் குரலிடுவோர் அதன் மறைவில் தமக்கான வரவுகள் லாபங்கள் சலுகைகள் பெறுவதையே நோக்காகக் கொண்டவர்களேயாவர். அவை மட்டுமன்றி தமிழ்த் தேசியம் என்பது பழைமைவாதத்தையும் அதன் கருத்தியல் சிந்தனையையும் முதலாளித்துவ நலன்களையும் அரவணைக்கும் போக்கையே கொண்டுள்ளது. அத்துடன் அந்நிய விசுவாசத்தையும் அடிமைத்தன அரவணைப்பையும் வேண்டிநிற்கிறது. இவற்றுடன் ஏனைய ஒடுக்கப்படும் முஸ்லீம் மலையகத் தேசிய இனங்களை உள்வாங்கவோ நெருங்கவோ மறுக்கிறது. அத்துடன் தெற்கின் சிங்கள உழைக்கும் சாதாரண மக்களை எதிரிகளாகவே காண்கிறது. மேற்கூறியவற்றை மீறியவாறான ஒரு முற்போக்கான தமிழ்த் தேசியம் மேற்கிளம்பாதவரை தமிழ் மக்களுக்கு சாதகமான நிலைகள் தோன்ற முடியாது. அவ்வா றான முற்போக்குத் தமிழ்த் தேசியம் முகிழ்த்துக் கொள்ளும் சூழலில் அதனுடன் உழைக்கும் மக்களது வர்க்கப் போராட்ட அரசியலானது இணைந்து பொது வேலைத் திட்டத்தின் ஊடே புதிய திசையில் புதிய இலக்கு நோக்கிப் பயணிக்க முடியும். எனவே ஆட்சி அதிகாரத்தடன் கைகோர்த்து நிற்கும். அடிப்படைவாத பேரினவாத சக்திகளை எதிர்த்து நிற்க இன்றைய தமிழர் தரப்புக் கட்சிகள் எதனாலும் முடியவே முடியாது என்பதே யதார்த்தமாக உள்ளது. இதனைத் தமிழ் இளம் தலைமுறையினர் தமது அரசியல் தேடலிலும் அக்கறையிலும் கண்டுகொள்ள வேண்டும்.

## 1>> மலையகத் தோட்ட நிலப்பறிப்பு

அவ்வாறு முன்னுரிமை வழங்கப்படுவதற்கு முற்றிலும் மலையகத் தமிழ் மக்கள் வரலாற்றுத் தகுதி யுடையவர்களாகவே இருந்து வருகின் றனர். இன்றுவரை மலையக மக்கள் நிலம் வீடு என்பன வற்றுக்குச் சொந்தமில்லாதவர்களாகவே இருக்கவிடப்பட்ட மக்களாவர். அவர்களது உழைப்பை உறுஞ்சிக் கொண்ட அளவுக்கு வாழ் க்கையின் அடிப்படைத் தேவைகள் மறுக்க ப்பட்டே வந்துள்ளன. அவை வர்க்கம் இனம் என்ற இரண்டு நிலைகளில் வைத்து நோக்கப் பட்டே விடயங்களும் அடக்கு முறைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இது பேரினவாத முதலாளித்துவ ஆளும் தரப்பினராக இருந்த எல்லோ ரினதும் பொது நிலைப்பாடாகும்.

மலையக மக்கள் தாம் பெறவேண்டிய அல்லது இயல் பாகவேகிடைக்கக் கூடிய ஒவ்வொன்றுக்கும் போராடியே வந்திருக்கிறார்கள். தோட்ட நிலங்கள் சுவீகரிப்பு என்ற பெயரில் பறிக்கப்பட்டு திட்டமிட்ட குடியேற்றங்கள் 'தோட்டக் கொலனிகள்' என்னும் பெயரில் உருவாக்கப்பட்ட போது அத்தோட்டங்களை வளமாக்கிய மலையகத் தமிழ் மக்களுக்கு சிறுதுண்டு நிலமும் அல்லது ஒரு வீடும் சொந்தமில்லை என்ற நிலையிலேயே விடப்பட்டனர். இன்றுவரை இந்நிலையே தொடர்கிறது.

ஏற்கனவே மாத்தளைப் பிரதேசத்தில் 37.000 ஆயிரம் ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட நடவடிக்கைகள் இடம் பெற்று வரும் சூழலிலேயே அரசாங்கம் 25000 ஆயிரம் ஏக்கர் தோட்ட நிலங்களைச் சுவீகரிக்கப் போவதாக அறிவித்துள்ளது. வடக்குக் கிழக்கிலே நிலப்பறிப்பு நில ஆக்கிரமிப்பு திட்டமிட்ட குடியேற்றம் என அரங்கேற்றிவரும் இன்றைய அரசாங்கம் இப்போது மலையகத்திலும் பேரினவாத அடிப்படையில் நிலச் சுவீகரிப்பு என்ற பெயரில் நிலப்பறிப்பையும் திட்டமிட்ட குடியேற்றத்தையும் முன்னெடுக்கிறது. இவற்றைத் தடுத்த நிறுத்தும் சக்தி மலையகத்தில் வாக்குப்பெட்டி அரசியல் மூலம் தொழிற் சங்க அரசியல் ஆதிக்கம் செலுத்தி ஆளும் அரசாங்கங்களோடு இணைந்து நிற்கும் தலைமைகளுக்கு இல்லை. எனவே மக்கள் தமது சக்தியை ஒன்று திரட்டி வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதுவே மலையக மக்களுக்கு உரிய நம்பிக்கை தரும் வழியாகும்.

# சாவெஸ் என்ற மானுடன், மக்கள் போற்றும் மாவீரன்




வெனசுவேலா ஜனாதிபதி ஹியூகோ சாவெஸின் மரணம் உலகில் உள்ள புரட்சிகர சக்திகளுக்குப் பெருந் துயரை உண்டாக்கியுள்ளது. சாவெஸ் அமெரிக்காவின் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார். இலத்தீன் அமெரிக்காவை அமெரிக்காவிடமிருந்தும் ஏகாதிபத்தியச் சுரண்டலில் இருந்தும் மீட்பதற்கான நீண்ட போராட்டத்தை அவர் நடத்தினார். இருபத்தியோராம் நூற்றாண்டின் மிக முக்கியமான புரட்சிகர ஆளுமை களில் ஒருவராக சாவெஸ் என்றென்றும் மதிக்கப்படுவார்.

அமெரிக்காவின் கொல்லைப்புறம் எனச் செல்லப்பட்டுவந்த தென் அமெரிக்கா இப்போது அமெரிக்காவின் கைப்பொம்மை அரசுககைக் கொண்டதல்ல. அமெரிக்காவிற்கு ஆதரவானதுமல்ல. உலக வரலாற்றில் நீண்டகாலமாக ஒடுக்கப்பட்ட சமூகங்களாக இருந்துவந்த தென்னமெரிக்க மக்கள் இப்போது விழிப்புற்றிருக்கிறார்கள். இது உலகின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உற்சாகத்தை அளித்திருக்கிறது. தென்னமெரிக்க, கரீபியன் நாடுகளில், அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு, அலை மேல் அலையாக எழுந்தவாறுள்ளது. தென்னமெரிக்க நாடுகளின் வளங்களைச் சுரண்டிக் கொள்ளையிட்ட வரலாறு தற்போது தடுத்துநிறுத்தப்படும் கட்டத்தை எட்டியுள்ளது.

**தென்னமெரிக்காவின் இடதுசாரி எழுச்சி முக்கியமான மக்கள் நலத்திட்டங்களைச் பலவற்றைச் சாத்தியமாக்கியிருக்கின்றது.**


கடந்த பத்தாண்டுகளில் தென்னமெரிக்காவில் ஏற்பட்ட இடதுசாரி எழுச்சியின் விளைவாக வெனசுவேலா, பொலிவியா, நிக்கராஹுவா, சிலி, பிரேசில், ஈக்குவடோடர், ஹெய்ற்றி போன்ற நாடுகள் தமக்கான சுய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்துச் சொந்தக் கால்களில் வழிநடக்க முனைந்துள்ளன. அமெரிக்காவின் காவல்நாய்கள் போன்று தென்னமெரிக்க நாடுகளில் சர்வாதிகார ஆட்சி நடத்திய பிற்போக்குக் குழுக்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் சரிந்துள்ளன. கியூபாவை முன்மாதிரியாகக் கொண்டு அதனுடன் இணைந்து அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பில் முன்னோக்கிச் செல்வதில் சாவெஸ் முன்னணியில் இருந்தார். ஏனைய இடதுசாரி அரசுகளுக்கு ஆதரவுத் தூணாக நின்றார். இன்று தென்னமெரிக்க நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பும் அதையொட்டிய செயற்பாடுகளும் அமெரிக்காவிற்குப் பெரும் சவாலாகவே இருந்துவருகின்றன. எனவே அந் நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புகளையும் தலைவர்களைக் கொல்வதையும் நோக்காகக் கொண்டு சி.ஐ.ஏ. போன்ற அமைப்புகள் செயற்பட்டுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

வெனசுலேவா உலகின் பெரிய எண்ணெய் உற்பத்தி நாடுகளில் ஒன்றாகும். அண்மைவரை அதன் முழு லாபத்தையும் அமெரிக்க, ஐரோப்பியக் கம்பனிகள் கொள்ளையிட்டன. சாவெஸின் வருகைக்குப் பின் அது முற்றாகத் தடுத்து நிறுத்தப்பட்டது. எண்ணெய் உற்பத்தி லாபம் அனைத்தும் வெனசுலேவா மக்களின் வறுமை ஒழிப்பிற்கும் கல்வி, சுகாதார மேம்பாட்டிற்கும் பயன்பட்டதுடன் ஏனைய பின்தங்கிய லத்தீன் அமெரிக்க நாடுகளின் அபிவிருத்திக்கும் உதவியாக வழங்கப்பட்டு வந்துள்ளது. அவ்வாறே பொலிவியாவின் இயற்கை வாயு உற்பத்தி லாபத்தை வெளியே எடுத்துச் செல்வதும் தடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, 2006ம் ஆண்டிலிருந்து தென் அமெரிக்காவில் வீசுகிற இடதுசாரி அலை உலக வரலாற்றில் முக்கியமானது. உலக அரசியல் வழமைக்கு மாறாக, சோசலிச இடதுசாரிகள் தேர்தல்கள் மூலம் பதவிக்கு வந்திருக்கிறார்கள். இது வெறுமனே ஒரு தொழிற்சங்கச் செயற்பாட்டினாலோ அல்லது குறித்த ஒரு பிரச்சனையை முன்வைத்த இயக்கத்தினாலோ உருவானதல்ல. மாறாகப் பரந்துபட்ட உழைக்கும் மக்களின் ஒன்றிணைந்த போராட்டங்களாலேயே இன்று பல தென்னமெரிக்க நாடுகளில் இடதுசாரிச் சார்பாளர்கள் ஆட்சிக்கு வந்துள்ளதுடன். தங்கள் ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைத்துள்ளார்கள். கடந்த பல தசாப்தங்களாகத் தென்னமெரிக்கா அமெரிக்க ஆசியுடைய சர்வாதிகார ஆட்சிகளால் நிரம்பியிருந்தது. நவகொலனித்துவமும் தாராளமயப் பொருளாதாரமும் தென்னமெரிக்க மக்களைப் பாடாய்ப்படுத்தின. பல்தேசியக் கம்பெனிகள் அளவற்ற வளச்சுரண்டல்களை மேற்கொண்டதோடு பல தென்னமெரிக்க, மத்திய அமெரிக்க அரசுகளை நேரடியாகக் கட்டுப்படுத்தியும் வந்தன. குறிப்பாக மத்திய அமெரிக்க நாடுகளில் வாழைத் தோட்டங்கட்கு உடைமையான கம்பெனிகள் அந் நாடுகளை மறைமுகமாக நிர்வகித்தன. இதனாலேயே வாழைப்பழக் குடியரசு (Banana Republic) என்ற பதம் உருவானது. இப் பின்னணியிற் தென்னமெரிக்க மக்கள் பல தடைகளையும் உடைத்துத் தங்கள் வாக்குகளால் மக்கள் நல அரசாங்கங்களை நிறுவியிருக்கிறார்கள். இது தென்னமெரிக்க வரலாற்றில் முக்கியமான திசைமாற்றமாகும். இவ் வடிப்படையிலேயே சாவெஸின் தலைமைத்துவத்தையும் சாதனைகளையும் நோக்கவேண்டும்.

இன்று அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பொருளாதார நெருக்கடி தொடர்ந்தும் அதிகரிக்கிறது. அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் சிக்கன நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. அவை மக்களை மேலும் கஷ்டப்படுத்துகின்றன. மக்கள் நலத்திட்டங்கள் குறைக்கப்பட்ட நிலைமை போய், இப்போது மக்கள் நலத்திட்டங்கள் இல்லாமலாக்கப்படுகின்றன. ஆனால், இடதுசாரி ஆட்சிகளை உடைய தென்னமெரிக்க நாடுகளில் மேலும் அதிக மக்கள் நலத்திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. இலவசக் கல்வியும் இலவச மருத்துவமும் வழங்கப்படுகின்றன. கியூபா இதில் முன்னிலையில் நிற்கிறது. மொத்தத் தேசிய உற்பத்தியில் கல்விக்கு 6% ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை இலங்கையில் எழுகையில், கியூபா மொத்தத் தேசிய உற்பத்தியில் 14%க் கல்விக்கு ஒதுக்குகிறது. கியூபாவில் 220 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற விகிதத்திற்கு மருத்துவத்துறை வளர்ந்துள்ளது. உலகிலே மிகக் குறைந்த தொகையினருக்கு ஒரு வைத்தியர் இருப்பது கியூபாவிலேயே. சர்வதேச அளவில் மருத்துவத் துறையில் கியூபா மிக முன்னேறியுள்ளது. கியூப மருத்துவர்கள் உலகெங்கிலும் உள்ள வறிய மக்களுக்கு இலவசச் சிகிச்சையளிக்கிறார்கள். உலகின் 77 வறிய நாடுகளில் 25,000க்கும் மேற்பட்ட கியூப மருத்துவர்களும் 10,000க்கு மேற்பட்ட கியூப மருத்துவப் பணியாளர்களும் பணிபுரிகிறார்கள். பல நாடுகளில் இயற்கை அனர்த்தங்களின்போது கியூபாவின் மருத்துவக் குழுக்கள் அங்கு சென்று இலவசமாகச் சேவையாற்றுகின்றன.

தென்னமெரிக்காவின் இடதுசாரி எழுச்சி முக்கியமான மக்கள் நலத்திட்டங்கள் பலவற்றைச் சாத்தியமாக்கியிருக்கின்றது. இடதுசாரிச் சார்பான அரசாங்கங்கள் ஒன்றோடொன்று ஒத்துழைப்பதுடன் மக்கள் நலத்திட்டங்களை இணைந்து முன்னெடுக்கின்றன. 2005இல் கியூபாவும் வெனசுவேலாவும் இணைந்து "அற்புத நடவடிக்கை" (Operation Miracle) என்ற திட்டமொன்றுக்கு உடன்பட்டன. அதன்படி, கியூபாவிற்கு வெனசுவேலா வழங்கும் எண்ணெய்க்கு ஈடாகக் கியூபக் கண் மருத்துவர்கள் வெனசுவேலாவின் வறிய கண் நோயாளர்கட்கு மருத்துவம் வழங்குவர். அதன் வெற்றியைத் தொடர்ந்து 35 நாடுகளில் 18 இலட்சத்திற்கும் அதிகமானோரின் கண்பார்வைப் பிரச்சனைகள் கியூப மருத்துவர்களால் களையப்பெற்று அவர்கட்குக் கண்பார்வை மீண்டுள்ளது. 1967இல் சே குவேராவைக் கொன்ற பொலிவிய இராணுவ வீரரான மரியோ தெரனுக்கும் கியூப மருத்துவக்குழுவே கண்பார்வையை மீட்டுக்கொடுத்தது. இதைப் பற்றிக் "கிரான்மா" பத்திரிகையில் கியூப அரசு பின்வருமாறு கருத்துத் தெரிவித்தது: "இற்றைக்கு நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் ஒரு மாபெரும் கனவை சிதைக்க மரியோ தெரோன் முயன்றார். இன்று சே மீண்டு வந்து இன்னொரு வெற்றியையும் பெற்றுக்கொடுத்துள்ளார். இன்று வயது முதிர்ந்த தெரன் நீலவானத்தையும் பச்சைக் காடுகளையும் காணவும் அவரது பேரப் பிள்ளைகளின் முகத்தில் தவழும் முறுவலை ரசிக்கவும் வழிசெய்துள்ளார்".




சாவெஸ் வெனசுவேலாவில் உழைக்கும் மக்களுக்குப் பல நல்ல திட்டங்களைக் கொண்டுவந்துள்ளார். குறிப்பாகப் பெண்களின் உரிமைகள் அரசியல மைப்பில் உறுதிப் பட்டிருப்பதோடு, வீட்டைக் கவனித்துக்கொள்ளும் பெண்களுக்கு முதுமையில் ஓய்வூ தியம் வழங்கும் ஒரே நாடாக வெனசு வேலா இருக்கிறது. ஒரேவிதமான வேலையைச் செய்யும் ஆண்களுக்குச் சமமான ஊதியம் பெறும் உரிமையும் குழந்தைப் பேற்றுக் காலத்தில் தேவைப்படும் உதவிகளை அரசாங்கத்தின்மூலம் பெறும் உரிமையும் பெண்களுக்கு உறுதிசெய்யப்பட்டுள்ளன. அத்தோடு சாவெஸின் கடந்த பத்தாண்டுக் கால ஆட்சியில் சமூக நலத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு 60% ஆல் அதிகரித்துள்ளது. மக்களினது அடிப்படைத் தேவைகள் நிறைவு பெற்றுள்ளன. இவ்வகையில், சாவெஸின் மறைவு வெனசுவேலாவுக்கு மட்டுமன்றி தென்னமெரிக்காவின் முற்போக்குச் சக்திகளுக்கும் இடதுசாரி அரசுகட்கும் மனதளவில் ஒரு சோர்வைக் கொடுத்திருக்கிறது.

அல்பா (ALBA) என்னும் அமெரிக்காவிற்கு மாற்றான பொலிவாரிய அமைப்பு, அமெரிக்காவுக்கும் அதன் கூட்டாளிகளுக்கும் எதிரான வலுவான அமைப்பாக பிராந்திய ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் கட்டிவளர்க்க முன்னிற்கிறது. அதை உருவாக்கித் தலைமைத்துவத்தை வழங்கியதில் சாவெஸின் பங்கு முதன்மையானதும் முக்கியமானதுமாகும்.

உலக எண்ணெய் உற்பத்தியில் வெனசுவேலா மூன்றாமிடத்தில் உள்ளது. அதன் பொருளாதாரத்தின் மையப்புள்ளியாக எண்ணெய் உள்ளது. நீண்டகால நோக்கில் தன்னிறைவுப் பொருளாதாரத்தையும் நட்பு நாடுகளுடன் -- குறிப்பாகத் தென்னமெரிக்க நாடுகளுடன்-- இணைந்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது அவசியம். ஏனெனில் எண்ணெய் ஏற்றுமதியை மட்டுமே நம்பிப் பொருளாதாரம் இருக்குமிடத்து அது ஆபத்துக்களைச் சந்திக்கும் வாய்ப்பு அதிகம். உலகப் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த 2009இல் வெனசுவேலாவில் சிறிதளவு நிதிநெருக்கடியும் பணவீக்கமும் ஏற்பட்டன. உலகச் சந்தையை மையப்படுத்திய ஏற்றுமதியில் தங்கியுள்ள பொருளாதாரங்கள் அனைத்துமே நிதிப் பிரச்சனைகளை எதிர்கொள்ள நேரும். எனவே எண்ணெய் ஏற்றுமதியில் தங்கியிராத வலுவான தேசிய பொருளாதாரமொன்றை உருவாக்க வேண்டியுள்ளது.

இன்னமும் வெனசுவேலாவின் வளத்தில் கணிசமான அளவைப் பெருமுதலாளிகளும் நிலப்பிரபுக்களும் கட்டுப்படுத்துகிறார்கள். மக்களுக்கான தூரநோக்கிலான திட்டங்கள் அவசியம். அவற்றை நிறைவேற்றுகையில் எதிர்ப்புரட்சிச் சக்திகள் சும்மா இருக்கப் போவதில்லை. அனைத்தினும் மேலாகப், பொருளாதார நெருக்கடி கூடுகையில் வளங்களைச் சூறையாடும் நிலைக்கு ஏகாதிபத்தியங்கள் தள்ளப்படுகின்றன. அவ்வகையில், வெனசுவேலாவின் எண்ணெய் வளம் அமெரிக்காவின் கண்களை உறுத்துகிறது.

தென்னமெரிக்காவின் இடதுசாரி அலையைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்து முயன்று வந்துள்ளது. 2009 இல் ஹொண்டுராஸில் வெற்றிகரமான ஆட்சிமாற்றமொன்றை அமெரிக்கா சதிப்புரட்சி மூலம் நடத்தியது. கடந்த யூலை மாதம் பரகுவேயின் இடது சார்பு ஜனாதிபதி பதவி நீக்கப்பட்டார். அமெரிக்கா தன் கொல்லைப்புறத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புகிறது. ஆனால் தென்னமெரிக்கா வேகமாக மாறிவருகிறது. அமெரிக்கா நாளை வெனசுவேலாவில் ஒரு சதியை அரங்கேற்றாதென உத்தரவாதம் இல்லை. அதனாலேயே, வெனசுவேலாவின் உழைக்கும் மக்களும் வெகுசன இயக்கங்களும் ஒன்றுபடவும் அமைப்பாக இணையவும் வேண்டிய தேவை உணரப்படுகின்றது. இவை வெனசுவேலாவிற்கு மட்டுமல்லாது, அனைத்துத் தென்னமெரிக்க நாடுகளிலும் அவசரமானதும் அவசியமானதுமாகும்.

தென்னமெரிக்க மக்கள் விழிப்புற்றுவிட்டனர். அவர்கள் தங்கள் உரிமைகட்காகப் போராடத் தொடங்கி விட்டனர். அதை இயலுமாக்கியவை தென்னமெரிக்க நாடுகளில் உருவான இடதுசாரி அரசாங்கங்களே. அவை ஏகாதிபத்திய எதிர்ப்பை முன்னிலைப்படுத்தி நவதாராளவாதத்தை நிராகரிக்கின்றன. வளங்களும் சேவைகளும் தேசியமயமாக்கப்பட்டு அரசுடைமையாகின்றன. சர்வதேச நாணய நிதியம் தென்னமெரிக்காவில் தனது கோரப் பிடியை இன்று இழந்துவிட்டது. இவை இன்று நாம் காணும் முக்கிய மாற்றங்களாகும். சாவெஸ் முன்மொழிந்த 'பொலிவாரிய வழிமுறை' முக்கியமான திருப்புமுனையில் நிற்கிறது. வெனசுவேலாவினதும் தென்னமெரிக்காவினதும் எதிர்காலத்தைத் அது தீர்மானிக்கக்கூடும்.

உலகோன்

# 40வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தேசிய கலை இலக்கியப் பேரவை

இவ்வாண்டு தேசிய கலை இலக்கியப் பேரவை தனது நாற்பதாவது ஆண்டிற் கால் பதிக்கிறது. யாழ்ப்பாணத்திற் தோன்றிய பேரவையின் இலக்கியக் கோட்பாடும் கொள்கையும் நிறுவனமுறையும் நாடுதழுவியன. சமூக மாற்றத்திற்கான கலை இலக்கியத்தை மக்களுடன் இணைக்கும் மக்கள் கலை இலக்கியக் கோட்பாட்டைத் தன் பயண இலக்கான "புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய பண்பாடு" எனும் இலக்கிய முழக்கமாக முழு நாட்டி




ற்கும் உரிதாக்கிய பேரவை, விரிவுபெற்றுக் கொழும்பிலும் மலையகத்திலும் பிற பகுதிகளிலும் இன்று வெற்றிகரமாக இயங்குகிறது. பல சவால்கட்கும் சமூக நெருக்கடிகட்கும் இன்னல் இடர்கட்கும் மனித அவலங்கட்கும் நடுவே தனது 40வது ஆண்டைக் கடக்கும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் இதுவரையான பணிகள் திண்மமானவை. அதன் உறுதியான கலை இலக்கியக் கொள்கையும் பொருள், புகழ், பட்டம்பதவி நாட்டமின்றித் தன்னடக்கத்துடனும் சுயநலமின்றியும் அமைப்பு முறையில் அக் கொள்கையை முன்னெடுத்தோரின் அர்ப்பணிப்புமிக்க கூட்டு உழைப்புமே அதை இயலுமாக்கின.

பழமைவாதத்திற்கும் பிற்போக்குச் சிந்தனைக்கும் எதிரான போராட்டங்கள் மூலம் தேசிய கலை இலக்கியப் பேரவை இலங்கையின் நம்பகமான ஒரே மக்கள் இலக்கிய இயக்கமாகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளது. இலக்கியத்தைச் சமூக நீதிக்கும் விடுதலைக்கும் சமுதாயத்தை மாற்றுவதற்குமான கருவியாக வலியுறுத்தித் தூய இலக்கியம், தூய அழகியல் எனும் பொய்மைகளை முறியடித்து இலக்கியம் மக்களுக்கானதே என்பதைப் படைப்பியல், விமர்சனத் தளங்களில் நிலைநாட்டுவதிற் பேரவை இலங்கையில் முதன்மையான பங்களித்ததுள்ளது.

போராக வடிவெடுத்த பேரினவாத ஒடுக்குமுறையாலும் ஏகாதிபத்திய உலகமயமாக்கலாலும் நாடு பாரிய சீரழிவுகளை எதிர்நோக்கிய நிலையிற், புதிய சவால்கட்கு முகங்கொடுத்த பேரவை, தொடர்ந்தும் குறுகிய தேசியவாதச் சிந்தனைகட்கும் ஆயுதக் கலாச்சாரத்துக்கும் சனநாயக மறுப்புக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளதுடன், பழமைவாதம், சாதியம், ஆணாதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராகவும் விடாது போராட வேண்டியுள்ளது.

இலங்கைச் சூழலில் மக்களின் அரசியற் செயற்பாட்டை முடக்க ஏகாதிபத்திய உதவியுடன் அறிமுகமான பின்நவீனத்துவத்தின் முன் ஆய்வறிவாளர்கள் சிலர் மண்டியிட்டபோது, இலங்கைத் தமிழ்க் கலை இலக்கியப் பரப்பிற் பின்நவீனத்துவத்தை முற்றாக முறியடித்த தேசிய கலை இலக்கியப் பேரவையின் சாதனை முக்கியமானது.

ஏகாதிபத்திய உலகமயமாதற் கருத்தியலையும் அதையொட்டிய பண்பாட்டுச் சீரழிவையும் படைப்பிலக்கிய, சமூக ஆய்வுத் தளங்களிலும் கல்வியியலிலும் எதிர்த்துப் போரிடுவதிலும் பசப்பான பெண்ணியத்திற்கு மாறாக வர்க்கச் சிந்தனை வழிப்பட்ட பெண் விடுதலையையும் "தலித்தியம்" எனும் சாதியச் சிந்தனைக்கு மாறாகச் சாதிய எதிர்ப்பு, சாதி ஒழிப்பு எனும் மக்கள் போராட்டச் சிந்தனைகளையும் முன்நிறுத்துவதிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, சுயநிர்ணயம், ஒடுக்குமுறைகட்கு எதிரான விடுதலைப் போராட்டங்கள் என்பனவற்றை வலியுறுத்துவதிலும் பேரவை பெரும் பங்காற்றி வந்துள்ளது.

பேரவையின் பணிகளின் பயனாகப், பேர்வையின் பயணத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வல்ல இளந்தலைமுறைப் படைப்பாளிகளும் விமர்சகர்களும் செற்பாட்டாளர்களும் உருவாகியுள்ளனர். இசை, நாடகம் ஆகிய துறைகளில் தேசிய கலை இலக்கியப் பேரவை வேறும் பலவழிகளிலும் புதிய கலைஞர்களின் வளர்ச்சியை ஊக்குவித்து வருகிறது.

தேசிய கலை இலக்கியப் பேரவை ஈழத்து இலக்கியப் பரப்பில் மிகவும் ஆழமாகப் பதித்துக் கொண்ட பணி, நூல் வெளியீடாகும். பேரவை இதுவரை நூற்றிப்பதினைந்து தரமான நூல்களை வெளியிட்ட பெருமையுடன் நிற்கிறது. ஒரு இலக்கிய அமைப்பு தனித்து இலங்கையில் இத்தனை நூல்களை வெளியிட்டமைக்கும் மேலாக எல்லோரது கவனத்தையும் ஈர்த்தவை நூல்களின் சிறப்பியல்புகளாகும். நூலுருப் பெறும் ஆக்கத்தின் தரம், பன்மைப்பட்ட இலக்கியக் கூறுகளை உள்ளடக்கல், நாட்டின் சகல பிரதேசங்களையும் பிரதிநிதித்துவம் செய்யுமாறு அமைந்திருத்தல் என்பன பற்றிக் காட்டப்பட்ட கவனிப்பாகும். சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், நாடகங்கள், தமிழாக்கங்கள், விமர்சனங்கள், கட்டுரைகள் என இந் நூல்கள் பரந்து நிற்கின்றன.

கடந்த நான்கு தசாப்த காலத்திற் பேரவை காத்திரமான பணிகளை கலை இலக்கியச் சவால்கள், நிதி நெருக்கடிகள், சமூகத் துயரங்கள், அரசியல்-யுத்தக் கொடூரங்கள், மனித அவலங்கள், வீண் உயிரிழப்புக்கள் என்பன நடுவே கடும் எதிர்நீச்சலிட்டு முன்னெடுத்து வந்துள்ளது. அப்பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவிய பிரதான காரணங்கள் இரண்டு. ஒன்று தேசிய கலை இலக்கியப் பேரவையின் கலை இலக்கியக் கொள்கை. மற்றது அக் கொள்கையை அமைப்பு வாயிலாக முன்னெடுத்தவர்களின் அர்ப்பணிப்பு மிக்க கடும் உழைப்பைக் கொண்ட கூட்டு முயற்சி. அந்த உழைப்பு, சுயநலம், பொருள்தேடல், புகழ் நாட்டம், பட்டம் பதவி பெறல், தனிமனித வெற்றிப் புலம்பல் போன்றவற்றுக்கு அப்பால் தன்னடக்ககமும் சமூக அக்கறையும் கொண்ட கனதிமிக்க கலை இலக்கியப் பங்களிப்பாக இருந்து வந்துள்ளது. மக்கள் கலை இலக்கியக் கோட்பாட்டை உயர்த்திப் பிடித்துத் தேசிய கலை இலக்கியப் பேரவை ஆற்றிய பன்முகப் பணிகளையும் பங்களிப்புகளையும் அதில் பங்கெடுத்தவர்களையும் இத்தருணத்தில் தேசிய கலை இலக்கியப் பேரவை நன்றியுடன் நினைவுகூர்கிறது.

தேசிய கலை இலக்கியப் பேரவை பின்வரும் விடயங்களை இனிவரும் காலங்களில் செயற்படுத்த முனைப்புடன் உள்ளது.

- தேசிய இனப் பிரச்சனை மோசமாகி வருகையில், ஏகாதிபத்திய உலகமயமாதற் பின்னணியில் நாட்டில் அந்நிய மேலாதிக்கம் வலுப்பட்டு, மக்கள்மீது பாரிய பொருளாதாரச் சுமைகளும் அரச அடக்குமுறையும் குவிகின்றன. எனவே பேரவை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, பேரினவாத எதிர்ப்பு, போர் நிறுத்தம், தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வு என்பனவற்றை அழுத்தித் தன் பணிகளை முன்னெடுக்க எதிர்பார்க்கிறது.

- சாதிய உற்பத்தி-உறவுகளையும் வெளிவெளியான சாதியத்-தீண்டாமையையும் போராடி விழுத்தியும் சமூகத்திற் தொடர்கிற சாதியச் சிந்தனை, தேசிய இன விடுதலைக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புக்குமான போராட்டங்களைப் பலவீனப்படுத்துவதுதால், தலைமறைவாயுள்ள சாதியத்தை அம்பலப்படுத்திச் சாதிவெறியர்களைத் தனிமைப்படுத்துவது முக்கியமாகிறது. அதற்கான வேலைத்திட்டங்களை பேரவை முன்னெடுக்கும்

- மரபின் பெயரிலும் பழைமைவாதத்தினூடும் ஆணாதிக்கம் தொடர்கிறது. பெண்ணுரிமையை வர்க்கச் சார்பற்றதாக்கித் தனிமைப்படுத்தலைத் தவிர்க்க, உரிமைப் போராட்டங்கள் அனைத்திற்கும் ஆண்-பெண் சமத்துவத்தை முன்நிபந்தனையாக்கிக் கலை இலக்கிய பண்பாட்டுத் தளங்களில் பெண் விடுதலைச் சிந்தனையைப் பேரவை முன்னெடுக்கிறது.

- வர்க்கம், வர்க்கப் போராட்டம் என்பவற்றை மறுக்கும் பின்நவீனத்துவச் சிந்தனைகள் தோற்ற போதும், அவை, கருத்தியல் மட்டத்தில், விதேசிய என்.ஜி.ஓக்கள் மூலம் பல்வேறு தளங்களிற் தூண்டப்படுவதாற், பண்பாட்டு, கருத்தியல் தளங்களில் அவற்றுக்கெதிரான முயற்சிகளைப் பேரவை தொடரும்.

- உலகமயமாக்கலின் விளைவாயும் பழைமையின் பெயராலும் நவீனத்துவத்தின் பெயராலும் தமிழ்ப் பேசும் மூன்று தேசிய இனங்களதும் கலை இலக்கியத் துறைகளும் பண்பாடும் தொடர்ந்து சீரழிகின்றன. அவற்றை எதிர்த்துப் போராடத், தரமான ரசனை, நல்ல வாசிப்பு, கூட்டுமுயற்சி கொண்ட கலை இலக்கிய ஆக்கங்கள் என்பனவற்றை இளைய தலைமுறையினர் நடுவே தீவிரமாகப் பேரவை முன்னெடுக்கும்.

- செத்துவிட்டது எனப்பட்ட சோஷலிஸம் சாகவில்லை. ஓய்ந்ததெனப்பட்ட வர்க்கப் போராட்டம் ஓயவில்லை. அவை, ஏகாதிபத்தியத்திற்கும் பிற்போக்குச் சக்திகட்கும் பதிலடி கொடுத்துப், பல்வேறு அளவுகளில் வென்றுவரும் உண்மை மக்களிடமிருந்து திட்டமிட்டு மறைக்கப்படுகிறது. சமகால உலகில் மக்கள் இயக்கங்கள் பெற்றுவரும் வெற்றிகளையும் ஏற்படுத்தும் மாற்றங்களையும் பற்றி மக்கள் தெளிவாக அறியுமாறு படைப்பாளிகள் அத் தகவல்களையும் நீதிக்காகப் போராடும் உலக மக்களின் போராட்டக் கலை இலக்கியங்களையும் அவர்கட்கான ஆதரவையும் இலக்கியத்திற் பதியவும் பேரவை உறுதி பூண்டுள்ளது.

– தெ. ஞா. மீநிலங்கோ –

## மாக்சியத்தின் வழி நிற்போர் மகத்தானவர்

தோழரே!
உமக்கும் எனக்கும் என்ன உறவு?
உம்மறைவு கண்டு நானேன் துடித்தேன்?
உம்முடலை நானேன் சுமந்தேன்?
உமக்கேன் செங்கொடியைத் தாழ்த்தினேன்?
புரட்சிகர சல்யூட் செய்தேன்?

ஏனெனில்,
நீர் உண்மையாய் வாழ்ந்தவர்
உதாரணமாய் வாழ்ந்தவர்
மனிதனாய் வாழ்ந்தவர்
மக்களுக்காய் வாழ்ந்தவர்.

பலரது வெற்றுடல் சுமந்து செல்கையில்
பலர் ஊர்வலத்தின் பின் வரிசையில்
வாழ்ந்த போது செய்த அட்டூழியங்களை வசைபாடி
கலைவர்
சிலரது உடலை சுமந்து செல்கையில்
உண்மை உறவாய் தவித்து - இழந்தது
மனிதரையல்ல மகத்தான மாணிக்கத்தை என்றல்லோ
புலம்பி, அவர் வாழ்வை உதாரணமாக்கி தானும் வாழ
எண்ணுவர்
அவ் வரிசையில் ,
நாமும் தடுமாறுகின்றோம் உம் இழப்பால்!

தழும்புகள் பெற்ற வீரனே!
மாக்சியத்தின் வழி நிற்போர்
மகத்தானவர் என
மார்தட்ட பொருத்தமானவர்களில்
நீரும் ஒருவரானீர்.!

நீர் தந்த அனுபவங்களை
மகிழ்வாய் மாற்றவும்
நீர் எடுத்த புரட்சிகரப் பாதையை
செழுமைப்படுத்தவும்
செங்கொடி உயர்த்தி
உறுதி பூணுகின்றோம்.

மாக்சியத்தின் வழி நிற்போர்
மகத்தானவர் என
மார்தட்ட பொருத்தமானவர்களில்
நீரும் ஒருவரானீர்.!

செ.மோகன்ராஜ் - மாத்தளை

## சொல்லுஞ் செயலும் பொய்யும் புரட்டும்

தேசத்தை நேசிப்போர், அல்லாதோரென
இருபிரிவைக் கொண்ட இனங்களே
இங்கிருக்கின்றனவென்று
அன்றொரு பொழுதில் நீயுரைத்த வார்த்தைகளில்
அகமகிழ்ந்தேன்.

பின்னதான நாட்களில்
அனல்மின் நிலையமென்றும்,
அபிவிருத்திப் பணியென்றும்
ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை
அந்நியனுக்குத் தாரைவார்த்த செய்தி
என் செவிகளில் விழுந்தபோது- நீயும்கூட
இத்தேசத்தை நேசிக்கத் தெரியாதவன்
என்பதுணர்ந்தேன்.

உழைப்போன் நிலம் பறித்து,
ஒவ்வாத வளம் திணித்து
எவ்வளவோ நீ செய்திடினும் ஏற்றமில்லை
இங்க எம்மவர்க்கு!

## அறியாமை இருள் . . ."

கொடுமாயுதங்கள் கொண்டு
குழந்தை, குமரி, கிழடென பேதம் பாராது
குருதி தெறிக்க கொன்று குவித்து
வென்று களித்ததுதான்
வெற்றியென நீ நினைத்தால்,
இன்றின் பொழுதுகளில் இன்பங்கொள்
நீ வாகை சூடியதாய்!

எனினும்,
மானுடம் ஜெயிக்குமந்த மாற்று உலகத்தில்
இனமென்றும், சாதி- மதமென்றும்
மனிதரைப் பிரித்தாண்ட குற்றத்திற்காய்
வரலாறுன்னை தண்டிப்பதைத் தவிர்த்துவிட
இயலாது!

-மாக்ஸ் பிரபாஹர்







**புதிய நீதி** சில தவிர்க்கவியலாத சூழலால் புதிய நீதி மூன்று மாத இடைவெளியில் வெளிவருகிறது வாசகர்கள் மன்னிப்பார்கள் புதிய நீதி தொடா ந்தும் வெளிவர வாசகர்கள், சந்தாதா ரர்கள், விற்பனையாளர்கள், நிதிப்பங்களிப்பு வழங்குவோர் ஆகியோரது ஆதரவை புதிய நீதி வேண்டி நிற்கிறது. மேலும் பத்திரிகைக்கான கட்டுரை கள், செய்திகள், விமர்சனங்கள், கவிதைகள், படங்கள் மற்றும் ஆக்கங் களை அனுப்பி வைக்குமாறும் வேண்டுகிறோம்.

தொடர்பு முகவரி.
ஆசிரியர் குழு.
புதிய நீதி.
121, ஹெம்டன் லேன், வெள்ளவத்தை, கொழும்பு-06.
தொ.பே: 0779 774 427, 0716 745 642
தொ.நகல்: *0112 473 759.*
மின்னஞ்சல்: *puthiyaneethi2012@gmail.com*
வங்கித் தொடர்பு: *K. Senthivel V. Mahendran, Commercial Bank, Grandpass Branch, A/C. No. 1570018335*
























புதிய- ஜனநாயக மாக்சிச- லெனினிசக் கட்சி யாழ்ப்பாணம், வவுனியா, அட்டன், நகரங்களில் நடாத்திய புரட்சிகர மேதின கூட்டங்களுள் பேரணிகளில் கலந்து கொண்ட கட்சி தோழர்களும் மக்களும்





வவுனியா நெடுங்கேணியில் ஏழு வயதுச் சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்த கயவனைத் தண்டிக்க கோரி மக்கள் அணிதிரண்டு எதிர்ப்பு ஆர்ப்பட்டம் செய்தனர்







2013.06.16 அன்று மாத்தளை தனியார் மண்டபத்தில், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சியின் மாத்தளைக்கிளை ஏற்பாடு செய்த மலையக எதிர்நோக்கும் அரசியல் சமூக பிரச்சினைகளும் எதிர்காலமும் என்னும் தொனிப்பெருளில் இடம்பெற்ற பகிரங்க அரசியல் கருத்தரங்கில் தோழர் சுரேன் தலைமையுரையாற்றுவதையும் தோழர் ச.பன்னீர்செல்வம், தோழர் சி.மோகனராஜன், தேசிய அமைப்பாளர் தோழர் வே.மகேந்திரன் மற்றும் பொதுச்செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் ஆகியோர் உரையாற்றுவதையும், பங்கு பற்றிய மக்களின் ஒரு பகுதியினரையும் காணலாம்.








29-04-2013 அன்று தொல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு முன்னால் வலி வடக்கு இடம் பெயர்ந்த மக்களால் நடாத்தப்பட்ட மறியல் போராட்டம் பற்றிய படங்கள்.

வெளியிடுபவர்–வெ. மகேந்திரன், இல.15/4, மகிந்தாராம வீதி, கல்கிஸ்சை, அச்சிடுபவர்–கொம் பிரிண்ட் சிஸ்ரம், ½, டயஸ் பிலேஸ், கொழும்பு–12